# தீவிரமான தலைவர்களை உருவாக்கும் பயிற்சி

சிறு குழுக்களிலிருந்து தேர்ந்து எடுக்கப்பட்ட தலைவர்களை, கிறிஸ்துவின் சபையை கட்டும் இயக்கத்தில் ஈடுபடுத்துதல்.

தானியேல் பி. லாண்காஸ்டர்

T4T Press

தலைவர்களை உருவாக்கும் தீவிரமான பயிற்சி

*சிறு குழுக்களிலிருந்து தேர்ந்து எடுக்கப்பட்ட தலைவர்களை, கிறிஸ்துவின் சபையை கட்டும் இயக்கத்தில் ஈடுபடுத்துதல்.*

தானியேல் பி. லாண்காஸ்டர்

முதல் வெளியீடு: 2012

All rights reserved. No part of this book may be reproduced or transmitted in any form or by any means, electronic or mechanical, including photocopying, recording or by any information storage and retrieval system, without written permission from the author, except for the inclusion of brief quotations in a review.
Copyright 2012 by Daniel B. Lancaster

ISBN 978-0-9831387-0-9 printed

All scripture quotations, unless otherwise indicated, are from the HOLY BIBLE, NEW INTERNATIONAL VERSION®, NIV® copyright © 1973, 1978, 1984 by International Bible Society. Used by permission of Zondervan. All rights reserved.

Scripture quotations marked (NLT) are from the Holy Bible, New Living Translation, Copyright © 1996, 2004. Used by permission of Tyndale House Publishers, Inc., Wheaton, Illinois, 60189. All rights reserved.

Scripture quotations marked (NASB) are from the NEW AMERICAN STANDARD BIBLE ®, Copyright © 1960, 1962, 1963, 1968, 1971, 1972, 1973, 1975, 1977, 1995 by The Lockman Foundation. All rights reserved.

Scripture quotations marked (HCSB) are from the Holman Christian Standard Bible® Copyright © 1999, 2000, 2002, 2003 by Holman Bible Publishers. All rights reserved.

Scriptures quotations marked (CEV) are from the Contemporary English Version Copyright © 1995 by American Bible Society. Used by permission.
Library of Congress Cataloging-in-Publication Data

# உள்ளடக்கம்


உள்ளடக்காம்

ஆசிரியர் விளக்கம்

வெளிப்படையான அங்கீகாரம்

முகவுரை

**பகுதி 1 : நட்டும் தாழ்பாளும்**

இயேசுவின் செயல்முறை

தலைவர்களுக்கு பயிற்சி

பயிற்சி கொள்கைகள்

**பகுதி 2 : தலைமைத்துவ பாடங்கள்**

நல்வரவு

இயேசுவை போல பயிற்சியளி

இயேசுவை போல வழிகாட்டு

பலப்படு

ஒன்றித்து பலன்கோள்

சுவிசேஷத்தை பகிர்ந்துகொள்

சீடர்களை உருவாக்குதல்

குழுக்களை துவக்குதல்

குழுக்களை பெருக செய்தல்

இயேசுவை பின்பற்று

**பகுதி 3 : வளம்**

பின் இணைப்பு 1 - அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

பின் இணைப்பு 2 - பயிற்சி சரி பார்க்கும் பட்டியல்

பின் இணைப்பு 3 - மொழிபெயர்ப்பாளரின் குறிப்பு

பின் இணைப்பு 4 - என் இயேசுவின் திட்டம்

டாமின் நினைவாக

# வெளிப்படையான அங்கீகாரம்

ஒவ்வொரு பயிற்சி புத்தகமும் வாழ்க்கையில் கற்ற பாடங்களின் தொகுப்பாகும். *இயேசுவை பின்பற்று பயிற்சி தொடர்* அதை போன்றதே. என்னக்கு பயிற்சி செய்த தலைவர்களுக்கு நான் மிகவும் நன்றிக் கடன் பட்டிருக்கிறேன். இதனால் நான் மற்றவர்களுக்கு பயிற்சி அளிக்க முடியும்.

தெற்கு கிழக்கு ஆசியாவில் பல நண்பர்கள் என்னோடு சேர்ந்து இந்த தலைமைத்துவ பயிற்சி கைநூலை உருவாக்க உதவினார்கள். கில்பர்ட், தாவீது, ஜெர்ரி வ்ஹிட்பில்து, கரைக் கர்ரிசொன், ஸ்டீவ் ஸ்மித், நீல் மிம்ஸ், மற்றும் வூடி & லின் தின்க்பேன் உங்கள் எல்லோரையும் உள்ளுணர்வுகள், உதவி மற்றும் துணைக்காக நன்றி கூறுகிறேன். நாம் இந்த பயணத்தை பல வருடங்கள் சென்று நடத்திருக்கிறோம்.

பல ஆன்மீக தலைவர்கள் குயப்பித்தக்க அளவிற்கு எனது வாழ்கையில் தாக்கம் ஏற்படுத்தியிருக்கிறார்கள், அவர்களுக்கு நன்றி செலுத்த விரும்புகிறேன். நான் ஆண்டவரை எவ்வாறு முழு இதயத்தோடு நேசிப்பது என்பதை கலாநிதி ரிக்கி பாரிஸ் கற்றுக்கொடுத்தார். எனது புனித பயணத்தில் கடினமான சமயத்தில், கய்லோனே லேன், எல். டி. பக்ஸ்லி மற்றும் டாம், அவர்களது நிபர்ந்தனயற்ற அன்பினாலும், ஆன்மீக தலைமைத்துவத்தினாலும் எனக்கு ஒரு மாதிரியாக இருந்தார்கள். ஆண்டவர் என்னில் இட்ட ஊழியத்திர்கான அக்கினியை கலாநிதி எல்வின் மெக்கான் உற்சாகப்படுத்தினார். ஒழுங்கமைப்பு சீர்மை மற்றும் உத்திகளை பற்றி கலாநிதி நிக் ஒல்சொன் அவர்கள் கற்றுத்தந்தார். இயேசு கிறிஸ்துவை எனக்கு கலாநிதி போன் ஸ்மித்து அறிமுகம் செய்தார், அந்த நாளிலிருந்து அவர் எனக்கு ஒரு ஆத்ம நண்பன் ஆனார். ஊழியத்தின் ஆரம்ப நாட்களில் சீடர்களை பெருக்க வேண்டும் என்ற நோக்கத்தை கலாநிதி ராய் பிஸ் இட்டார். "மிக சிறந்து தலைவன், ஓர் மிக சிறந்த வேலையாள்" என்பதை மரியாதைக்குரிய ரான் காப்ஸ் கற்பித்தார். எனக்கு பயிற்சி அளித்த எல்லோருக்கும் மிகவும் நன்றி. இதனால் நான் மற்றவர்களையும் கற்பிக்கலாம்.

டாம் வேல்ஸ் எங்களது இரண்டாவது சபையில் ஆராதனை நடத்தும் தலைவராக இருந்தவர். அவர் ஒரு ஆசீர்வதிக்கப்பட்ட வித்துவான் மற்றும்

ஒரு நல்ல நண்பன், இயேசுவின் எட்டு வடிவங்களை பற்றி நாங்கள் பலமுறை உரையாடியிருக்கிறோம். அவர் உதவியோடு *தலைவர்களை உருவாக்கும் தீவிரமான பயிற்சி* புத்தகத்தில் உள்ள மனோபாவங்களை எளிதான முறையில் கண்டுபிடிக்க உதவினார். இயேசுவின் எட்டு வடிவங்களின் அடிப்படையில் நாங்கள் பல ஊழியங்களை உருவாக்கி மற்றும் சபையை ஒழுங்குபடுத்தினோம். உள்ளூரில் உள்ள சபைகளுக்கு நாங்கள் சபைகளின் நலத்தை பற்றி ஆலோசனை அளித்தோம். நீ இப்போது ஆண்டவரோடு இருக்கையிலும், உனது கிரியைகள் நின்று விடவில்லை. உனது ஞாபகம் எங்களுக்கு எப்போதும் உள்ளது.

இந்த திட்டபணியில் உதவிய தாவீது மற்றும் ஜில் ஷன்க்ஸ்சிர்கு நான் மிகவும் நன்றி கூறுகிறேன். அவர்களுடைய பெருந்தன்மையினால் ஆசியா கண்டத்தில் பல மக்கள் தலைவர்களாகவும், சீடகளாகவும், சபைகளை துவங்கவும் மிகவும் உதவினார்கள். அவர்களுக்கு "மிகவும் நன்றி" என்று சொல்வதற்கு சொர்கத்தில் மிக நீளமான வரிசை இருக்கும்.

இறுதியாக, எனது குடும்பம் இந்த புத்தகத்தை உங்களுக்கு ஒரு பரிசாக அளிக்கிறது. ஹோல்லி, எனது மனைவி, மற்றும் எனது பிள்ளைகள், ஜெப், சாக், காரிஸ், மற்றும் ஜேன், எல்லோரும் இந்த புத்தகத்தை வெளியிட மிகவும் தியாகம் மற்றும் ஆதரவளித்தார்கள். இதனால் ஆர்வமுள்ள, ஆன்மீக தலைவர்களையும், தேசங்களுக்கு நலமும் உண்டாகிறது.

தானியேல் பி. லாண்காஸ்டர்

தென் கிழக்கு ஆசியா

# முகவுரை

ஆண்டவராகிய தேவன் இரு சபைகளை அமெரிக்க தேசத்தில் துவங்கும் பாக்கியத்தை தந்தார். சபையானது ஹாமில்டன், டெக்சாஸ் என்ற கிராம புறத்திலும் நிறுவப்பட்டது. இரு நூறு பேர் அமரக்கூடிய சபையை கடனில்லாமல் நிறுவ கர்த்தர் கிருபை பராட்டினத்தை நினைத்தால் இதயம் களிகூருகிறது. தேவன் ஹாமில்டன்னை நினைவு கூர்ந்து எங்களது வாழ்வை மாற்றினார்.

எங்களது இரண்டாவது சபையை லூவிஸ்வில், டேக்சேஸ்சில் துவங்கப்பட்டது. எனது துவக்கப் படிப்பும், மேற்படிப்பும் லூவிஸ்வில், டாலஸ் மற்றும் போர்ட் வொர்த் இடத்தில் உள்ள ஒரு கிராமத்தில் நடந்தது. எனது சபை, லேக்லாந்து பாப்டிஸ்ட், சபைகளை உருவாக்குவதில் எங்களது பணத் தேவைகளையும், ஆவிக்ககுரிய தேவைகளையும், சந்தித்தார்கள். எங்களது சபை அவ்விடத்தில் பதினெட்டாவது சபையாக நிறுவப்பட்டது. எங்களுக்கு இருந்த அனுபவத்தின் காரணமாக அங்கிருந்த மேயப்பர் எங்களை தனி குழுவின் உதவியை நாடாமல் தனி நபரின் உதவியை பெற்றுக் கொள்ள ஏவினார்கள்.

இரண்டு மாதங்களுக்கு பிறகு உடல் முழுவதும் அதிக வேதனையால் துன்புற்றேன். எனது நான்காவது குழந்தை பிறந்தவுடன், எனக்கு தோல்படை நோய் இருப்பதாக கண்டறியப் பட்டது. பலவிதமான நரம்பு, எலும்பு நோயினால் மிகவும் வாதிக்கப் பட்டேன். அதிக திறன் கொண்ட மருந்துகள் என்னை மயக்க நிலையில் ஆழ்த்தியது. இரண்டு மணி நேரம் மட்டுமே, என்னால் பனி செய்ய இயன்றது. மற்ற நேரம் எல்லாம் ஜெபத்திலும் ஓய்விலும் செலவழித்தேன்.

அந்நாட்கள் “ஆத்துமாவின் இருண்டகாலம்” என்றே சொல்லலாம். நான் பலவீனத்தில் இருந்த போதிலும் தேவன் என்னை சபை துவங்கவே அழைத்தார் என்பதை உணர்ந்து கொண்டேன். தேவனுடைய குறையாத அன்பு என் பலவீனத்தில் இருந்து நடத்தியது. தேவன் எங்களை விட்டு விட்டாரோ என்ற எண்ணம் ஏற்பட்ட போதிலும் தேவ அன்பு எங்களை தாங்கி நடத்தியது. தேவன் எங்களது விசுவாசத்தை அதிகரித்து இழந்து

போன ஆத்துமாக்களை தேவ குடும்பத்தில் சேர்ப்பதாக வாக்களித்தார். ஊழிய களத்திற்கு திரும்பி செல்லும் எண்ணம் மறைந்து ஒழிந்தது.

ஒரு புதிய சபையில் இரண்டு மணி நேரம் மட்டும் வேலை செய்வது கடினம். தேவன் எங்களை தீவிரமாக செயல்படும் தலைவர்களை உருவாக்கும் பணியில் திசை திருப்பினார். அடுத்த மாதத்திற்கு உரிய செயல் திட்டத்தை மதிய இடைவேளையில் ஒரு மணிநேரத்திற்குள் எடுத்துரைக்க கற்றுத்தந்தார். பயிற்சி பெற்றவர்கள்,கற்று கொண்ட பண்பாட்டை பிறருக்கு பகிர்ந்து அளித்தனர். தேவனை எவ்வாறு சார்ந்து வாழ்வது தேவன் நம்மை எவ்வாறு பற்றிக்கொண்டார் என்பதையும் எளிய நடைமுறை பாணியில் எடுத்துரைத்தோம். அனேக பெரியவர்களும் சிறுவர்களும் தேவ ராஜியத்தில் பிரவேசிக்க வழிவகை ஏற்படுத்தப்பட்டது.

மூன்று வருட உடல் பலவீனமும் கொடுக்கப்பட்ட மருந்துகளின் தன்மையும் எங்கள் இரவை பகல் ஆக்கியது. மேய்ப்பர் செய்யும் வேலைகளை தொடர்ந்து செய்யாமல், தலைவர்களை உருவாக்கும் பணியில் ஈடு பட்டோம். சபை துவங்கின நான்கு ஆண்டுகளுக்கு பிறகு. தெற்கு ஆசிய நாடுகளுக்கு ஒரு நண்பனுடன் பயணம் செல்ல நேர்ந்தது. தேவன் என் உள்ளத்தில் எங்கள் அழைப்பை வெளிப்படுத்தினார். எனது மனைவியுடன் தொடர்பு கொண்ட போது அவர்களும் அதையே தேவன் வெளிப்படுத்தினதாக அறிவித்தார். ஒரு வருடம் கழித்து நாங்கள் தெற்காசிய நாடுகளுக்கு பயணம் ஆனோம்.

நாங்கள் சிஷ்யர்களை உருவாக்கும் பணியை மத சுதந்திரம் இல்லாத தேசங்களில் துவங்கினோம். நாங்கள் மூன்று ஆண்களையும் மூன்று பெண்களையும், பேதுரு, யாக்கோபு, யோவான் போல தேவனை பின்பற்றி வாழுகின்றவர்களை எங்களுக்கு தர வேண்டும் என்று ஜெபம் பண்ணினோம். தேவன் ஜெபத்தை கேட்டு, எங்களுக்கு அவ்வாறே, பர்ணபாஸ் பவுலுக்கு பயிற்சி அளித்ததுபோல், மனிதர்களை தந்தார். பல சிறு குழுக்கள் சபையாக மாறினது. குழுக்களும் சபைகளும், வளர்ந்து பெருக, அபிஷேகம் பெற்ற தலைவர்கள் தேவை பெருகியது. நாங்கள் பணி புரிந்த தேசத்திலும் அபிஷேகம் பெற்ற தலைவர்கள் பற்றாக்குறை இருந்ததை உணர்ந்தோம். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து எவ்வாறு சிறந்த தலைவர்களை உருவாக்கினார் என்பதை ஆழமாக படிக்க

ஆரம்பித்ததோம். அந்த பாடங்களை எங்கள் தேச நண்பர்களுக்கு கற்றுகொடுத்த பொழுது, “சீடர்களை உருவாக்குவதும், தலைவர்களை உருவாக்குவதும்”, ஒரே நாணயத்தின் இரு பக்கமாக இருப்பதை அறிந்து கொண்டோம். சீடர்களை உருவாக்குதல் பயணத்தின் துவக்கமும் தலைவர்களுக்கு பயிற்சி அளித்து உருவாக்குதல் பயணத்தின் தொடர்ச்சி எனவும் கண்டுகொண்டோம். இயேசு கிறிஸ்துவை நாங்கள் பிரதிபலிக்க துவங்கிய போது, எங்கள் பயிற்சி வகுப்புக்கள் பிரயோஜனம் உள்ளதாக மாறுவதை உணர முடிந்தது.


திரும்பத் திரும்ப பயிற்சி வகுப்புக்களில் பயன் படுத்தக்கூடிய பாடங்களை ஒரு புத்தகமாக வெளியிடப்பட்டது. இயேசு கிறிஸ்து மிக வல்லமையான ஒரு தலைவராகவே எக்காலத்திலும் இருக்கிறார். அவரை பின்பற்றுபவரிடத்தில் அவர் வாழ்கிறார். நாம் அவரை பின்பற்றும் பொழுது. நாம் சிறந்த தலைவர்களாக மாறி விடுவோம். ஆண்டவராகிய தேவன் இந்த பயிற்சி புத்தகத்தின் வழியாக உன்னையும் உன்னால் ஊக்குவிக்கபெற்றவர்களையும் ஆசீர்வதிப்பாராக. இந்த புத்தகத்தின் வழியாக உருவாக்கப்பட்ட தலைவர்கள் சிறந்த தலைவர்களை உருவாக்கும் சந்ததியை எழுப்புவார்களாக. இதை செய்யும்போது தேவ ஆசீர்வாதம் உங்கள் மீது தங்க வேண்டும் என வேண்டிக் கொள்கிறோம்.

# பாகம் 1

## நட்டும் தாழ்பாளும்

# இயேசுவின் செயல்முறை

இயேசு கிறிஸ்து தேசங்களை சந்திக்க ஐந்து விதமான யுக்திகளை கையாண்டார். ஆண்டவரில் பெலன் கொள்ளுதல், சுவிசேஷத்தை அறிவித்தல், சீடர்களை உருவாக்குதல், சபையாக வளரக்கூடிய சிறு குழுக்களை உருவாக்குதல், தலைவர்களை உருவாக்குதல். தனித்தனியே செயப்பட்டு, ஒன்றாக இணைந்து முடிவிலே சிறந்த தலைவர்களாக




உருவாக்கும் முயற்சியில் ஈடுபடும். இயேசு கிறிஸ்துவின் வழிமுறைகளை பின்பற்றுவதனால் பயிற்சியாளர்கள் சிறந்த மாற்றத்தை உண்டு பண்ணி சபை உருவாக்கும் வல்லமையாளர்களாக மாறமுடியும்.

சுவிசேஷத்தை அறிவித்தல், பயிற்சியாளர்களை உருவாக்குதல், ஆண்டவருக்குள் பலப்படுத்தல் சீடர்களை உருவாக்குதல் குழுக்களை துவங்குதல்.

இயேசு கிறிஸ்துவை பின்பற்றும் பயிற்சியானது

தீவிரமான சீடர்களை உருவாக்கும் பயிற்சியில் துவங்குகிறது. சீடர்கள் எவ்வாறு ஜெபிப்பது என்பதை கற்றுக்கொள்ளுகிறார்கள், இயேசு கிறிஸ்துவின் கட்டளைகளுக்கு எப்படி கீழ்படிவது, மேலும் பரிசுத்த ஆவியின் வல்லமையில் நடப்பது ஆகிய காரியங்களை கற்றுக் கொள்ளுகிறார்கள். சீடர்கள் ஆண்டவரோடு எவ்வாறு இணைந்து செயல்படுவது எப்போது செயல்படுவது என்பதை கண்டு கொண்டு தங்கள்

சாட்சியம் பகிர்ந்து கொள்ளுகிறார்கள். அடுத்து அவர்கள் தேவனுடைய குடும்பத்திற்கு மக்களை அழைக்கிறார்கள். முடிவில் பயிற்சியாளர்கள் சிறு குழுக்களை உருவாக்கி, பெருகச்செய்யும் முயற்சியிலும், தங்களுடைய வாசஸ்தலங்களில் உள்ளவர்களையும் சந்திக்கும் முயற்சியிலும் ஈடுபடுகிறார்கள்.

வளர்ந்து வரும் சீடர்கள் இருவிதமான வினாக்களை எழுப்பினார்கள். உருவாகும் தலைவர்கள் ஆவிக்குரியவர்களாக மாறுவது எவ்வாறு என்றும், சிறு குழுக்களை சபையாக மாற்றுவது பற்றியும் அறிய விரும்பினார்கள். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து குறிப்பிட்ட எந்த ஒரு யுக்தியையும் தொடர்ந்து கற்பிக்கவில்லை. சில நபர்கள் தலைவர்களாக உருவாக்கும் பயிற்சியையும் பின் சபையை உருவாக்கும் பயிற்சியையும் விரும்பினார்கள். மற்றும் சிலர் மாறுபட்ட அணுகுமுறையை விரும்பினார்கள். அதன் விளைவாக தீவிரமாக சீடர்களை உருவாக்கும் படியாக. இரண்டு விதமான கருத்தரங்கை ஒழுங்கு செய்தோம்.

சில தீவிரமாக செயல்படும் சபைகளை மற்ற சபைகளை, குழுக்களை உருவாக்குவதிலும், சபைகளை நிறுவுதல் பணியிலும் உதவி புரிகிறார்கள். சில தலைவர்கள் தங்களது சபையில் உபயோகிக்கப்பட்ட அதே யுக்தியை புதிய சபைகளிலும் பின்பற்றி எதிர்பார்த்த முடிவை பெறவில்லை. அப்போஸ்தலர் பணி இரண்டாம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட எட்டு கட்டளைகளை கடைபிடிக்க கற்று தருவதை விட அதை கடை பிடிக்க கற்றுக்கொடுக்கும் நடைமுறை யுக்திகளை செயல்படுத்தும் ஒரு உடண்படிக்கையை வரையறுக்கிறார்கள். குழுவானது தேவனுடைய வழிநடத்துதலை உணரக்கூடுமானால் கருத்தரங்கு கொண்டாட்டத்திலும், புதிய சபை அற்பணிப்பிலும் முடிவுபெறும்.

தீவிரமாக செயல்படும் தலைவர்களை உருவாக்கும் முயற்சியானது ஆர்வமுள்ள ஆவிக்குரிய தலைவர்களை உருவாக்க வழிவகை செய்கிறது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் ஐந்தாவது யுக்தியாக இது கருதப்படுகிறது. சிறந்த தலைமையை ஏற்படுத்துவது சபை ஸ்தாபிப்பதின் முக்கிய அம்சமாகும். கருத்தரங்கு, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து எவ்வாறு சிறந்து தலைவராக வழிகாட்டியாக இருந்தார் என்பதையும் அவரது ஏழு குணதிசயங்களையும், எவ்வாறு சிறந்து தலைவராக

இருந்தார் என்பதையும் வெளிக்காட்டி உற்சாகப்படுத்துவதாக அமைந்துள்ளது. ஒவ்வொரு தலைவரும் தங்களது மனோபாவம் அறிந்து பிறருடன் ஒன்றாக இணைந்து பணி புரிய உதவி செய்கிறார்கள். பின், லூக்கா 10 அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆண்டவருடைய ஊழிய நெறிமுறைகளை அடிப்படையாகக் கொண்டு, “இயேசு கிறிஸ்துவின் திட்டம்“ ஒன்றை உருவாக்கினர். கருத்தரங்கு இயேசு கிறிஸ்துவின் திட்டத்தை பகிர்ந்து கொள்வதிலும் ஜெபத்திலும் புதிய ஆவிக்குரிய தலைவர்களை எழுப்புவோம் என்ற உறுதியுடனும் நிறைவு பெறுகிறது.

*“தீவிரமான சபைகளை துவங்குதல்”* மற்றும் *“தீவிரமான சீடர்களை உருவாக்குதல்“* என்பது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை பினபற்றுவது என்பதே. பயிற்சியாளர்கள் பயன் படுத்த்தக்கூடிய அணுகு முறைகளை மற்றவர்களுக்கும் கற்றுத் தருகிறார்கள். இயேசு கிறிஸ்துவின் பயிற்சி முறை என்பது கற்றுக்கொள்ள வேண்டியது அல்ல, மாறாக வாழ வேண்டிய ஒன்றே. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக எண்ணில்லாது மனிதர்களை தமது குமாரனை பின்பற்றுவதால் தேவன் ஆசீர்வதித்திருக்கிறார். விசுவாசிகள் இயேசுவை பின்பற்றி தங்கள் பண்பாட்டை மாற்றிக் கொண்டார்கள். தேவன் அதையே உங்கள் வாழ்விலும் உங்களால் பயிற்சி பெற்று இயேசுவை வாழ்வில் ஏற்றுக் கொண்டு பின்பற்றுகிறவர்களுடைய வாழ்விலும் நடப்பிப்பாராக.

# தலைவர்களுக்கு பயிற்சி

*தீவிரமான சீடர்களை உருவாக்குதல்* என்ற முதல் கட்ட முயற்சியின் மேல், *தலைவர்களை உருவாக்கும் தீவிரமான பயிற்சி* அமைந்துள்ளது. சீடர்கள் குழுக்களை துவங்கினார்கள், மேலும் தலைவர்களாக உருவாகவும், குழுக்களை பெருக்கவும் உதவியாக உள்ளது.

## பயிற்சியின் முடிவுகள்

பயிற்சி கருத்தரங்கு முடிவடைந்தபின், மாணவர்கள்:

- மற்ற தலைவர்களுக்கு 10 முக்கிய தலைமைத்துவ பாடங்களை கற்பிப்பார்கள்.
- மற்ற தலைவர்களுக்கு இயேசு பின்பற்றிய மேலும் பயன்படுத்தக்கூடிய வழிமுறைகளை கற்பிப்பார்கள்.
- பல விதமான மனோபாவங்களை புரிந்து கொண்டு, குழுவாக செயல்பட உதவுவார்கள்.
- தங்கள் சமூகத்தில் இழந்து போன ஆவிக்குரிய அனுபவங்களை புதிய செயல்திட்டத்தின் மூலமாக மேம்படுத்தி, குழுக்களை பெருகச்செய்தல்
- சபைகளை உருவாக்கும் இயக்கத்திற்கு எப்படி வழி காட்டுவது என்று புரிந்துகொள்வது

# பயிற்சி செயல்முறை

ஒவ்வொரு பயிற்சி வகுப்பும் ஒரே மாதிரியான செயல்முறையை பின் பற்றுகிறது. இயேசு தனது சீடர்களை தலைவர்களாக உருவாக்கிய பாணியை பின்பற்றப்படுகிறது. குறிப்பிட்ட இடைவேளைகளோடு ஒரு பொதுவான சுருக்கமான வருணனை தொடரும்.

## புகழ்

- தேவனை புகழ்ந்து இரண்டு பாடல்களை பாடவும்.

(10 நிமிடங்கள்)

## முன்னேற்றம்

- தலைவர் ஒருவர் கடந்த முறை சந்திப்பிற்கு பின் தனது ஊழியத்தில் உள்ள மேம்பாட்டை பகிர்ந்து கொள்ள வேண்டும். குழுவானது அந்த தலைவருக்காகவும், அவரது ஊழியத்திற்காகவும் ஜெபம் செய்ய வேண்டும்.

(10 நிமிடங்கள்)

## பிரச்சனை

- பயிற்சியாளர் ஒரு தலைமைத்துவ பிரச்சனையை ஒரு சிறு கதை மூலமாக அல்லது தனிப்பட்ட உதாரணத்துடன் அறிமுகப்படுத்துகிறார்.

(5 நிமிடங்கள்)

# திட்டம்

- பயிற்சியாளர், அந்த தலைமைத்துவ பிரச்சனைக்கு தீர்வுகாண வழிமுறைகளை எளிதான பாடத்தினால் கற்றுத்தருகிறார்.

(20 நிமிடங்கள்)

# செயல்பாடு

- தலைவர்கள் கற்றுக்கொண்ட பாடங்களை, நான்கு நபர் குழுக்களாக பிரிந்து கலந்துரையாட வேண்டும். அதோடு இவற்றையும் இணைக்க வேண்டும்:
    - தலைமைத்துவ பணியில் ஏற்பட்ட முன்னேற்றம்.
    - தலைமைத்துவ பணியில் சந்தித்த பிரச்சனைகள்.
    - கற்றுக் கொண்ட பாடத்தின் அடிப்படையில் அடுத்த 30 நாட்களுக்கான முன்னேற்றத்திட்டம்.
    - கற்றுக் கொண்ட பாடத்தின் அடிப்படையில் அடுத்த 30 நாட்களுக்கான உபயோகிக்க படுத்தக்கூடிய ஒரு யுக்தி.

- தலைவர்கள் நின்று கொண்டு வேதத்திலுள்ள மனப்பாட பகுதியை 6 முறை வேதத்தை படித்தும், 4 முறை பாராமலும் வசனத்தை அறிக்கை இடவேண்டும் (மொத்தம் 10 முறை)

(30 நிமிடங்கள்)

# ஜெபம்

- நான்கு நபர்களை கொண்ட குழுக்கள், தங்களது பிரச்சனைகளை பகிர்ந்து கொண்டு ஒருவருக்காக ஒருவர் ஜெபம் செய்வார்கள்.

(10 நிமிடங்கள்)

# இறுதி

- அநேகமாக வகுப்புகள், ஒரு கற்பிக்கும் செயல்பாடு மூலம் தாங்கள் கற்றுக் கொண்ட பாடங்களை தங்கள் சூழ்நிலைக்கேற்ப பயன்படுத்துவார்கள்.

(10 நிமிடங்கள்)

# பயிற்சி கொள்கைகள்

பிறரை தலைவர்களாக உருவாக்குவது என்பது உத்வேகமுள்ளதும், தேவை உள்ளதுமாக இருக்கிறது. பிரபலமான கருத்திற்கு மாறாக, தலைவர்கள் பிறப்பதில்லை, உருவாக்கப் படுகிறார்கள். அதிகமான தலைவர்களை உருவாக்க, பயிற்சியானது, சீராகவும், ஒழுங்காகவும் நடைபெற வேண்டும். சிலர் தங்கள் தனித்தன்மையால் தலைவர்கள் ஆனார்கள் என்ற தவறான எண்ணம் கொள்கிறார்கள். ஒரு கருத்தாய்வின் அடிப்படையில், அமெரிக்க நாட்டை சேர்ந்த பெரிய சபையின் மேய்ப்பர்கள், பல விதமான தனித்தன்மை உடையவர்களாக கண்டறியப்பட்டது. நாம் இயேசுவை பின்பற்றும் போது, உலகத்திலே மிகப்பெரிய தலைவரை பின்பற்றி, நாமும் அவரைப்போல் தலைவர்களாக மற்றப்படுகிறோம்.

எழும்பும் தலைவர்கள் பிறரை தலைவர்களை உருவாக்கும் பணியில், நற்பண்புள்ள அணுகு முறையை கொள்ள வேண்டும். நற்பண்புள்ள அணுகு முறையை என்பது, ஞானம், குணம், திறமை, மற்றும் ஊக்கம் என்பதை கொண்டது. இந்த நான்கு பண்புகள் உள்ளவன், வெற்றிகரமான தலைவராக மாற முடியும். ஞானம் இன்மை, தவறான கற்பனை, மற்றும் மனஸ்தாபம் உள்ளவன், தவறான திசையில் ஒரு தலைவனை திருப்பக்கூடும். நற்குணம் இல்லாத தலைவன், தார்மீகத்திலும், ஆவிக்குரிய வாழ்க்கையிலும் தவறு இழைப்பான், ஊழியத்திற்கு கேடு உண்டாக்குவான். திறமைகள் இல்லாத தலைவன், தவறான யுத்திகளை கையாளுவான். இறுதியாக, ஞானாம், குணம், திறமை உள்ளவன், ஊக்கம் இல்லாமல் இருந்தால், அவன் தனது அந்தஸ்த்தைப்பற்றி மட்டுமே சிந்தனை உடையவனாக இருப்பான்.

ஒவ்வொரு தலைவனும் தனது வேலைகளை முடிப்பதற்கான முக்கிய வழிமுறைகளை அறிந்திருக்க வேண்டும். ஜெபத்தில் அதிக நேரம் செலவு செய்து ஒரு தலைவன் தொலை நோக்கு பார்வை உடையவனாக இருத்தல் வேண்டும். “அடுத்து என்ன செய்ய வேண்டும்?” என்பதை, தொலை நோக்கு பார்வை ஆனது விளங்கச்செயய்யும். தலைவர்கள் அவர்கள் செய்வதின் நோக்கத்தை அறிந்திருக்க வேண்டும். “இது ஏன் முக்கியம்?” என்பதை நோக்கம் தெளிவு படுத்துகிறது. இந்த கேள்விக்கான

பதில் பல தலைவர்களை கடினமான பாதையில் நடத்தி சென்றிருக்கிறது. அடுத்ததாக, அவர்களது குறிக்கோள் அறிந்திருக்க வேண்டும். ஆண்டவர், தனது திட்டத்தை நிறைவேற்ற ஒரு சமூகத்தில் உள்ளவர்களை கூட்டி சேர்க்கிறார். குறிக்கோளானது, "யார் இந்த காரியத்தில் ஈடு பட வேண்டும்?" என்பதை தெளிவு படுத்துகிறது. இறுதியாக, சிறந்த தலைவர்கள், தெளிவான, சுருக்கமான குறிக்கோள்களை பின்பற்றுகிறார்கள். சாதரணமாக, ஒரு தலைவன் தனது நோக்கத்தையும், இலக்கையும், நான்கு அல்லது ஐந்து குறிக்கோள்களாக பகிர்ந்துகொள்வான். "நாம் எப்படி செயல் படுவது?", என்பதை குறிக்கோள் எடுத்துரைக்கிறது.

ஒரு குழுவிலிருந்து வெளிப்பட்டுக்கொண்டிருக்கும் தலைவர்களை தேர்ந்து எடுப்பது கடினம் என்பதை கண்டறிந்தோம். தேவனுடைய தெரிந்து கொள்ளுதல் ஆச்சரியமானவை! ஒவ்வொரு நபரையும் தலைவராக பாவித்து நடத்துதல் பயன் உள்ளதாக அமையும். ஒவ்வொரு நபரும் தங்களையே வழி நடத்துவதும் தலைமையே. நாம் எதிர்பார்க்கும் (நம்பிக்கை) அளவின் படியே, மக்களும் சிறந்த தலைவர்களாக உருவாகுவார்கள். நாம் மக்களை பின்பற்றுபவர்களாக நடத்தினால் அவர்களும் நம்மை பின்பற்றுவார்கள். நாம் மக்களை தலைவர்களை போல் நடத்தினால் அவர்களும் தலைவர்களாக உருவாகிறார்கள். இயேசு பலதரப்பபட்ட மக்களை ஒருங்கிணைத்து, அவருக்கு கீழ்படிவதே சிறந்த தலைமைத்துவதத்திற்கு வழி வகைசெய்யும், அல்லாமல் வெளி அடையாளங்கள் அல்ல என் நிரூபித்தார். ஏன் தலைவர்கள் பற்றாக்குறை? இப்போதைய தலைவர்கள், புதிய நபர்களுக்கு தலைமை பொறுப்பை அளிப்பதில்லை.

தெய்வீகத்தன்மை இல்லாத தலைவர்களைத் தவிர, ஆண்டவரின் அசைவை தடுத்து நிறுத்தும் பல காரணங்கள் உண்டு. துரதிஷ்டவசமாக, நாங்கள் பயிற்சி அளித்த இடங்களிலும் (அமெரிக்க தேசத்திலும் கூட) தலைவர்களின் பற்றாகுறையை உணர்ந்தோம். தெய்வீகத்தன்மை உடைய தலைவர்கள், ஒரு சமூகத்தில், சமாதானம், ஆசீர்வாதம், நீதி போன்ற தெய்வீக பண்புகளை வளர்கிறார்கள். ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் சொன்னதை போல, "நமது தற்போதைய பிரச்சனையை, நமது தற்போதைய தலைவர்களைக்கொண்டு தீர்க்க இயலாது." "*இயேசுவை பின்பற்றும்*

*பயிற்சி*' என்ற புத்தகத்தை ஆண்டவர் புதிய தலைவர்களை உற்சாகப்படுத்த பயன் படுத்துகிறார். அதுவே உங்களுக்கும் நடப்பதாக என்று ஜெபிக்கிறோம். நமது சிறந்த தலைவர், நமது இதயத்தையும், சிந்தனையையும், ஆவிக்குரிய ஆசீவாதங்களால் நிறைத்து, நம்மை பலப்படுத்தி, தலைவர்களை உருவாக்க உதவி செய்வாராக.

# பாகம் 2

## தலைமைத்துவ பயிற்சி

# 1

# நல்வரவு

முதல் பாடத்தில், பயிற்சியாளரும், தலைவர்களும் ஒருவரை ஒருவர், அறிமுகப்படுத்தி கொள்வார்கள். கிரேக்க வழிமுறைக்கும், எபிரேய வழிமுறைக்கும் உள்ள வித்தியாசத்தை கற்றுக்கொள்கிறார்கள். இயேசு இரண்டு வழிமுறைகளை கைகொண்டார், அதே நாமும் செயல்படுத்துவோம். எபிரேய வழிமுறை தலைவர்களை உருவாக்குவதில் மிகவும் சிறப்பானதாக, அதிகமாக பயன்படுத்தக்கூடிய வழிமுறையாகவும் உள்ளது.

இந்த பாடத்தின் குறிக்கோளானது, இயேசுவின் வழிமுறையை பின் பற்றி உலகத்தை அணுகுவது. இயேசுவின் ஐந்து யுக்திகள் இவை: ஆண்டவரில் பலப்படு, சுவிசேஷத்தை பகிர்தல், சீடர்களை உருவாக்குதல், குழுக்களை உருவாக்கி சபையாக மாற்றுதல், தலைவர்களுக்கு பயிற்சி அளித்தல். தலைவர்கள், *“இயேசுவை பின்பற்றும் பயிற்சி”, புத்தகத்தின் முதல் பாகம், தீவிரமான சீடர்களை உருவாக்குதல்* என்ற பாடங்களை கற்றுக் கொண்டு, பிறரும் அதையே செய்ய தூண்டுகிறார்கள். இயேசுவையும் அவரது கட்டளைகளையும் ஒவ்வொரு நாளும் கீழ்படிவதாக முடிவெடுத்து அந்த வகுப்பானது நிறைவேறுகிறது.

## புகழ்

- இரண்டு துதி பாடல்களை சேர்ந்து பாடவும்
- ஆண்டவருடைய பிரசன்னத்திர்காகவும், கருத்தரங்கு அசீர்வதிக்க படவும் ஒரு மதிப்பிர்க்குரிய தலைவர் ஜெபிக்க வேண்டும்.

# துவக்கம்

## பயிற்சியாளர்களை அறிமுகப்படுத்துதல்.

- பயிற்சியாளர்களும், தலைவர்களும் துவக்க வகுப்பிற்காக வட்டமாக அமர்தல். ((முறைசாராத ஒரு அமைப்பு உருவாக்கும்படியாக, மேஜை, நாற்காலி மற்றும் தடைகளை நீக்கவும்)
- தலைவர்கள் தங்களை எவ்வாறு அறிமுகப்படுத்த வேண்டும் என்பதை பயிற்சியாளர்கள் எடுத்துக் காட்டுதல்.
- பயிற்சியாளர்களும், பயிலுனர்களும், ஒருவரை ஒருவர் அறிமுகப்படுத்திக் கொள்கின்றனர். ஒருவர் மற்ற ஓருவருடைய பெயர், வீட்டு விவரங்கள், மற்றும் முந்தின மாதம் தங்கள் குழுவை ஆண்டவர் ஆசீர்வதித்த விவரம், எல்லாவற்றையும் பகிந்து கொள்கின்றனர்.

## தலைவர்களை அறிமுகப்படுத்துதல்.

- தலைவர்களை ஜோடி ஜோடியாக பிரித்தல்.
  "நானும் எனது பயிலுனரும் அறிமுகப்படுத்தியதை போல அறிமுகப்படுத்தவும்."
- தலைவர்கள், தங்கள், பெயர், வீட்டு விவரங்கள், மற்றும் முந்தின மாதம் தங்கள் குழுவை ஆண்டவர் ஆசீர்வதித்த விவரம், எல்லாவற்றையும் பகிந்து கொள்ள வேண்டும். அந்த விஷயங்களை தங்களது குறிப்பேட்டில் பதிவு செய்ய அவர்களை ஊக்குவிக்க வேண்டும்.
- ஐந்து நிமிடங்கள் பின், ஒவ்வொரு தலைவர் ஜோடியும், குறைந்தது ஐந்து மற்ற நபர்களுக்கு தங்களை அறிமுகப்படுத்துதல் வேண்டும்.

## இயேசு தலைவர்களுக்கு எவ்வாறு பயிற்சி அளித்தார்?

- தலைவர்களை தங்கள் நாற்காலிகளை இரண்டு வரிசையாக இட்டு அமர வேண்டும். பயிற்சியாளர்கள் வகுப்பிற்கு முன் நிற்க வேண்டும். “இதை ‘கிரேக்க’ வழிமுறை என்று அழைப்போம். ஆசிரியர் தங்களது அறிவை பகிர்ந்து கொள்கிறார், மாணவர் சில வினாவை எழுப்புகின்றனர். எல்லோரும் ஆசிரியரை நோக்கி பேசுவார்கள். சாதாரணமாக ஆசிரியர்கள் பிள்ளைகளுக்கு இவ்வாறு பாடம் கற்பிக்கப்படுகிறது.”
- தலைவர்களும், பயிற்சியாளர்களும், முன்பு அமர்ந்தது போலவே வட்டமாக அமர்கின்றனர்.

  “இதை ‘எபிரேய’ வழி பாடம் கற்பிக்கும் முறை என்று அழைப்போம். ஆசிரியர் சில கேள்விகளை எழுப்ப, மாணவர்கள் அந்த தலைப்பை கலந்துரையாடி, ஒருவருக்கொருவர் கருத்து பரிமாறிக் கொள்கின்றனர். ஆசிரியர், பெரியவர்களுக்கு பாடம் கற்பிக்கும் போது இந்த முறையை கையாள்கின்றனர். இயேசு எந்த வழியை கையாண்டார்?”
- மாணவர்கள் கருத்தை பரிமாறிக்கொள்ள அனுமதிக்கவும். அதன் பின், திரளான மக்களிடம் பேசும் போது, கிரேக்க முறையை இயேசு கையாண்டார் என்றும், தனது சீடர்களை தலைவராக உருவாக்கும் பணியில், எபிரேய வழியை கையாண்டார் என்று சொல்லவும்.

  “உங்களுக்கு தெரிந்த ஆசிரியர்கள் எந்த வழிமுறையை கை யாளுகிறார்கள்?”
- ஆசிரியர்கள் கிரேக்க வழி முறையை அதிகமாக உபயோகித்தார்கள். அதன் விளைவாக நாம் இந்த வழி முறையை கடை பிடித்தால் அதிக எளிதாக உணர்கிறோம்.

“இந்த பயிற்சி அரங்குகளில், நாம் இயேசு எவ்வாறு பயிற்சியளித்தார் என்பதை எடுத்துக்காட்டுகிறோம். அதிக பயிற்சி வகுப்புகளில் இயேசுவை போல எபிரேய வழிமுறை உபயோகப் படுத்த படுகிறது. நாங்கள் அவரையே பின்பற்ற விரும்புகிறோம்.

# திட்டம்

"உலகத்தை கைப்பற்ற, இயேசு பின்பற்றிய வழிமுறைகளை புரிந்து கொள்வதே எங்கள் நோக்கமாகும். எனவே நாம் அவரை பின் பற்றுவோம்."

## சபையை யார் கட்டுவார்?

*மத்தேயு 16:18 மேலும், நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை.*

"இயேசுதான் சபைகளை கட்டுகிறார்."


## யார் கட்டுவார் என்பது ஏன் முக்கியம்?

*சங் 127:1 கர்த்தர் வீட்டைக் கட்டாராகில், அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா; கர்த்தர் நகரத்தைக் காவாராகில் காவலாளர் விழித்திருக்கிறது விருதா.*

"இயேசு சபையை கட்டாவிட்டால் நமது முயற்சி எல்லாம் வீணாகும். இயேசு பூமியில் இருந்த போதும், இத்தனை ஆண்டு சபையின் வரலாற்றிலும், இயேசு இதே வழிமுறையை உபயோகித்தார். நாம் அவரது வழிமுறையை படித்து அவரை பின்பற்றுவோம்."

## இயேசு தனது சபையை எவ்வாறு கட்டினார்?

- இயேசுவின் திட்டத்தை நீங்கள் பகிர்ந்துகொள்ளும்போது இந்த வரைபடத்தை பாகம் பாகமாக பிரித்து வரைந்து விளக்கவும்.




## ஆண்டவரில் பெலன் கொள்ளுதல்.

*லூக் 2:52 இயேசுவானவர் ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவகிருபையிலும், மனுஷர் தயவிலும் அதிகமதிகமாய் விருத்தியடைந்தார்.*

*லூக் 4:14 பின்பு இயேசு ஆவியானவருடைய பலத்தினாலே கலிலேயாவுக்குத் திரும்பிப் போனார். அவருடைய கீர்த்தி சுற்றிலும் இருக்கிற தேசமெங்கும் பரம்பிற்று.*

"இயேசுவின் வழிமுறையில் முதல் உத்தி", "ஆண்டவரில் பெலன் கொள்ளுதல்" ஆன்மீக தலைமைத்துவம் என்பது ஆண்டவரோடு நெருங்கிய, பரிசுத்தமான உறவை சார்ந்தது. நாம் இயேசுவில் பலம் கொள்ளும்போதும் நாம் பலம் உள்ளவர்களாக இருப்போம்.

☝ ஆண்டவரில் பெலன் கொள்ளுதல்.

கரங்களை உயர்த்தி, வலுவான மனிதனைப்போல காட்சியாளியுங்கள்.

நாம் இயேசுவை பின்பற்றும் போது, ஜெபித்து, கட்டளைகளுக்கு கீழ்படிந்து, ஆவியின்படி நடந்து, அவரது கிரியைகளை அவரோடு இணைந்து செய்வோம்."

- "ஜெபி","கீழ்படி","நட" என்ற படங்களை கை அசைவோடு செய்யவும் *"இயேசுவை பின்பற்றும் பயிற்சி" பகுதி 1:தீவிரமான சீடர்களை உருவாக்குதல்;* திறனாய்வு செய்.

"இப்பாடங்கள் கிறிஸ்துவில் எவ்வாறு நிலைத்திருப்பது என்பதை நாங்கள் கற்றுக்கொள்ளவும் பிறரை கற்பிக்கவும் உதவுகிறது. ஆண்டவரின் கட்டளைகளுக்கு கீழ்படிவது என்பது, அவரில் பெலன் கொள்வதே ஆகும். இயேசுவின் மற்ற வழிமுறைகளை நாம் எப்பொழுதும் அன்போடு பின்பற்றுபவர்களாக இருத்தல் வேண்டும்."

## சுவிசேஷத்தை பகிர்ந்து கொள்ளுதல்.

*மாற் 1:14 யோவான் காவலில் வைக்கப்பட்ட பின்பு, இயேசு கலிலேயாவிலே வந்து, தேவனுடைய ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து:*

*மாற் 1:15 காலம் நிறைவேறிற்று, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று; மனந்திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசியுங்கள் என்றார்.*

" நாம் ஜெபித்து ஆவிக்குள் நடக்கும் பொழுது ஆண்டவரில் பெலன் கொள்கிறோம். அவரது கட்டளைகளுக்கு கீழ்படியும்போது, பெலன் கொள்கிறோம். இயேசு எங்கே கிரியை செய்கிறாரோ அங்கு நாமும் அவரோடு இணைந்து சுவிசேஷத்தை அறிவித்தல் வேண்டும்."

✋ சுவிசேஷத்தை பகிர்ந்து கொள்ளுதல்.

விதைகளை எறிவது போல உமது வலது கரத்தை உயர்த்தி ஒரு அசைவை ஏற்படுத்தவும்.

"சுவிசேஷத்தை பகிர்ந்து கொள்ளும் போது, நமது சாட்சியை பகிர்ந்து கொள்ளுவது மக்கள் ஆர்வத்துடன், நமது கதையை கேட்பதற்கு வழிவகுக்கும். அதை செய்யும்போது ஆவியானவர் இடை படும் போது நாமும் அவரோடு இணைந்து கொள்ள வேண்டும்."

ஆவியானவர் கிரியை செய்யும்போது, நாம் சுவிசேஷத்தை பகிர்ந்து கொள்ள வேண்டும். சுவிசேஷ விதையை விதைக்க வேண்டும். விதை இல்லை என்றால் அறுவடை இல்லை என்பதை நினைத்து கொள்ளவும்.

- "செல்","பகிர்","விதை" என்ற படங்களை கை அசைவோடு செய்யவும் *"இயேசுவை பின்பற்றும் பயிற்சி" பகுதி 1:தீவிரமான சீடர்களை உருவாக்குதல்;* திறனாய்வு செய்.

"இக்கட்டத்தில் சாத்தானின் வலையில் விழாதீர்கள். அங்கே விசு வாசிகள், நாம் ஆண்டவரில் பெலன் கொண்ட பின் தான் நாம் சுவிசேஷத்தை

அறிவிக்க வேண்டும் என்று எண்ணுகிறார்கள். அது முற்றிலும் தவறானது. ஆண்டவரின் கட்டளைகளுக்கு கீழ்படிந்து நாம் சுவிசேஷத்தை அறிவிக்கும் போது, நாம் பெலன் கொள்கிறோம், விசுவாசத்தில் வளர்கிறோம். மாறாக பெலன் கொண்டபின் நாம் சுவிசேஷத்தை அறிவிக்க முயன்றால், அது ஒருக்காலும் செய்ய இயலாது."

## சீடர்களை உருவாக்கு

*மத் 4:19 என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன் என்றார்.*

"நாம் ஆண்டவருக்குள் இணைந்து அவருடைய கட்டளைகளுக்கு கீழ்படியும்போது, மக்கள், ஆண்டவரை ஏற்றுக்கொள்ள ஏதுவாக இருக்கும்."

☟ சீடர்களை உருவாக்கு

கரங்களை இதயத்தில் வைத்து பிறகு உயர்த்தி துதியுங்கள். கைகளை இடுப்பில் வைத்து, பிறகு இரு கரங்களையும் கூப்பவும். கரங்களை மூளையின் மீது வைத்து, பின் புத்தகம் படிக்கும் பாணியில் கொண்டு வரவும். கரங்களை உயர்த்தி, வலுவான மனிதனைப்போல காட்சி அளியுங்கள். விதைகளை எறிவது போல உமது வலது கரத்தை உயர்த்தி ஒரு அசைவை ஏற்படுத்தவும்.

"எல்லாவற்றிலும் மென்மையான கட்டளை, ஆண்டவரை அன்பு செய்தலும், பிறரை அன்பு செய்தலும் ஆகும். புதிதாக இயேசுவை பின்பற்றுபவர்களுக்கு நாம் இதை நடைமுறையாக எடுத்து காட்ட வேண்டும். நாம் அவர்களுக்கு எவ்வாறு செபிப்பது, கட்டளைக்கு கீழ் படிவது, ஆவியில் நடப்பது, ஆண்டவர் கிரியை செய்யும் இடத்திற்கு செல்லவும் சாட்சியை பகிர்ந்து கொள்ளவும் சுவிசேஷத்தை பகிர்ந்து கொள்ளவும், என்பதை கற்பித்து, அவர்கள் ஆண்டவரில் எவ்வாறு பெலன் கொள்ளலாம் என்பதை அறிவிப்போம்."

- "அன்பு" பாடங்களை கை அசைவோடு *"இயேசுவை பின்பற்றும் பயிற்சி" பகுதி 1:தீவிரமான சீடர்களை உருவாக்குதல்;* திறனாய்வு செய்.

குழுக்களையும் சபைகளையும் துவங்குதல்.

*மத் 16:18 மேலும், நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை.*

"நாம் இயேசுவை பின்பற்றி அவரது கட்டளைகளை கடைபிடித்தால், நாம் சுவிசேஷத்தை பகிர்ந்து சீடர்களை உருவாக்குவோம். ஆண்டவர் இயேசுவை பின்பற்றி, ஆராதிக்கிற, ஜெபிக்கிற, வேதத்தை படித்து பகிர்ந்து கொள்கிற குழுக்களை உருவாக்குகிறோம். இயேசு இதை போன்ற குழுக்களை உலகம் முழுவதும் உருவாக்கி தமது சபையை வலுப்படுத்தி மேலும் அவர் நாமத்திற்கு மகிமை ஏற்படும்படியாக மேலும் சபைகளை உருவாக்குகிறார்."

- குழுக்களையும் சபைகளையும் துவங்குதல்.

மக்களை வருமாறு அழைப்பது போல கை அசைவுகளை ஏற்படுத்தவும்.

தலைவர்களை உருவாக்குதல்.

*மத் 10:5 இந்தப் பன்னிருவரையும் இயேசு அனுப்புகையில், அவர்களுக்குக் கட்டளையிட்டுச் சொன்னது என்னவென்றால்: நீங்கள் புறஜாதியார் நாடுகளுக்குப் போகாமலும், சமாரியர் பட்டணங்களில் பிரவேசியாமலும், காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்குப் போங்கள். போகையில், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கியுங்கள். வியாதியுள்ளவர்களைச் சொஸ்தமாக்குங்கள், குஷ்டரோகிகளைச் சுத்தம்பண்ணுங்கள், மரித்தோரை எழுப்புங்கள், பிசாசுகளைத் துரத்துங்கள்; இலவசமாய்ப் பெற்றீர்கள், இலவசமாய்க் கொடுங்கள்.*

"நாம் கிறிஸ்துவுக்குள் வாழும் போது, அவருடைய கட்டளைகளுக்கு கீழ்படிந்து அவரை நாம் அன்பு செய்கிறோம். நாம் சுவிசேஷத்தை அறிவிப்பதனால் ஊதாரி மக்கள் ஆண்டவரின் குடும்பத்திற்கு வந்து சேர ஏதுவாகும். ஆண்டவரையும் மக்களையும் அன்புசெய்யும் சீடர்களை உருவாக்குகிறோம். நாங்கள் சேர்ந்து ஜெபித்து, தொழுது, படித்து, ஊழியம் செய்கிற குழுக்களை உருவாக்குகிறோம். அதிக குழுக்கள் அதிக தலைவர்களின் தேவையை ஏற்படுத்துகிறது. நாம் 222 கொள்கையை கடைபிடிக்க வேண்டும். 2 திமோத்தேயு 2:2 கூறப்பட்டுள்ளது போல, நாம்

உருவாக்கும் தலைவர்கள், மற்ற தலைவர்களை உருவாக்கும் தலைவர்களை நாம் உருவக்குகிறோம்."

☝ தலைவர்களை உருவாக்குதல்.

படைவீரனை போல நின்று வாழ்த்துகூறுவோம்.

- "பெருக்குதல்" படங்களை கை அசைவோடு *"இயேசுவை பின்பற்றும் பயிற்சி" பகுதி 1:தீவிரமான சீடர்களை உருவாக்குதல்;* திறனாய்வு செய்.

"இயேசுவின் வழிமுறைகளை தவறாக புரிந்து கொள்ளும் தன்மையை தவிர்க்கவும். பல விசுவாசிகள் இதை வரிசை முறையாக பின்பற்றுகிறார்கள். முதலில் நாம் சுவிசேஷத்தை அறிவிப்போம் என்று நினைத்து, பிறகு சீடர்களை உருவாக்குவோம் என்று எண்ணுகிறார்கள். எப்போதும் எல்லா கட்டளைகளையும் கடைபிடிக்க இயேசு கற்றுக் கொடுத்தார். உதாரணமாக, நாம் நற்செய்தியை அறிவிக்கும் போது, ஆண்டவராகிய இயேசுவை பின்பற்றுவது எவ்வாறு என்பதை அறிவிக்கிறோம். நாம் சீடர்களை உருவாக்கும்போதும், புதிய விசு வாசிகள் ஏற்கனவே இருக்கும் குழுவில் அல்லது புது குழுவில் சேர்ந்து கொள்ள உதவுகிறோம். துவக்கத்திலிருந்து ஆர்வமுடைய ஆவிக்குரிய தலைவர்களுடைய பண்புகளை வெளிப்படுத்துகிறோம்.

இந்த ஐந்து பாகங்களை கொண்ட வழிமுறை இயேசு சபையை எவ்வாறு நிறுவினார் என்பதை விவரிக்கிறது. இயேசுவின் சீடர்கள் ஆதி திருச்சபையில் அவருடைய வழிமுறைகளை பின்பற்றினார்கள். பவுல் புற ஜாதியாரின் மத்தியில் ஊழியம் செய்தபோது, அப்படியே செய்தார். ஆவிக்குரிய சிறந்த தலைவர்கள், திருச்சபையின் வரலாற்றில் அவ்வாறே செய்தார்கள். தலைவர்கள் இயேசுவோடு இணைந்து அவருடைய வழிமுறைகளை பின்பற்றி உலகை கைபற்ற சென்ற போது ஆண்டவர் அந்த தேசத்தையே அதிகமாக ஆசீர்வதித்தார். நாமும் அவ்வாறே செய்து தேவனின் மகிமையை நம் நாட்டில் காண செய்வோம்! "

## மனப்பாட வேத வசனம்.

*1கொரி 11:1 நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல, நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்.*

- தலைவர்கள் நின்று கொண்டு வேதத்திலுள்ள மனப்பாட பகுதியை 6 முறை வேதத்தை படித்தும், 4 முறை பாராமலும் வசனத்தை அறிக்கை இடவேண்டும் (மொத்தம் 10 முறை). வசனம் சொல் வதர்க்கு முன், வசனப்பகுதியை சொல்ல வேண்டும். முடித்தபின் அமரவும்.
- இந்த வழிமுறையை பின்பற்றும் பொழுது, எந்த குழு தனது “செயல்பாட்டு” பாடத்தை முடித்தார் என்பதை புரிந்து கொள்ளலாம்.

# செயல்பாடு

“இப்போது, நாம் கற்ற இயேசுவின் வழிமுறைகளை செயல் படுத்துவோம். நாம் ஒவ்வொருவரும் மாறி மாறி வழிமுறையை பிறரோடு பகிர்ந்து கொள்வோம். அப்போது நாம் மற்றவர்களுக்கு கற்றுக் கொடுக்க நம்பிக்கை ஏற்படுகிறது.

- ஜோடி ஜோடியாக தலைவர்களை பிரிக்கவும்.

“இப்போது நான் செய்வது போல, ஒரு காகிதத்தை நான்காக மடிக்கவும். இந்நான்கு பிரிவுகளில் இயேசுவின் வழிமுறைகளை வரைய வேண்டும்.”

- எல்லா தலைவர்களும் இயேசுவின் வழிமுறைகளை வரைந்து அதை பிறருக்கு சொல்ல பழக்க வேண்டும். இரண்டு தலைவர்களும் இயேசு வழிமுறை படத்தை ஒரே நேரத்தில் வரைய வேண்டும். ஒரு நபர் மட்டும் தான் பகிர்ந்து கொள்வார். படங்களை வரையும் போது, *“தீவிரமான சீடர்களை உருவாக்குதல்”* படங்களை திறனாய்வு செய்ய அவசியம் இல்லை.
- முதல் நபர் தனது வரைபடத்தையும் விளக்கத்தையும் முடித்த பின், இரண்டாவது நபரும் அதையே செய்கிறார். இப்போது இருவரும் அந்த படத்தை திரும்பவும் வரைய வேண்டும். ஜோடிகள் எழுந்து மனப்பாட வசனத்தை பத்து முறை முன்போலவே அறிக்கை இட வேண்டும்.

"இந்த படத்தை இரண்டு முறை வரைந்த பின், மனப்பாட வசனத்தை பகிர்ந்து கொண்ட பின், வேறொரு நபரை தனது ஜோடியாக சேர்த்துக்கொண்டு அதையே திரும்ப செய்யவும்.

இரண்டாவது நபருடன் செயல்முறை பயிற்சி முடித்தபின், மூன்றாவது நபரை தேடி முன்போலவே செய்யவும்."

"இதே காரியத்தை நான்கு தலைவர்களுடன் பகிர்ந்துகொள்ளும் வரை தொடரவும்."

(இந்த பயிற்சி முடிவடையும் போது, ஒவ்வொரு தலைவரும் தனது காகிதத்தின் முன் பக்கமும், பின் பக்கமும், முழுவதுமாக 8 முறை இயேசுவின் வழிமுறை படத்தை வரைந்திருக்க வேண்டும்.

# இறுதி

## இயேசு சொல்லுகிறார் "எனக்குப் பின்சென்றுவா"

*மத் 9:9 இயேசு அவ்விடம் விட்டுப் புறப்பட்டுப்போகையில், ஆயத்துறையில் உட்கார்ந்திருந்த மத்தேயு என்னும் ஒரு மனுஷனைக் கண்டு: எனக்குப் பின்சென்றுவா என்றார்; அவன் எழுந்து, அவருக்குப் பின்சென்றான்.*

"வரி வசூலிப்பவர்கள் இயேசுவின் நாட்களில் மிகவும் மோசமாக எண்ணப் பட்டார்கள். மத்தேயு என்ற வரி வசூலிப்பவரை இயேசு அழைப்பார் என ஒருவரும் எண்ணி இருக்க மாட்டார்கள்.

இயேசு மத்தேயுவை அழைத்ததனால் அவர், கடந்த காரியங்களை விட தற்போதைய காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார் என்பதை அறியலாம். நீங்கள் அதிக பாவத்தில் உள்ளதால் உங்களுக்குள் ஆண்டவர் கிரியை செய்ய முடியாது என எண்ணலாம். நீங்கள் இறந்த காலத்தின் பாவ செயல்களை குறித்து வெட்கம் அடையலாம். நற்செய்தி என்னவென்றால், அவரை பின்பற்ற விரும்பும் எவரையும் அவர் பயன் படுத்துவார். அவருக்கு கீழ்படிந்து அவருக்காக வாழ எண்ணுகிற மக்களை அவர் தேடி அலைகிறார்.

நாம் ஒருவரை பின்பற்றும் போது, நாம் அவரை போல் நடந்து கொள்வோம். மாணவன் தனது ஆசிரியரை பின்பற்றுகிறான். நாம் எல்லோரும் யாரையாவது பின்பற்றுகிறோம். நாம் யாரை பின் பற்றுகிறோமோ, அவரை போலவே நாம் மாறி விடுகிறோம்.

இயேசுவை பின்பற்றும் பயிற்சியின் நோக்கம் என்னவென்றால், தலைவர்கள் இயேசுவை எவ்வாறு பின்பற்றுவது என்பதை கற்றுக்கொள்ளவே. நாம் எவ்வளவு தூரம் பின்பற்றுகிறோமோ நாம் அவரைப்போல மாறி விடுகிறோம். இந்த பயிற்சி முறையில், நாம் தலைமைத்துவ கேள்விகளை எழுப்பி, வேதம் வாசித்தல், இயேசு எவ்வாறு வழிகாட்டியாய் இருந்தார், செயல் முறையில் அவரை எவ்வாறு பின் பற்றுவது என்பதை கற்றுக் கொடுக்கிறோம்.

- மதிப்பிற்குரிய ஒரு தலைவரை முடிவாக ஒரு ஜெபத்தோடும், ஆசீர்வாதத்தொடும், உலகத்தை கைபற்ற இயேசுவின் வழிமுறையை பின்பற்றுவோம் என்ற ஆழ்ந்த ஈடுபாடுடன் ஜெபித்து அமர்வை முடிவுறச்செய்கிறது.

# 2

# இயேசுவை போல் பயிற்சி அளித்தால்

நமது சபைகளில் அதிகமாக சந்திக்கும் பிரச்சனை, தலைவர்கள் பற்றாக்குறை என்பதே. தலைவர்களை உருவாக்கும் முயற்சி குறைவாக காணப்படுவத்தின் காரணம், சுலபமான வழிமுறை இல்லாதனால் தான். இந்தப்பாடத்தின் குறிக்ககோளானது எவ்வாறு இயேசு தலைவர்களை உருவாக்கினார் என்பதை அறிந்து கொண்டு அதையே நாமும் கடைபிடிப்பது தான்.

தலைவர்களிடம் இயேசு, அவர்களுடைய ஊழியத்தில் ஏற்பட்ட முன்னேற்றத்தையும் பிரச்சனைகளையும் கேட்டு அறிந்தார். அவர் களுக்காக ஜெபித்து மேலும் எதிர்கால திட்டங்களை தீட்ட உதவி செய்தார். அப்பயிற்சியின் முக்கிய அம்சமாக அவர்களுடைய ஊழியத்திற்க்கான திறமைகளை செயல்படுத்துவதே. இந்த இரண்டாவது பாடத்தில், தலைவர்கள், இந்த தலைமை பயிற்சியையும், உலகத்தை சந்திக்க இயேசுவின் வழிமுறையும், தங்களது குழுவிற்கு, எடுத்து செல்வர். இறுதியாக, தலைவர்கள், பயிற்சி மரம் ஒன்றை உருவாக்கி, தாங்கள் பயிற்சியளிக்கும் தலைவர்களுக்கு, பயிற்சியோடு ஜெபமும் சேர்ந்து அமைய உதவுகிறார்கள்.

## புகழ்

- தேவனை புகழ்ந்து இரண்டு பாடல்களை பாடி, ஒரு தலைவரை இந்த அமர்வுக்காக ஜெபிக்க அழைக்கவும்.

## முன்னேற்றம்

- தலைவர் ஒருவர் தனது சாட்சியை (3 நிமிடத்திற்கு )தமது ஊழியத்தை ஆண்டவர் எவ்வாறு ஆசீர்வதிக்கிறார் என்பதை பகிர்ந்து கொள்ள வேண்டும். குழுவானது அந்த தலைவருக்காகவும், அவரது ஊழியத்திற்காகவும் ஜெபம் செய்ய வேண்டும்.

## பிரச்சனை

"சபைகளும் குழுக்களும் தலைவர்களின் தேவையை அறிந்து கொள்கிறார்கள். ஆனால் புதிய தலைவர்களை உருவாக்க பயிற்சி அளிப்பது எவ்வாறு என அறிவதில்லை. தற்போதைய தலைவர்கள் அதிக சுமைகளையும் பொறுப்புக்களையும் ஏற்றுக் கொண்டு தாங்கள் சிதைந்து போகும் வரை வேலை செய்கிறார்கள். பின்பற்றுபவர்கள், தலைவர்களை தாங்கள் பணியை விட்டுவிடும் அளவிற்கு அதிக பணியை சுமத்துகிறார்கள். சபைகளும் குழுக்களும் எல்லா தேசங்களிலும் இதே பிரச்சனையை தொடர்ந்து சந்தித்து வருகின்றனர்."

# திட்டம்

"ஆர்வமுள்ள ஆவிக்குரிய தலைவர்களை உருவாக்க நாம் கற்றுக்கொள்ள வேண்டும். இந்தப்பாடத்தின் குறிக்ககோளானது எவ்வாறு இயேசு தலைவர்களை உருவாக்கினார் என்பதை அறிந்து கொண்டு அதையே நாமும் கடைபிடிப்பது தான்."

## திறனாய்வு

### நல்வரவு

யார் சபையை கட்டுவது?

அது ஏன் முக்கியத்துவம்வாய்ந்தது?

இயேசு கிறிஸ்து தன் சபையை எவ்வாறு கட்டினார்?

ஆண்டவரில் பெலன் கொள்ளுதல் ✋

சுவிசேஷத்தை பகிர்ந்து கொள்ளுதல் ✋

சீடர்களை உருவாக்குதல் ✋

குழுக்களையும் சபைகளையும் துவங்குதல் ✋

தலைவர்களை உருவாக்குதல் ☟

*1கொரி 11:1 நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல, நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்.*

## இயேசு தலைவர்களுக்கு எவ்வாறு பயிற்சி அளித்தார்?

*லூக் 10:17 பின்பு அந்த எழுபதுபேரும் சந்தோஷத்தோடே திரும்பிவந்து: ஆண்டவரே, உம்முடைய நாமத்தினாலே பிசாசுகளும் எங்களுக்குக் கீழ்ப்படிகிறது என்றார்கள்.*

### முன்னேற்றம்

"இயேசுவின் சீடர்கள், தங்கள் ஊழியத்திலிருந்து திரும்ப வந்து முன் னேற்றத்தை பகிர்ந்து கொண்டனர். அதே போல் நாமும் நாம் பயிற்சி அளிப்பவர்களோடு அவ்வாறே பேச வேண்டும். அவர்கள் குடும்ப விவகாரத்திலும், ஊழிய முன்னேற்றத்திலும், தனிப்பட்ட அக்கறை காட்ட வேண்டும்."

☟ முன்னேற்றம்

கரங்களை ஒன்றின்மேலாக ஒன்று வைத்து மேல்நோக்கி சுழற்றவும்.

*-மத் 17:19-*

*அப்பொழுது, சீஷர்கள் இயேசுவினிடத்தில் தனித்துவந்து: அதைத் துரத்திவிட எங்களால் ஏன் கூடாமற்போயிற்று என்று கேட்டார்கள்.*

### பிரச்சனைகள்

"சீடர்கள் ஊழியத்தில் பிரச்சனைகளை சந்தித்த போது, இயேசுவிடம் ஏன் அவர்களால் இயலவில்லை என்று கேட்டறிந்தார்கள். அதே போல் நாமும் தலைவர்களிடம் அவர்களது பிரச்சனையை கேட்டறிந்து, நாம் சேர்ந்து ஆண்டவருடைய உதவியை நாடி பிரச்சனைகளுக்கு தீர்வு காண்போம்."

☝ பிரச்சனைகள்

தலையின் இருப்புறங்களிலும் கரங்களை வைத்து முடியை பறிப்பது போல அசைவை ஏற்படுத்தவும்.

*-லூக் 10:1-*

*இவைகளுக்குப் பின்பு கர்த்தர் வேறே எழுபதுபேரை நியமித்து, தாம் போகும் சகல பட்டணங்களுக்கும் இடங்களுக்கும் அவர்களைத் தமக்கு முன்னே இரண்டிரண்டு பேராக அனுப்பினார்.*

## திட்டங்கள்

"இயேசு, எளிதான, ஆவிக்குரிய வழிமுறைகளை தங்களது ஊழியத்தில் பின்பற்றும்படி சீடர்களுக்கு கற்றுத் தந்தார். அதே போல நாமும் தலைவர்களுக்கு ஆண்டவரை சார்ந்து எளிதான 'அடுத்த உத்தியை' கற்றுத்தர வேண்டும்,"

☝ திட்டங்கள்

இடது கையை காகிதமாக பாவித்து வலது கரத்தால் "எழுதவும்".

*-யோவா 4:1,2-*

*யோவானைப்பார்க்கிலும் இயேசு அநேகம் பேரைச் சீஷராக்கி ஞானஸ்நானங்கொடுக்கிறாரென்று பரிசேயர் கேள்விப்பட்டதாகக் கர்த்தர் அறிந்தபோது, யூதேயாவைவிட்டு மறுபடியுங் கலிலேயாவுக்குப் போனார்.*

## செயல்பாடு

"இயேசுவின் சீடர்கள் ஞானஸ்தானம் கொடுத்தார்கள் என்பதை அறிந்து ஆச்சிரியப்பட்டார்கள். அனேக இடங்களில் இயேசு தனது சீடர்களை இறை பணியை செயல்படுத்த பயிற்சி அளித்தார். அதே போல நாமும் தலைவர்களுக்கு தாங்கள் கருக்கொண்ட உத்திகளை பயிற்சி செய்ய அனுமதித்தல் வேண்டும். அவர்கள் தவறு செய்தாலும், தவறுகளை திருத்தி நம்பிக்கை பெற்றுக்கொள்ள நாம் வழிவகை செய்ய வேண்டும்."

☝ செயல்பாடு

கரங்களை பளுவை தூக்குவது போல அசைவை ஏற்படுத்தவும்.

*-லூக் 22:31-32-*

*பின்னும் கர்த்தர்: சீமோனே, சீமோனே, இதோ, கோதுமையைச் சுளகினால் புடைக்கிறதுபோலச் சாத்தான் உங்களைப் புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக்கொண்டான். நானோ உன் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன்; நீ குணப்பட்டபின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து என்றார்.*

## ஜெபம்

"பேதுரு தவறு செய்வார் என்றும், சோதனைக்கு உட்படுவார் என்றும் இயேசு அறிந்திருந்தார். வல்லமையும், ஆண்டவரோடு இணைந்து நடப்பதற்கும் ஜெபம் முக்கியமானது என்பதை இயேசு அறிந்திருந்தார். நாம் வழிநடத்துபவர்களுக்காக ஜெபிப்பதே அவர்களுக்கு நாம் செய்யும் மிகுந்த உதவியாக இருக்கும்."

☝ ஜெபம்

கரங்களை கூட்டி ஜெபம் செய்யும் பாணியில் சேர்த்துக்கொள்ளவும்.

## மனப்பாட வசனம்

*-லூக் 6:40-*

*சீஷன் தன் குருவுக்கு மேற்பட்டவனல்ல, தேறினவன் எவனும் தன் குருவைப்போலிருப்பான்.*

- தலைவர்கள் நின்று கொண்டு வேதத்திலுள்ள மனப்பாட பகுதியை 6 முறை வேதத்தை படித்தும், 4 முறை பாராமலும் வசனத்தை அறிக்கை இடவேண்டும் (மொத்தம் 10 முறை). வசனம் சொல்வதற்க்கு முன், வசனப்பகுதியை சொல்ல வேண்டும். முடிந்தபின் அமரவும்.
- இந்த வழிமுறையை பின்பற்றும் பொழுது, எந்த குழு தனது "செயல்பாட்டு" பாடத்தை முடித்தார்கள் என்பதை புரிந்து கொள்ளலாம்.

## செயல்முறை

- தலைவர்களை நான்கு நபர் குழுக்களாக பிரிக்கவும்.
- 7-8 நிமிடங்களுக்கு அவர்கள் கற்றுக் கொள்வதை படிப்படியாக பகிர்ந்து கொள்ளவும்.

### திறனாய்வு

"இயேசுவின் வழிமுறையில் உலகத்தை கைப்பற்ற ஐந்து பாகங்கள் என்ன?"

- தலைவர்களின் பதிலை ஒரு படமாக வெள்ளை பலகையில் வரையவும்.

### முன்னேற்றம்

"ஆண்டவரின் வழிமுறையில் உள்ள எந்த பகுதி உமது குழுவில் உலகத்தை கைப்பற்ற எளிதாக உள்ளது?"

### பிரச்சனை

"உமது குழு இயேசுவின் வழிமுறையை பின்பற்றிய பொழுது ஏற்பட்ட பிரச்சனைகளை பகிர்ந்து கொள். எந்த பகுதி மிகவும் கடினமாக இருந்தது?"

## திட்டங்கள்

“அடுத்த முப்பது நாட்களில் உனது குழு ஆண்டவருடைய பணியை பின்பற்றி உலகத்தை சந்திக்க எடுக்கும் பணியினை பகிர்ந்து கொள்.

- எல்லோரும் தங்கள் நண்பர்களுக்காக ஜெபிக்கும்படியாக திட்டத்தை குறித்துக் கொள்ள வேண்டும்.

## செயல்முறை

“அடுத்த 30 நாட்களுக்குள் ஒரு சிறந்த தலைவராக உருவாக உனது குழுவில் நீர் தனிப்பட்ட முறையில் கையாள இருக்கும் ஒரு யுக்தியை பகிர்ந்து கொள்”

- எல்லோரும் தங்கள் நண்பர்களுக்காக ஜெபிக்கும்படியாக திட்டத்தை குறித்துக் கொள்ள வேண்டும்.
- ஒவ்வொருவரும் தங்கள் செயல்முறையை விளக்கியபின் குழுவில் உள்ள அனைவரும் எழுந்து நின்று, மனப்பாட வசனத்தை அறிக்கை இடுவார்கள்.

## ஜெபம்

“உங்களுடைய சிறு குழுவில் அடுத்த 30 நாட்களுக்கு செயல் படுத்த இருக்கும் திட்டங்களலுக்காகவும், யுத்திகளுக்காகவும் ஜெபிக்க வேண்டும்.”


# இறுதி

பயிற்சி மரம்

“‘பயிற்சி மரமானது’ பயிற்சியாளர்களை ஒழுங்கு செய்யவும், அவர்களுக் காக ஜெபிக்கவும் பயன் உள்ளதாக அமைகிறது.”

- ஒரு வெள்ளை பலகையில் அடிமரத்தையும், மற்றும் வேர் பாகங்களையும், தரை மட்டத்தை குறிக்கும் ஒரு கோட்டை வரையும்.


“நான் எனது பயிற்சி மரத்தை இவ்வாறாக வரையத் துவங்கினேன். ஒரு அடிமரம், வேர். மற்றும் தரை பகுதியை வரையவும். வேதம் சொல்வது நாம்




கிறிஸ்துவுக்குள் வேரூன்றப் பட்டிருக்கிறோம். அதலால் நான் அவர் பெயரை வேர் பகுதியில் எழுதுவேன். இது எனது பயிற்சி மரம ஆனதால் எனது பெயரை நான் அடிமரத்தில் எழுதுவேன்.”

- வேர் பகுதியில் இயேசுவின் பெயரோடு, அடிமரப் பகுதியில் உனது பெயரையும் எழுதிக்கொள்.

"இயேசு பேதுரு, யாக்கோபு, யோவான் என்ற மூன்று பேரோடு தமது பணியில் ஆழமாக ஈடுபட்டார். நான் அதையே பின்பற்றுவேன். ஆண்டவர் எனக்கு மூன்று நபர்களை அளித்துள்ளார்."




- அடிமரத்திலிருந்து மூன்று கோடுகளை மேற்புறம் நோக்கி வரையவும். ஒவ்வொரு கோட்டிற்கும் மேலாக நீங்கள் பயிற்சி அளிக்கும் முக்கியமான மூன்று தலைவர்களுடைய பெயரை எழுதவும்.


"இயேசு மூன்று நபர்களுக்கு பயிற்சி அளித்து, அவர்கள் எவ்வாறு மற்றவர்களை தலைவர்களாக உருவாக்க வேண்டும் என்பதை கற்றுத்தந்தார். உங்களில் ஒவ்வொருவரும், மூன்று நபர்களை (இயேசுவை மாதிரி) உருவாக்கினால் மொத்தம் பன்னிரண்டாக மாறிவிடும். இயேசுவுக்கு 12 சீடர்கள் இருந்தார்கள். அது உற்சாகம் ஏற்படுத்துவது அல்லவா?"

- இப்போது மூன்று முக்கிய தலைவர்கள் பெயருக்கு மேலாக மூன்று கோடுகளை வரையவும். உங்களது முக்கிய தலைவர்கள் அவர்கள் பயிற்சியளிக்கும் மூன்று நபர்களின் பெயரை குறிப்பிடவும். பரிசுத்த ஆவியானவர் உங்கள் எண்ணத்தில் வைக்கும் பயிற்சி மரத்தை குறித்த கதையை பகிர்ந்து கொள். கிளைகளின் அருகே ஏழைகளை வரைந்து மரத்தை பூர்த்தி செய்யவும்.

“இப்போது நீங்கள் உங்களது ‘பயிற்சி மரத்தை’ வரைந்து விசுவாசத்தோடு 12 பெயர்களை குறிப்பிடவும். முதல் மூன்று கிளைகள் நீங்கள் பயிற்சியளிக்கும் முக்கியமான மூன்று நபர்களின் பெயர்களையும், அவர்கள் ஒவ்வொருவரும் அவர்கள் உருவாக்கும் முக்கிய மூன்று நபர் களின் பெயர்களை குறிப்பிடவும்.”

- தலைவர்கள் பயிற்சி மரத்தை வரையும் போது, கீழ்கண்டவற்றை பகிர்ந்து கொள்ளவேண்டும்.

“பலர் என்னிடம் கேட்பார்கள், ‘தலைவர்களை எவ்வாறு உருவாக்குவது?’ என்று. கேளுங்கள் கொடுக்கப்படும் என்று இயேசு சொன்னார். உங்களுக்கு தேவையானதை நீங்கள் கேட்டிருக்கிறீர்களா?




இந்த பயிற்சியானது தலைவர்களை உருவாக்கக்கூடிய யுக்தியை உனக்குக் கற்றுத்தருகிறது.

சிலர், " நான் பயிற்சி அளிக்க எனக்கு ஒருவரையும் தெரியாது என்பர்.". இயேசு, "தேடுங்கள் கண்டடைவீர்கள் என்றார்." நீங்கள் தேடுகிறீர்களா? அல்லது அவர்கள் உங்களிடம் வர காத்துக் கொண்டிருக்கிரீர்களா? இயேசு சொன்னார், 'தேடுங்கள்' என்று, காத்திருங்கள் என்று சொல்லவில்லை.

மற்றும் சிலர், " எங்கு துவங்குவது என்று வினவுவர்?". இயேசு சொன்னார், "தட்டுங்கள் திறக்கப்படும்" என்று. நீங்கள் தட்டுகிறீர்களா? நீங்கள் முதல் படியை விசுவாசத்தோடு எடுத்து வைக்கும் போது, ஆண்டவர் ஆசீர்வதித்து வழிநடத்துகிறார்.

அநேகமாக, 'பயிற்சி மரம்' இல்லாததற்கு காரணம், நாம் கேட்கவில்லை, தட்டவில்லை, தேடவில்லை. அன்புடன் தேவ கட்டளைக்கு கீழுபடியும் போது, தேவன் நாம் எண்ண முடியாத அளவிற்கு வாய்ப்புக்களை அளிக்கிறார்.

இந்த யுக்த்தியானது உங்களுக்கு பிறரை முன்னேற்றப் பாதையில், பிரச்சனையில், திட்டங்களில், செயல்முறையில், மற்றும் ஜெபத்தில் வழிநடத்திச் செல்ல உதவும்".

- ஒரு தலைவரை ஜெபத்தோடு அந்த கூடுகை முடிக்க வேண்டிக்கொள்ளவும்.

“பயிற்சி மரத்திலுள்ள தலைவர்களுக்காகவும், நமது சிறு குழுவில் செய்த திட்டங்களுக்காகவும், நாம் வருகிற மாதங்களில் செயல் படுத்த இருக்கும் திட்டங்களுக்காகவும் ஜெபித்தல் வேண்டும்.

# பயிற்சி அட்டவணை

கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையை மூன்று நாள் கருத்தரங்கிற்கோ, அல்லது 10 வார பயிற்சி வகுப்புகளுக்காகவும் பயன்படுத்தலாம். ஒவ்வொரு பகுதியும் அட்டவணையில் ஒன்றரை மணிநே நேரம் எடுக்கும். பயிற்சியாளர்களுக்கு பயிற்சி கொடுக்கும் செயல்முறையில் பயன் படுத்தபட உதவும் இது பக்கம் 20ல் உள்ளபடி.

தலைவர்கள் பயிற்சி மாதம் ஒருமுறையும், அல்லது மாதம் இருமுறையும் அல்லது மூன்று நாள் கருத்தரங்கு என்ற முறையில் நடை பெறுகிறது. தற்பொழு குழுக்களை வழிநடத்தும் தலைவர்கள் மட்டும் கலந்து கொள்ள வேண்டும்.

## மூன்று நாள் அட்டவணை

| | Day 1 | Day 2 | Day 3 |
|---|---|---|---|
| **8:30** | நல்வரவு | சேர்ந்து பலத்தோடு | குழுக்களை உருவாக்குதல் |
| **10:00** | *இடைவேளை* | *இடைவேளை* | *இடைவேளை* |
| **10:30** | இயேசுவைப்போல் பயிற்சி அளி | நாடகப்போட்டி | குழு பெருக்குதல் |
| **12:00** | மதிய உணவு | மதிய உணவு | மதிய உணவு |
| **1:00** | இயேசுவைப்போல் வழிகாட்டுதல் | நற்செய்தி பகிர்தல் | இயேசுவை பின்பற்றுதல் |
| **2:30** | *இடைவேளை* | *இடைவேளை* | |
| **3:00** | பலப்படு | சீடர்களை | |

| | | | |
|---|---|---|---|
| | | உருவாக்குதல் | |
| **5:00** | இரவு உணவு | இரவு உணவு | |

## Weekly Schedule

| | | | |
|---|---|---|---|
| ***Week 1*** | நல்வரவு | ***Week 6*** | நற்செய்தி பகிர்தல் |
| ***Week 2*** | இயேசுவைப்போல் பயிற்சி அளி | ***Week 7*** | சீடர்களை உருவாக்குதல் |
| ***Week 3*** | இயேசுவைப்போல் வழிகாட்டுதல் | ***Week 8*** | குழுக்களை உருவாக்குதல் |
| ***Week 4*** | பலப்படு | ***Week 9*** | குழு பெருக்குதல் |
| ***Week 5*** | சேர்ந்து பலத்தோடு | ***Week 10*** | இயேசுவை பின்பற்றுதல் |

# 3

# இயேசுவை போல் வழிகாட்டுதல்

இயேசு கிறிஸ்து உலகத்திலே மிக சிறந்த தலைவர். அவரை போல ஒருவரும் அதிகமான நபர்களுக்கு தாக்கத்தை ஏற்படுத்தியதில்லை. மூன்றாம் பாடம், சிறந்த தலைவர்களுக்குரிய ஏழு குணாதிசயங்களை இயேசுவின் பாணியில் எடுத்துரைக்கிறது. அதன் பின் தலைவர்கள் தங்கள் தலைமைத்துவ வல்லமைகளையும் பலவீனங்களையும் எண்ணிப் பார்க்கின்றனர். இறுதியாக கூட்டு முயற்சியை ஊக்குவிக்க ஒரு விளையாட்டோடும், தலைமைத்துவ பகிர்தல் பாடத்தோடும் நிறைவு பெறுகிறது.

தலைவர்களின் இருதயத்தில் இருந்து எண்ணங்கள், எழும்பி மறைகிறது. எனவே, இயேசு எவ்வாறு சீடர்களை வழிநடத்தினார் என்பதை பார்த்து அதையே நாம் பின்பற்றுவோம். இயேசு அவர்களை கடைசிவரை நேசித்து, அவர்களது ஊழியத்தை நன்கு புரிந்து, பிரச்சனைகளை அறிந்து, தன்னை பின்பற்றுபவருக்கு ஒரு மாதிரியாக, தயவுடனும், ஆண்டவர் அவரது கீழ்படிதலை ஆசீர்வதிக்கிறார் என்பதை அறிந்து கொண்டு வாழ்ந்தார். எல்லாமே இதயத்திலிருந்து எழும்புவதால் நம் இதயத்தில் முதலில் தலைவர்களாக பாவித்தல் வேண்டும்.

## புகழ்

- தேவனை புகழ்ந்து இரண்டு பாடல்களை பாடி, ஒரு தலைவரை இந்த அமர்வுக்காக ஜெபிக்க அழைக்கவும்.

## முன்னேற்றம்

- தலைவர் ஒருவர் தனது சாட்சியை (3 நிமிடத்திற்கு )தமது ஊழியத்தை ஆண்டவர் எவ்வாறு ஆசீர்வதிக்கிறார் என்பதை பகிர்ந்து கொள்ள வேண்டும். குழுவானது அந்த தலைவருக்காகவும், அவரது ஊழியத்திற்காகவும் ஜெபம் செய்ய வேண்டும்.
- பதிலீடாக, முன்னேற்றம், பிரச்சனை, திட்டங்கள், செயல்முறை, ஜெபம் இவை அனைத்தையும் உட்கொண்ட ஒரு மாதிரி வகுப்பை ஒரு தலைவர் எடுத்துக்காட்டலாம்.

## பிரச்சனை

“உலகம் முழுவதும், பலவிதமான தலைமைத்துவ பண்புடைய தலைவர்கள் உள்ளார்கள். இயேசுவை பின்பற்றும் எனது தலைமைத்துவ பாணி என்ன?“

## திட்டம்

“இயேசு கிறிஸ்து உலகத்திலே மிக சிறந்த தலைவர். அவரை போல ஒருவரும் அதிகமான நபர்களுக்கு தாக்கத்தை ஏற்படுத்தியதில்லை. இந்த பாடத்தில் இயேசு எவ்வாறு மற்றவர்களை வழிநடத்தினார் என்பதை அறிந்து நாமும் அதையே பின்பற்றுவோம்.”

## திறனாய்வு

**நல்வரவு**

யார் சபையை கட்டுவது?

அது ஏன் முக்கியத்துவம்வாய்ந்தது?

இயேசு கிறிஸ்து தன் சபையை எவ்வாறு கட்டினார்?

ஆண்டவரில் பெலன் கொள்ளுதல் ✋

சுவிசேஷத்தை பகிர்ந்து கொள்ளுதல் ✋

சீடர்களை உருவாக்கு ✋

குழுக்களையும் சபைகளையும் துவங்குதல் 👋

தலைவர்களை உருவாக்குதல் 👋

*1கொரி 11:1 நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல, நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்.*

## இயேசுவைப்போல் பயிற்சி அளி

### இயேசு தலைவர்களுக்கு எவ்வாறு பயிற்சி அளித்தார் ?

முன்னேற்றம் 👋

பிரச்சனை👋

திட்டங்கள்👋

செயல்முறை👋

ஜெபம்👋

*லூக் 6:40 சீஷன் தன் குருவுக்கு மேற்பட்டவனல்ல, தேறினவன் எவனும் தன் குருவைப்போலிருப்பான்.*

### யார் சிறந்த தலைவர் என்று இயேசு சொன்னார் ?

*-மத் 20:25-*

*அப்பொழுது, இயேசு அவர்களைக் கிட்டவரச்செய்து: புறஜாதியாருடைய அதிகாரிகள் அவர்களை இறுமாப்பாய் ஆளுகிறார்கள் என்றும், பெரியவர்கள் அவர்கள்மேல் கடினமாய் அதிகாரஞ் செலுத்துகிறார்கள் என்றும், நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்.*

*26 உங்களுக்குள்ளே அப்படி இருக்கலாகாது; உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாயிருக்கக்கடவன்.*

*27 உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன்.*

*28 அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ் செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் என்றார்.*

"மிகச்சிறந்த தலைவர் ஒரு மிகச்சிறந்த சேவகர்."

☝ போர் வீரனை போல வணங்கி, சேவகனை போல இரு கரங்களை கூப்பவும்.

## சிறந்த தலைவரின் ஏழு பண்புகள் யாவை?

யோவான் 13:1-17

*1. பஸ்கா பண்டிகைக்கு முன்னே, இயேசு இவ்வுலகத்தைவிட்டுப் பிதாவினிடத்திற்குப் போகும்படியான தம்முடைய வேளை வந்ததென்று அறிந்து, தாம் இவ்வுலகத்திலிருக்கிற தம்முடையவர்களிடத்தில் அன்புவைத்தபடியே, முடிவுபரியந்தமும் அவர்களிடத்தில் அன்புவைத்தார்.*

*2. சீமோனின் குமாரனாகிய யூதாஸ்காரியோத்து அவரைக் காட்டிக் கொடுக்கும்படி பிசாசானவன் அவன் இருதயத்தைத் தூண்டினபின்பு, அவர்கள் போஜனம் பண்ணிக்கொண்டிருக்கையில்;*

*3. தம்முடைய கையில் பிதா எல்லாவற்றையும் ஒப்புக்கொடுத்தா ரென்பதையும், தாம் தேவனிடத்திலிருந்து வந்ததையும், தேவனிடத்திற்குப் போகிறதையும் இயேசு அறிந்து;*

*4. போஜனத்தை விட்டெழுந்து, வஸ்திரங்களைக் கழற்றிவைத்து, ஒரு சீலையை எடுத்து, அரையிலே கட்டிக்கொண்டு,*

*5. பின்பு பாத்திரத்தில் தண்ணீர் வார்த்து, சீஷருடைய கால்களைக் கழுவவும், தாம் கட்டிக்கொண்டிருந்த சீலையினால் துடைக்கவும் தொடங்கினார்.*

*6. அவர் சீமோன் பேதுருவினிடத்தில் வந்தபோது, அவன் அவரை நோக்கி: ஆண்டவரே, நீர் என் கால்களைக் கழுவலாமா என்றான்.*

*7. இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: நான் செய்கிறது இன்னதென்று இப்பொழுது நீ அறியாய், இன்மேல் அறிவாய் என்றார்.*

*8. பேதுரு அவரை நோக்கி: நீர் ஒருக்காலும் என் கால்களைக் கழுவப்படாது என்றான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: நான் உன்னைக் கழுவாவிட்டால் என்னிடத்தில் உனக்குப் பங்கில்லை என்றான்.*

*9. அதற்குச் சீமோன் பேதுரு: ஆண்டவரே, என் கால்களைமாத்திரமல்ல, என்கைகளையும் என் தலையையும்கூடக் கழுவவேண்டும் என்றான்.*

*10. இயேசு அவனை நோக்கி: முழுகினவன் தன் கால்களைமாத்திரம் கழுவவேண்டியதாயிருக்கும், மற்றப்படி அவன் முழுவதும் சுத்தமாயிருக்கிறான்; நீங்களும் சுத்தமாயிருக்கிறீர்கள்; ஆகிலும் எல்லாரும் அல்ல என்றார்.*

*11. தம்மைக் காட்டிக்கொடுக்கிறவனை அவர் அறிந்திருந்தபடியினால் நீங்களெல்லாரும் சுத்தமுள்ளவர்கள் அல்ல என்றார்.*

*12. அவர்களுடைய கால்களை அவர் கழுவினபின்பு, தம்முடைய வஸ்திரங்களைத் தரித்துக்கொண்டு, திரும்ப உட்கார்ந்து, அவர்களை நோக்கி: நான் உங்களுக்குச் செய்ததை அறிந்திருக்கிறீர்களா?*

*13. நீங்கள் என்னைப் போதகரென்றும், ஆண்டவரென்றும் சொல்லுகிறீர்கள், நீங்கள் சொல்லுகிறது சரியே, நான் அவர் தான்.*

*14. ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள்.*

*15. நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன்.*

*16. மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்ல. அனுப்பப்பட்டவன் தன்னை அனுப்பினவரிலும் பெரியவனல்ல.*

*17. நீங்கள் இவைகளை அறிந்திருக்கிறபடியினால், இவைகளைச் செய்வீர்களானால், பாக்கியவான்களாயிருப்பீர்கள்.*

## 1. மிக சிறந்த தலைவர்கள் மக்களை அன்பு செய்கின்றனர்.

“முதல் வசனத்தில் இயேசுவும் அவருடைய சீடர்களும் அவர் சிலுவைக்கு செல்லும் முன், இராப்போஜனத்தை பகிர்ந்து கொள்கின்றனர். வேதம் சொல்லுகிறது, இயேசு அவர்களை கடைசி வரை அன்பு செய்து இராப்போஜனத்தில் எவ்வளவு அன்பு செய்தார் என்பதையும் எடுத்துக் காட்டினார்.

தலைவர், தவறு செய்யும் மக்களை அன்பு செய்வது கடினம். ஆனால் இயேசுவோ இறுதிவரை தன் சீடர்களை நேசித்தார்.

தலைவர், தன்னை குற்றம் சாட்டுபவரை நேசிப்பது கடினம். ஆனால் இயேசுவோ இறுதிவரை தன் சீடர்களை நேசித்தார்.

தலைவர், தன்னை புறக்கணிக்கும் மக்களை நேசிப்பது கடினம். ஆனால் இயேசுவோ இறுதிவரை தன் சீடர்களை நேசித்தார்.

☝ மக்களை நேசி.

கரங்களைகொண்டு மார்பை தட்டிக்கொள்ளவும்.

## 2. மிக சிறந்த தலைவர்கள் தங்கள் ஊழியத்தை அறிந்திருக்கிறார்கள்.

“மூன்றாவது வேத வசனத்தில், ஆண்டவராகிய இயேசு கிறீஸ்து, எங்கிருந்து வந்தார், எங்கு செல்கிறார் மற்றும் தேவன் அவருக்கு அனைத்து வல்லமை அளித்திருந்தார் என்பதை அறிந்திருந்தார்.

இயேசு ஒரு நோக்கத்திற்காக இந்த பூமிக்கு வந்திருப்பதை அறிந்திருந்தார்.

இயேசு இந்த பூமியில் நம் பாவங்களுக்காக மரிக்க வந்தார் என்பதை அறிந்திருந்தார்.

இயேசு, இந்த பூமியில் சாத்தானை வென்று நம்மை தேவனிடம் சேர்க்கும் பணியை செய்ய வந்தார் என்பதை அறிந்திருந்தார்.

ஒவ்வொருவருக்கும் இந்த பூவுலகில் ஒரு தனிப்பட்ட ஊழியத்தை வைத்துள்ளார். மிக சிறந்த தலைவர்கள் தங்கள் ஊழியத்தை அறிந்து, மற்றவர்கள் அவரை பின்பற்றும்படி செய்வார்.”

✋ ஊழியத்தை அறிந்து கொள்.

போர் வீரனைபோல் வணக்கம் செலுத்தி தலை அசைத்து “ஆம்” என்று சொல்லவும்.

### 3. மிக சிறந்த தலைவர்கள் தங்களை பின்பற்றுபவர்களுக்கு பணியாளராக இருப்பர்.

“நான்காவது வேத வசனத்தில் அவர் பந்தியிலிருந்து எழுந்த ஒரு துண்டை அவர் இடுப்பில் அணிந்து கொண்டு சீடர்களின் பாதத்தை கழுவ துவங்கினார்.

உலகத்தில் உள்ள தலைவர்கள் தங்களுக்கு பிறர் சேவை செய்ய வேண்டும் என்று எண்ணுவர். ஆனால் இயேசுவோ தன்னை பின்பற்றுபவருக்கு சேவை செய்தார்.

உலகத் தலைவர்கள் தாங்கள் வழி நடத்துபவர்கள் மேல் அதிகாரம் செலுத்துவர். இயேசுவோ தன்னை பின்பற்றுபவரை பலப்படுத்திக் கொண்டிருந்தார்.”

"உலகத்தில் உள்ள தலைவர்கள் கவனம் அவர்கள் மீதே வைத்துக் கொள்வார்கள். தங்களை பின்பற்றுபவர்கள் மேல் அல்ல. இயேசுவோ தன்னை பின்பற்றுபவர்களுடைய தேவைமேல் கவனமாக இருந்தார். பிறருடைய தேவைகளை நிறைவேற்றும்போது, தனது தேவைகள் நிறைவேற்றப்படும் என்பதை அறிந்திருந்தார். ஆண்டவர் நம்மை ஆசீர்வதிப்பது பிறரை ஆசீர்வதிப்பதற்காகவே."

☝ தங்கள் சீடர்களுக்கு பணி செய்யுங்கள்.

இரு கரம் கூப்பி வணக்கம் செலுத்தவும்.

## 4. மிக சிறந்த தலைவர்கள் அன்போடு தவறுகளை எடுத்துக் காட்டுகின்றனர்.

" 6 லிருந்து 9 முடிய வசனங்களில் பேதுரு பல தவறுகளை செய்ததையும் இயேசு அன்போடு அதை சரி செய்ததையும் காண்கிறோம்.

பேதுரு இயேசு தனது பாதத்தை கழுவக்கூடாது என்றார். இயேசுவோ அவர்களது உறவுக்கு அது தேவை என்று அன்போடு அந்த எண்ணத்தை மாற்றினார்.

பேதுரு தன்னை முழுவதுமாக கழுவும் படியாக இயேசுவிடம் கேட்டுக்கொண்டார். இயேசுவோ அன்போடு பேதுரு சுத்தமாக இருக்கிறார் என்று எடுத்துரைத்தார்.

உலகத்திலுள்ள தலைவர்கள் மற்றவர்களை, குறை, குற்றம் சொல்லி கீழே தள்ளுவர். இயேசுவோ அன்போடு தன்னை பின்பற்றுபவர்களை ஊக்கப்படுத்தி ஜனங்களை முன்னே கொண்டு செல்கிறார்.

☝ அன்போடு தவறுகளை திருத்தவும்.

ஆள்காட்டி விரலையும், பெரு விரலையும் கொண்டு இதய வடிவத்தை உண்டாக்கவும்.

## 5. மிக சிறந்த தலைவர்கள் தங்கள் குழுவிலுள்ள நிகழ்கால பிரச்சனைகளை அறிந்திருக்கிறார்கள்.

“10, 11 வசனங்களில், வேதம் சொல்லுகிறது, யூதாஸ் அவரை காட்டிக் கொடுப்பார் என்றும் அவன் ஒரு பிரச்சனை என்றும் அறிந்திருந்தார்.

பிரச்சனை எங்குள்ளது என்று அறிந்து கொண்டு அதை மேற்கொள்வது தலைமைத்துவ பண்பின் சிறந்த அம்சமாகும். பல தலைவர்கள் பிரச்சனைகளிலிருந்து தங்களை விலக்கிக் கொள்வர், ஆனால் அது பிரச்சனையை அதிகப்படுத்தும். தீமைக்கு தேவன் பதில் அளிப்பார் என்று அறிந்து இயேசு, யூதாஸ் விஷயத்தில் மிகவும் அடக்கமாக செயல் பட்டார்.”

☝ குழுவின் பிரச்சனைகள்.

தலை வலி இருப்பது போல் இரு கைகளையும் தலையின் இரு பக்கமும் வைத்துக்கொள்ளவும்.

## 6. மிக சிறந்த தலைவர்கள் நல்ல உதாரணமாக இருப்பார்கள்.

“12 லிருந்து 16 வசனம் முடிய, இயேசு ஏன் சீடர்களுடைய பாதத்தை கழுவினார் என்பதையும், தலைவராக இருந்தும், பணியாளரின் பணியை செய்த காரியத்தையும் விளக்கினார். தலைமைத்துவம் என்பது ஒருவருக்கொருவர் பணி செய்வதே என்பதை எடுத்துக் கட்டினார்.

சீடர்கள் தங்களது தலைவர்களை பின்பற்றுகிறார்கள். நாம் இயேசுவை பின்பற்றும்போது, நம்மை பின்பற்றுபவர்களும் இயேசுவையே பின்பற்றுகிறார்கள்.”

☝ நல்ல உதாரணமாக இரு

வானத்தை நோக்கி, கைகளை உயர்த்தி “ஆம்” என்று சொல்.

## 7. மிக சிறந்த தலைவர்கள் தாங்கள் ஆசீர்வதிக்கப் பட்டவர்கள் என்று அறிந்திருக்கிறார்கள்.

“பதினேழாவது வசனத்தில், இயேசு தனது சீடர்களுக்கு பிறருக்கு பணி செய்யும் போது அவர்கள் ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்பதை எடுத்துரைத்தார்.

மற்றவர்களை வழி நடத்துவது கடினம் ஆனாலும் இயேசுவை பின்பற்றுபவர்கள் அவர்கள் ஆசீர்வதிக்கப் பட்டவர்கள் என அறிந்திருக்கிறார்கள்.

வழி நடத்துபவர்கள் தனிமையை உணரக் கூடும். ஆனால் இயேசு தனது பிரசன்னத்தால் அவர்களை வழிநடத்துகிறார்.

பின்பற்றுபவர்கள் தலைவர்களை எப்போதும் பாராட்டுவதில்லை ஆனால் இயேசுவோ ஆண்டவரின் துணை நமக்கு நிச்சயமாக உண்டு என்று வாக்களிக்கிறார்.

☝ அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் என அறிந்துகொள்ளுங்கள்.

கரங்களை உயர்த்தி தேவனை துதிக்கவும்.

## மனப்பாட வசனம்

*-யோவான் 13:14,15-*

*14. ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள்.*

*15. நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன்.*

- தலைவர்கள் நின்று கொண்டு வேதத்திலுள்ள மனப்பாட பகுதியை 6 முறை வேதத்தை படித்தும், 4 முறை பாராமலும் வசனத்தை அறிக்கை இடவேண்டும் (மொத்தம் 10 முறை). வசனம் சொல்வதற்க்கு முன், வசனப்பகுதியை சொல்ல வேண்டும். முடித்தபின் அமரவும்.
- இந்த வழிமுறையை பின்பற்றும் பொழுது, எந்த குழு தனது “செயல்பட்டு” பாடத்தை முடித்தார் என்பதை புரிந்து கொள்ளலாம்.

## செயல்முறை

- நான்கு நபர் குழுக்களாக தலைவர்களை பிரிக்கவும்.

“இப்போது இயேசு உபயோகித்த அதே பயிற்சிமுறைகளை நாமும் இந்த தலைமைத்துவ பாடத்தில் உபயோகிக்க இருக்கிறோம்.”

- 7-8 நிமிடங்களுக்கு அவர்கள் கற்றுக் கொள்வதை படிப்படியாக பகிர்ந்து கொள்ளவும்.

## முன்னேற்றம்

“சிறந்த தலைவர்களுக்குரிய ஏழு பண்புகளில் எது சுலபம் என்பதை பகிர்ந்து கொள்ளவும். “

## பிரச்சனை

“சிறந்த தலைவர்களுக்குரிய ஏழு பண்புகளில் எது கடினம் என்பதை பகிர்ந்து கொள்ளவும். “

## திட்டங்கள்

“அடுத்த 30 நாட்களுக்குள் ஒரு சிறந்த தலைவராக உருவாக உனது குழுவில் நீர் தனிப்பட்ட முறையில் கையாள இருக்கும் ஒரு யுக்தியை பகிர்ந்து கொள்”

- எல்லோரும் தங்கள் நண்பர்களுக்காக ஜெபிக்கும்படியாக திட்டத்தை குறித்துக் கொள்ள வேண்டும்.

## செயல்முறை

“அடுத்த 30 நாட்களுக்குள் ஒரு சிறந்த தலைவராக உருவாக தனிப்பட்ட முறையில் கையாள இருக்கும் ஒரு யுக்தியை பகிர்ந்து கொள்”

- எல்லோரும் தங்கள் நண்பர்களுக்காக ஜெபிக்கும்படியாக திட்டத்தை குறித்துக் கொள்ள வேண்டும்.

- ஒவ்வொருவரும் தங்கள் செயல்முறையை விளக்கியபின் குழுவில் உள்ள அனைவரும் எழுந்து நின்று, மனப்பாட வசனத்தை அறிக்கை இடுவார்கள்.

## ஜெபம்

“ஒருவருக்கொருவர் அடுத்த 30 நாட்களில் சிறந்த தலைவராக மாற செயல்படுத்த இருக்கும் திட்டங்களையும் செயல்பாட்டையும் குறித்து ஜெபிக்கவும்.”

# இறுதி

## சின்லோன்

- சின்லோன் திறமையை குழுவிற்கு எடுத்து காட்ட ஆறு பேரிடம் கூறவும். அந்த அறையில் ஒரு வட்டம் அமைக்க உதவி செய்யவும்.

“ஒரு புகழ்வாய்ந்த சின்லோன் குழுவை தங்கள் திறமையை வெளிப்படுத்துவதற்கு நான் தயார் செய்துள்ளேன். நாம் கரங்களை தட்டி அவர்களை உற்சாகப்படுத்துவோம்.”

- விளையாட்டு வீரர்களை இரண்டு வரிசையாக நிறுத்தி, அவர்கள் முன்னே ஒரு ‘தலைவனை’ நிறுத்தவும்.

“கிரேக்க முறையில் சின்லோன் எப்படி விளையாடுவது என்பதை இந்த குழு நமக்கு எடுத்துக் காட்டப்போகிறது. அவர்கள் பின்பற்றும் விதிமுறைகளை கவனிக்கவும். ஒவ்வொருவரும் தலைவருக்கு நேராக சின்லோன் பந்தை உடைத்து தள்ள வேண்டும். தலைவர் அதை திரும்ப வீரர்களிடம் உதைப்பார். தலைவரிடம் அல்லாமல், பந்தை பிறரிடம் தள்ளப்பட்டால் அவர்களுக்கு தண்டனை அளிக்கப்படும்.”

- கிரேக்க முறையில் சின்லோன் விளையாட அழைக்கப்பட்ட குழுவிடம் சொல்ல வேண்டும். இவ்வாறு விளையாடுவது, வீரர்களிடையே குழப்பத்தை உண்டாக்கும். தலைவரிடத்தில் அல்லாமல் பந்தை பிறரிடத்தில் எறிபவரை பிடித்து “தண்டனை!”

என்று கூறி நகைச்சுவையோடு தவறை சுட்டிக்காட்டி மீண்டும் தலைவரிடம் பந்தை உதைக்க உதவ வேண்டும்.

"சின்லோன் இவ்வாறு விளையாடுவதினால் என்ன ஆனது? (இந்த் விதிகளோடு விளையாடும்போது, வீரர்கள் சோர்ந்து போனார்கள்.)

- இப்போது "தலைவரை" மத்தியில் நிறுத்தி ஒரு சின்லோன் வட்டமாக வீரர்கள் நிற்க வேண்டும்.

"எபிரேய முறைப்படி குழுவானது இப்போது விளையாடும். தலைவர் எல்லாவற்றையும் கட்டுக்குள் வைப்பார். முன்படியே, ஒவ்வொருவரும் தலைவருக்கு நேராக சின்லோன் பந்தை உடைத்து தள்ள வேண்டும். தலைவர் அதை திரும்ப வீர்ர்களிடம் உதைப்பார்."

- இப்போது குழுவானது நன்றாக விளையாடும் ஆனால் தலைவர் விரைவில் சோர்ந்து போவார். தலைவரிடத்தில் அல்லாமல் பந்தை பிறரிடத்தில் உதைப்பவரை பிடித்து "தண்டனை!" என்று கூறி நகைச்சுவையோடு தவறை சுட்டிக்காட்டி மீண்டும் தலைவரிடம் பந்தை உதைக்க உதவ வேண்டும்.

"சின்லோன் இவ்வாறு விளையாடுவதினால் என்ன ஆனது?"

(இந்த விதிகளோடு விளையாடும்போது, தலைவர் சோர்ந்து போனார். வீரர்கள் பல தவறுகளை புரிந்தனர். உற்சாகம் இல்லை.)

- இப்போது தலைவரை சேர்த்து ஒரு சின்லோன் வட்டமாக வீரர்கள் நிற்க வேண்டும். இப்போது தலைவரிடத்தில் பந்தை அவர்கள் உதைத்து தள்ள வேண்டியதில்லை. எப்போதும் விளையாடும் முறையில் அவர்கள் விளையாட அனுமதியும்.

"இப்போது, உண்மையான எபிரேய முறையில் எப்படி விளையாடுவது என்பதை நமது பிரபலமான குழு விளையாடிக் காட்டும்."

- கருத்தரங்கிற்கு வந்திருக்கும் எல்லோரும் பார்த்து ரசிக்கும் வரை அவர்களை விளையாட அனுமதியுங்கள்.

""சின்லோன் இவ்வாறு விளையாடுவதினால் என்ன ஆனது? (எல்லோரும் சேர்ந்து சந்தோஷமாக வெற்றிகரமாகவும் விளையாடினார்கள்.)

சின்லோன் விளையாண்ட மூன்றாவது விதம் நன்றாக பணிபுரியும் தலைமைத்துவாத்தை விவரிக்கிறது. குழுவில் எல்லோரும் பங்கேற்க தலைவர் வழிவகுக்கிறார். தலைவர் எல்லாவற்றையும் சமாளிப்பதில்லை. எல்லோருக்கும் அவர்களது பாணியை உபயோகிக்க சுகந்திரம் அளிக்கிறார். இதுவே இயேசு கிறிஸ்து கடைபிடித்த முறையாகும்."

- தலைவரை ஜெபத்தோடு முடிக்கும்படி அழைக்கவும்.

"உங்களுடைய சிறு குழுவில் அடுத்த 30 நாட்களுக்கு செயல் படுத்த இருக்கும் திட்டங்களுக்காகவும், யுத்திகளுக்காகவும் இயேசுவை போல் சிறந்த தலைவராக மாறவும் ஜெபிக்க வேண்டும்."

*சின்லோன் என்பது பொதுவாக மியான்மரில் ஆண்களால் விளையாடும் விளையாட்டு. பங்கேற்பாளர்கள் ஒரு வட்டம் செய்து தங்களது கால்களை பயன்படுத்தி ஒருவர் ஒரு பிரம்பு பந்தை தட்டுவார்கள். இந்த விளையாட்டின் இலக்கு, முடிந்தவரை பந்தை தரையில் கீழே விழாமல் விளையாடுவது. வீரர்கள் பெரும்பாலும் சிறப்பு திறமையால் மற்றவர்களை கவருவார்கள். பாஸ் உயரம் மற்றும் துல்லியத்தை பார்வையாளர்களின் கைதட்டலை கொண்டுவரும்.

மக்கள், ஆசியா முழுவதும் சின்லோன் விளையாடுவார்கள். ஒவ்வொரு தேசத்திலும் வெவ்வேறு பெயரால் அழைக்கப்படுகிறது. நீங்கள் பயிற்சி அளிக்கும் இடத்தில் உள்ள இந்த விளையாட்டின் பெயரை கண்டு பிடிக்கவும்.

நீங்கள் பயிற்சி அளிக்கும் இடத்தில் சின்லோன் போன்ற விளையாட்டு இல்லை என்றால், பந்து அல்லது பலூனை பயன்படுத்தலாம்.



# 4

# பலப்படு

நீங்கள் பயிற்சியளிக்கும் தலைவர்கள் குழுக்களை தலைமை தாங்குகிறார்கள் மற்றும் தலைவர்கள் எவ்வளவு கோரிக்க விடுபவர்களாக இருக்கிறார்கள் என்பதை கற்கின்றனர். தலைவர்கள் குழுவின் வெளியிலிருந்து ஆன்மீக போராட்டத்தை எதிர் கொள்கிறார்கள், குழுவின் உள்ளே இருந்து மனோபாவ வேறுபாட்டை சந்திக்கிறார்கள். சக்தி நிறைந்த தலைமைத்துவத்தின் முக்கிய அம்சம் என்னவென்றால், வெவ்வேறு மனோபாவங்களை புரிந்து கொண்டு அவர்களோடு எப்படி சக்தி நிறைந்த வழியில் வேலை செய்வது என்பது தான். தலைவர்களுக்கு வெவ்வேறு மனோபாவங்களை எப்படி புரிந்து கொள்வது என்பதை "பலப்படு", என்ற பாடம் கற்பிக்கிறது. ஆண்டவர் நம்மை எப்படி உருவாக்கியிருக்கிறார் என்று அறிந்தவுடன், நாம் அவருள் எப்படி பலப்படுவது என்று புரியும்.

எட்டு விதமான மனோபாவங்கள் உண்டு, அவை: சிப்பாயி, நாடுபவர், மேய்ப்பன், விதைப்பவன், மகன்/மகள், புனிதர், பணியாளர், மேலாளர். தலைவர்களை தங்கள் மனோபாவத்தை கண்டுபிடித்தப்பின், பயிற்சியாளர் ஒவ்வொரு மனோபாவத்திற்கும் அதன் வல்லமைகளையும், பலவீனங்களையும் எடுத்துரைப்பார். ஆண்டவர் தங்கள் கலாச்சார மனோபாவத்தை அன்பு செய்கிறார் என்று பலர் நினைக்கிறார்கள். மற்ற தலைவர்கள், தலைமைத்துவ ஆற்றல், ஒருவன் மனோபாவத்தின் அடிப்படையில் அமைகிறது. இந்த நம்பிக்கைகள் தவறு. பாட இறுதியில் தலைவர்கள் மற்றவர்களை மக்களாக பாவிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு முடிவடைகிறது. தலைமைத்துவ பயிற்சி ஒவ்வொரு தனிப்பட்ட நபரின் தேவைக்கு பதில் கொடுக்க வேண்டும். எல்லோருக்கும் ஒரே மருந்து வேலை செய்யாது.

## புகழ்

- இரண்டு துதி பாடல்களை சேர்ந்து பாடவும்.கருத்தரங்கை அசீர்வதிக்க ஒரு மதிப்பிர்கூரிய தலைவர் ஜெபிக்க வேண்டும்.

## முன்னேற்றம்

- தலைவர் ஒருவர் தனது சாட்சியை (3 நிமிடத்திற்கு )தமது ஊழியத்தை ஆண்டவர் எவ்வாறு ஆசீர்வதிக்கிறார் என்பதை பகிர்ந்து கொள்ள வேண்டும். குழுவானது அந்த தலைவருக்காகவும், அவரது ஊழியத்திர்காகவும் ஜெபம் செய்ய வேண்டும்.
- பதிலீடாக, முன்னேற்றம், பிரச்சனை, திட்டங்கள், செயல்முறை ,ஜெபம் இவை அனைத்தையும் உட்கொண்ட ஒரு மாதிரி வகுப்பை ஒரு தலைவர் காட்டலாம்.

## பிரச்சனை

“எல்லா சீடர்களும் ஒரே மாதிரியாக செயல்படுவார்கள், எதிர்த்து செயல்படுவார்கள் என்ற தவறான என்னத்தை தலைவர்கள் வைத்திருக்கிறார்கள். ஆனால் ஆண்டவர் எல்லோரையும் வெவ்வேறு மனோபாவத்தோடு உருவாக்கியிருக்கிறார். சக்தி நிறைந்த தலைமைத்துவத்தின் முக்கிய அம்சம் என்னவென்றால், வெவ்வேறு மனோபாவங்களை புரிந்து கொண்டு அவர்களோடு எப்படி சக்தி நிறைந்த வழியில் குழுவாக வேலை செய்வது என்பது தான்.

இயேசு கிறிஸ்து ஒரு மகன், அவருடைய குடும்பம் ஒற்றுமையோடும் அன்போடும் இருக்க விரும்புகிறார். வெவ்வேறு மனோபாவங்களை புரிந்து கொண்டால் நாம் மற்றவரை அதிகம் அன்பு செய்யலாம்.“

## திட்டங்கள்

“இப்பாடத்தில் நாம் எட்டு வெவ்வேறு மனோபாவங்களை குறித்து படிப்போம். ஆண்டவர் உங்களுக்குக் கொடுத்த மனோபாவங்களை நீங்கள் கண்டுகொள்வீர்கள். மற்றும் மற்றவர்கள் அவர்களது மனோபாவங்களை கண்டுபிடிக்க உதவுவீர்கள். ஆண்டவர் அவர்களை எப்படி உருவாக்கியிருக்கிறார் என்பதை புரிந்த ஒவ்வொரு விசுவாசியும் ஆண்டவருக்குள் பலப்படலாம்.”

## திறனாய்வு

### நல்வரவு

யார் சபையை கட்டுவது?

அது ஏன் முக்கியத்துவம்வாய்ந்தது?

இயேசு கிறிஸ்து தன் சபையை எவ்வாறு கட்டினார்?

ஆண்டவரில் பெலன் கொள்ளுதல் ✋

சுவிசேஷத்தை பகிர்ந்து கொள்ளுதல் ✋

சீடர்களை உருவாக்கு ✋

குழுக்களையும் சபைகளையும் துவங்குதல் ✋

தலைவர்களை உருவாக்குதல் ✋

*1கொரி 11:1 நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல, நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்.*

## இயேசுவைப்போல் பயிற்சி அளி

இயேசு தலைவர்களுக்கு எவ்வாறு பயிற்சி அளித்தார் ?

முன்னேற்றம் ✋

பிரச்சனை✋

திட்டங்கள்✋

செயல்முறை✋

ஜெபம்✋

*லூக் 6:40 சீஷன் தன் குருவுக்கு மேற்பட்டவனல்ல, தேறினவன் எவனும் தன் குருவைப்போலிருப்பான்.*

## இயேசுவைப்போல் வழிநடத்து

## யார் சிறந்த தலைர்வர் என்று இயேசு சொன்னார் ?

## சிறந்த தலைவரின் ஏழு பண்புகள் யாவை?

1. மிக சிறந்த தலைவர்கள் மக்களை அன்பு செய்கின்றனர்.
2. மிக சிறந்த தலைவர்கள் தங்கள் ஊழியத்தை அறிந்திருக்கிறார்கள்.
3. மிக சிறந்த தலைவர்கள் தங்களை பின்பற்றுபவர்களுக்கு பணியாளராக இருப்பர்.
4. மிக சிறந்த தலைவர்கள் அன்போடு தவறுகளை எடுத்துக் காட்டுகின்றனர்.
5. மிக சிறந்த தலைவர்கள் தங்கள் குழுவிலுள்ள நிகழ்கால பிரச்சனைகளை அறிந்திருக்கிறார்கள்.
6. மிக சிறந்த தலைவர்கள் நல்ல உதாரணமாக இருப்பார்கள்.
7. மிக சிறந்த தலைவர்கள் தாங்கள் ஆசீர்வதிக்கப் பட்டவர்கள் என்று அறிந்திருக்கிறார்கள்.


யோவான் 13:14,15

*14. ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள்.*
*15. நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன்.*

## எந்த மனோபாவத்தை ஆண்டவர் உங்களுக்கு தந்திருக்கிறார்?

- தலைவர்களை ஒரு வெள்ளை காகிதத்தின் மேல் ஒரு வட்டம் வரையும் படி கூறவும்.


"நான் வரையும் வட்டமானது உலகத்தில் உள்ள அனைத்து மக்களையும் குறிக்கிறது."



- தலைவர்கள், வட்டத்தை இரண்டு சம பாகமாக பிரிக்கும்படி ஒரு மேற்கொட்டை வரையும்படி கூறவும். வலது புறத்தில் “உறவுகள்” என்றும், இடது புறத்தில் “ பணி” என்றும் குறிப்பிடவும்.

“எல்லா மக்களும் இந்த இரண்டு விதமான குழுக்களுக்குள் அடங்குவார்கள். உறுவுகளை முக்கியப்படுத்துகிற குழு, பணியை முக்கியப்படுத்துகிற குழு. ஆண்டவர் இருதரபட்ட மக்களையும் படைத்தார், இது அவருடைய செயல். நீர் எப்படிப்பட்ட நபர் என்பதை குறிக்கும்படி ஒரு புள்ளியை அந்த கோட்டில் தெரிந்துகொள்.”

(பணியை முக்கியத்துவ படுத்துகிற நபர், இடது பக்கமாக புள்ளியை தெரிந்துகொள்வார். மாறாக உறவுகளை முக்கியத்துவ படுத்துகிற நபர், வலது பக்கமாக புள்ளியை தெரிந்துகொள்வார். இறங்கும் முக்கியம் என்று எண்ணுபவர் நடுப்பகுதியை தெரிந்துகொள்கிறார், ஆனால் ஒருபுறமாக இருக்க வேண்டும் நடுவில் அல்ல.)





“நண்பரோடு நீ தெரிந்து கொண்ட புள்ளியைப்பற்றி பகிர்ந்து கொள். 5 நிமிடங்கள் வரை எடுத்துக் கொள்ளவும்.”

- வட்டத்தை நான்கு சம பாகமாக பிரிக்கும்படி மேலிருந்து கீழாக ஒரு நேர்கோட்டை வரையவும். மேல்பகுதி “பரந்த மனம் கொண்டவர்” (Extrovert) மற்றும் கீழ்பகுதியில் “தற்சோதனை செய்பவர்” (Introvert) என்று குறிப்பிடவும்.

உலகிலுள்ள அனைவரும் இந்த இரு குழுவிற்குள் அடங்குவார்கள். ஒருவரை விட மற்றொருவர் சிறந்தவர் அல்ல. அது ஆண்டவரின் படைப்பு.


மேற்கோட்டில் உன்விருப்பத்தை குறிக்கும் ஒரு புள்ளியை தெரிந்துகொள்.”




(வெளிப்புறமான மனிதன் வட்டத்தின் மேற்புறமாக புள்ளியை வைப்பான். உட்புரமான மனிதன் வட்டத்தின் கீழ்ப்பாகம் நோக்கி புள்ளி வைப்பான். இரு புரமனிதன் நடுவில் ஒரு புறத்தின் பக்கமாக புள்ளியை வைக்க வேண்டும், நடுவில் அல்ல.)

“நண்பரோடு நீ தெரிந்து கொண்ட புள்ளியைபற்றி பகிர்ந்து கொள். 3 நிமிடங்கள் வரை எடுத்துக் கொள்ளவும்.”

- இப்போது குறுக்காக இரண்டு கோடுகளை வரையக்கூருங்கள். இப்போது வட்டத்திற்கு எட்டு பாகங்கள் இருக்கும்.
- மனோபாவம் தெரிந்து கொள்ள தலைவர்கள் அந்த புள்ளியை சேர்த்து ஒரு புள்ளியிடப்பட்ட கோட்டை வரைய வேண்டும்.
- கீழிருக்கும் முழுமை அடைந்த படம், ஒரு தேடுபவர் மனோபாவத்தை குறிக்கிறது.




- 9:00-10:30 துண்டிளிருந்து துவங்கி, கடிகாரத்தை போல் எட்டு விதமான மனோபாவங்களை விளக்கவும்.

## சிப்பாயி

- பணிகளைசெய்பவன், சிறிது வெளிப்புரமாணவன்.
- சாதகமானவை: வெற்றியடைவதற்கு என்னை தேவை என்று பார்த்தல், உறுதி மற்றும் மாண்புமிகுந்த, “எப்படியாவது செய்ய வேண்டும்” என்ற மனப்போக்கு.
- எதிர்மறையானவை: அதிகாரம் செலுத்துதல், உணர்சியின்மை, போர்களை வெல்லலாம் ஆனால் யுத்தத்தில் தோல்வியடைவார்கள்.

## நாடுபவர்

- வெளுயப்புரமானவர், உறவை விட, பணியை அதிகமாக நாடுபவர்.
- சாதகமானவை: நல்ல வாய்ப்புக்களை காண்பவர், நண்பர்களை உருவாக்குதல், தொழில்முயற்சியாளர்.

- எதிர்மறையானவை: மகிழ்ச்சியை நாடலாம், ஒரு விஷயத்தை கவனமோடு செய்ய கடினமாக இருக்கலாம், புதியது எப்போதும் நல்லது என்று நினைக்கலாம்.

## மேய்ப்பன்

- வெளுயப்புரமானவர், பணியை விட, உறவை அதிகமாக நாடுபவர்.
- சாதகமானவை: மக்களின் ஆன்மீக தேவையை பார்ப்பவர், குழுக்களை தலைமை செய்வதை விரும்புகிறவர், மக்களின் உணர்ச்சி போராட்டங்களை நன்றாக கட்டுப்பாட்டில் ஊக்குவிக்கிறவர்.
- எதிர்மறையானவை: முதலாளியாக தோன்றலாம், கூட்டங்களை துவக்கலாம், இருக்கும் தலைவர்களோடு ஒத்துழைக்க போராடலாம்.

## விதைப்பவன்

- உறவுகளை நாடுபவன், வெளிப்புரத்தான்.
- சாதகமானவை: மக்களின் திறமையை காண்பவன், பயிற்சி அளிப்பவர், சுய முன்னேற்றத்தில் ஈடுபடுபவர்.
- எதிர்மறையானவை: சச்சரவை உண்டாக்கலாம், ஊக்குவிப்பால் போராடலாம், பிடித்த விஷயங்களை பற்றி அடிக்கடி பேசுவது.

## மகன்/மகள்

- உறவுகளை நாடுபவன், உட்புரப்பட்டவர்.
- சாதகமானவை: மற்றவர்களை குடும்பத்தில் ஒன்றாக உணர என்ன தேவை என்று பார்ப்பவர், சமாதானத்தை நாடுபவர், அம்மனிதனின் முக்கியத்துவத்தை எடுத்துரைப்பவர்
- எதிர்மறையானவை: அவருடைய குடும்பம் “உன்னதமானது” என்று நினைக்கலாம், பொறாமை, பாதுகாப்பற்ற எண்ணம்.

புனிதர்

- உறவுகளை சிறிது அளவு அதிகம் நாடுபவன், உட்புரத்தார்.
- சாதகமானவை: மக்கள் ஆண்டவரோடு எப்படி இணைப்பார்கள் என்பதை காண்பவர், மரபுகளை கடைபிடிப்பவர், சமூகத்தின் நீதிக்குரல்.
- எதிர்மறையானவை: உங்களைவிட மிக “புனிதமாக” தோன்றுவார், மற்றவர்களை ஏற்றுக்கொள்வதில் போராடுபவர், சிலபோது அதிக சட்ட மனப்பான்மை உடையவர்.

## பணியாளர்

- பணிகளை நாடுபவர், அதிகம் உட்புரப்பட்டவர்.
- சாதகமானவை: மக்களின் தேவைகளை எப்படி பூர்த்தி செய்வது என்று பார்ப்பவர், விசுவாசம் உள்ளவர், திரை மறைவில் நன்றாக பணி செய்பவர்.
- எதிர்மறையானவை: தங்கள் குடும்பத்தை விட்டு மற்றவர்களுக்கு பணிகளை செய்பவர், மாற்றத்தை மெதுவாக ஏற்பவர், பெறிய படத்தை காண தவறுபவர்.

## மேலாளர்

- பணிகளை நாடுபவர், அதிகம் உட்புரப்பட்டவர்.
- சாதகமானவை: வளத்தை எவ்வாறு ஒழுங்குப்படுத்தல் என்று காண்பவர், ஞானம் உள்ளவர், நடைமுரறைகுரியவர்.
- எதிர்மறையானவை: நிர்வாக கட்டுப்பாடுகளால் சோர்வடயலாம், பச்சாதாபம் இன்மை, மக்களின் தேவையை விட, சங்கத்தின் தேவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தல்.

“உங்களது நண்பனிடம் நீங்கள் எட்டில் எந்த மனோபாவம் உடையவர்கள் என்று விவரித்து உதாரணங்களை கொடுக்கவும்.”

## எந்த மனோபாவத்தை ஆண்டவர் மிகவும் அன்பு செய்கிறார்?

- தலைவர்கள் இதை குறித்து விவாதம் செய்யட்டும். அவர்களுடைய பதில் அவர்கள் கலாச்சாரத்தை பற்றி உங்களுக்கு நுண்ணறிவு கொடுக்கும். ஒவ்வொரு கலாச்சாரமும் இயேசு கிறிஸ்துவின் ஒன்று அல்லது இரண்டு பண்புகளை அதிகம் குறிக்கும்.

"ஆண்டவர் எல்லா மனோபாவங்களை உருவாக்கினார், அவர் இதை முடித்தபின், 'இது நல்லது" என்று சொன்னார். ஆதலால், இவை அனைத்தும் அவருக்கு பிரியமானது. "

## எந்த மனோபாவம் சிறந்த தலைவரை உருவாக்கக்கூடும்?

- இந்த கேள்வியை தலைவர்கள் கலந்துரையாடட்டும். வழக்கமாக கிறிஸ்துவின் இரண்டு அல்லது மூன்று படங்கள் பிரியமானதாக வெளிப்படும். தலைவர்கள் இவை தான் ஒரு தலைவனுக்கு தேவை என்று வாதம் செய்வார்கள். கிழக்கு மற்றும் மேற்கு பகுதிகளில் இதன் விடை அதிகமாக மாறுகிறது. குழுவானது தங்கள் எண்ணங்களை பகிர்ந்து கொண்ட பின்னே இதை அவர்களுக்கு விளக்குங்கள்.

"இந்த எட்டு விதமான மனோபாவத்தில் எது இருந்தாலும் ஒருவர் ஒரு அபூர்வமான தலைவராக மாறலாம் என்று கேட்டு பலர் ஆச்சிரியப்படுவார்கள். தலைமைத்துவம், மனோபவங்களின் அடிபப்டையில் இல்லை. நான் உங்களை அமெரிக்காவில் உள்ள எட்டு பெறிய சபைகளுக்கு கொண்டு செல்லமுடியும், அங்கே ஒவ்வொரு வாரமும் 5000 த்திற்கு மேற்பட்ட மக்கள் வருவார்கள். அவர்களிடம் கேட்டால் தங்கள் தலைவர் மிக சிறந்தவர் என்று சொல்வார்கள். அவர்களுடைய மெய்ப்பரோடு நீங்கள் பேசினால் ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு மனோபாவம் உண்டு என்று உணருவீர்கள். ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் வெவ்வேறு உருவத்தால் வழினடத்தப் படுகிரார்கள். மனோபாவம் தலைவர்களை உருவாக்குவதில்லை, ஒரு அணியை ஒன்று சேர்த்து அவர்கள் ஒன்றாக வேலை செய்து வெற்றி பெருவதே ஒரு நல்ல தலைவனின் அடையாளம். இயேசு உலகத்திலே

மிகச்சிறந்த தலைவர், அவரை பின்பற்றினால் நீங்களும் மிக சிறந்த தலைவர் ஆவீர்கள்."

### மனப்பாட வசனம்

### ரோமர் 12:4-5

*4. ஏனெனில், நமக்கு ஒரே சரீரத்திலே அநேக அவயவங்களிருந்தும், எல்லா அவயவங்களுக்கும் ஒரே தொழில் இராததுபோல,*

*5. அநேகராகிய நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்க, ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறோம்.*

- தலைவர்கள் நின்று கொண்டு வேதத்திலுள்ள மனப்பாட பகுதியை 6 முறை வேதத்தை படித்தும், 4 முறை பாராமலும் வசனத்தை அறிக்கை இடவேண்டும் (மொத்தம் 10 முறை). வசனம் சொல்வதர்க்கு முன், வசனப்பகுதியை சொலல் வேண்டும். முடித்தபின் அமரவும்.
- இந்த வழிமுறையை பின்பற்றும் பொழுது, எந்த குழு தனது "செயல்பட்டு" பாடத்தை முடித்தார் என்பதை புரிந்து கொள்ளலாம்.

## செயல்முறை

- தலைவர்களை நான்கு நபர் குழுக்களாக பிரித்து தலைமைத்துவ பாடத்தையும் செயல்முறையை ஒன்றாக உபயோகிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளவும்.
- 7-8 நிமிடங்களுக்கு அவர்கள் கற்றுக் கொள்வதை படிப்படியாக பகிர்ந்து கொள்ளவும்.

### முன்னேற்றம்

"இந்த எட்டு வித மனோபாவங்களுள் உங்களுக்கு மிகவும் பிடித்தது எது என்று கூறி சில உதாரணங்களை கொடுங்கள்."

### பிரச்சனை

"இந்த எட்டு வித மனோபாவங்களுள் உங்களுக்கு பிடிக்காதது எது என்று கூறி சில உதாரணங்களை கொடுங்கள்."

## திட்டங்கள்

"அடுத்த மாதம், உங்கள் குழுவில் வெவ்வேறு மனோபாவங்களை கண்டுப் படிக்க ஒரு திட்டத்தை பகிர்ந்து கொள்ளவும்"

- எல்லோரும் மற்றவர்களுடைய திட்டங்களை குறித்து பிறகு ஜெபிக்க வேண்டும்.

## செயல்முறை

- ""அடுத்த 30 நாட்களுக்குள் ஒரு சிறந்த தலைவராக உருவாக நீர் தனிப்பட்ட முறையில் கையாள இருக்கும் ஒரு யுக்தியை பகிர்ந்து கொள்"
- எல்லோறும் தங்கள் நண்பர்களுக்காக ஜெபிக்கும்படியாக திட்டத்தை குறித்துக் கொள்ள வேண்டும்.
- ஒவ்வொருவரும் தங்கள் செயல்முறையை விளக்கியபின் குழுவில் உள்ள அனைவரும் எழுந்து நின்று, மனப்பாட வசனத்தை அறிக்கை இடுவார்கள்.

## ஜெபம்

"ஒருவருக்கொருவர் அடுத்த 30 நாட்களில் சிறந்த தலைவராக மாற செயல்படுத்த இருக்கும் திட்டங்களையும் செயல்பாட்டையும் குறித்து ஜெபிக்கவும்."

# இறுதி

## அமெரிக்க பல்காட்டி பர்கர்

“உணவகத்தில் இருப்பதை போல தலைவர்களை நினைத்துகொள்ள கூறவும். அவர்கள் நான்கு நபர் குழுக்களாக பிரிந்து, ஒவ்வொருவரும் ஒரு “மேஜையில்” இருப்பது போல நினைக்கட்டும். நீங்கள் ஒரு மேஜை பணியாளர் என்றும், நீங்கள் அவர்காளது கோரிக்கையை நிறைவேற்றப்போவதாக கூறவும்.

- உங்கள் கையில் ஒரு துண்டை சுற்றிக்கொண்டு முத்ல் மேஜையிடம் சென்று சாப்பிட என்ன வேண்டும் என்று கேளுங்கள். அவர்கள் என்ன கேட்டாலும், “மன்னியுங்கள், அது எங்களிடத்தில் இல்லை, உங்களுக்கு அமெரிக்க பால்கட்டி பர்கர் கொடுக்கிறேன் ” என்று சொல்லுங்கள்.
- சில மேஜைகள் முடித்தபின், அவர்கள் அமெரிக்க பால்கட்டி பர்கர்றை கேட்பார்கள். ஏன் என்றால் உங்கள் இடத்தில் வேறு ஒன்றும் இல்லை என்று அவர்கள் புரிந்து கொள்வார்கள்.

“இந்த நாடகம் ஒரு பொதுவான தலைமைத்துவ தவறை எடுத்துக் கட்டுகிறது. எல்லோரும் ஒரே மாதிரியாக இருக்கவும் செயல்படவும் தலைவர்கள் எதிர்பார்கிறார்கள், ஆனால் ஆண்டவர் எல்லோரையும் வெவ்வேறு விதமாக உருவாக்கியிருக்கிறார். நல்ல தலைவர்கள் வெவ்வேறு மனோபாவம் உள்ளவர்களோடு எவ்வாறு பணி செய்வது என்பதை கற்றுக் கொள்கிறார்கள். எப்படி ஒத்துழைத்து ஒவ்வொருவருடைய வித்தியாசங்களை மதித்து இருப்பதை அவர்கள் கற்றுக் கொடுக்கிறார்கள்.

- ஆண்டவர் எல்லோரையும் வித்தியாசமாக உருவாக்கியதற்கு நன்றி செலுத்தி ஒரு தலைவரை பிராத்தனை செய்ய கூறுங்கள்.

# மேலும் படித்தல்

கீழ்காணும் தலைவர்கள் தீவிரமான தலைவர்களை உருவாக்கும் பயிற்சியில் பெற்றவர்கள். ஊழியத்தில் முதலாக வேதாகமத்தை

மொழிபெயர்த்து பிறகு இந்த ஏழு புத்தகங்களை மொழிபெயர்க்கலாம்.

கென் பிலஞ்சர்டு மற்றும் ஹட்ஜஸ் பில் "இயேசுவை போல் வழிநடத்து: உலகத்திலே மிக செம்மையான உதாரணத்தை பற்றிய பாடங்கள். Thomas Nelson, 2006.

கிளிண்டன் ஜே. ரபர்டு " தலைவனை உருவாக்குதல்" NavPress Publishing Group, 1988.

ராபர்டு ஈ. கொள்மான் "தி மாஸ்டேர்ப்லன் ஆப் இவன்கேலிசம் " Coleman, Robert E. *The Masterplan of Evangelism.* Fleming H. Revell, 1970.

Hettinga, Jan D. *Follow Me: Experiencing the Loving Leadership of Jesus.* Navpress, 1996.

Maxwell, John C. *Developing the Leader Within You.* Thomas Nelson Publishers, 1993.

Ogne, Steven L. and Nebel, Thomas P. *Empowering Leaders through Coaching.* Churchsmart Resources, 1995.

Sanders, J. Oswald. *Spiritual Leadership: Principles of Excellence for Every Believer*. Moody Publishers, 2007.

# 5

## சேர்ந்து உறுதியாயிறு

சென்ற பாடத்தில் தலைவர்கள் தங்களது மனோபாவத்தை தெரிந்து கொண்டார்கள். "சேர்ந்து உறுதியாயிறு", என்ற பாடம், தலைவர்களுக்கு என்ன விளக்கும் என்றால், எப்படி அவர்களது மனோபாவம் மற்றவர்களோடு உரையாடும் என்பது. உலகில் மக்கள் ஏன் எட்டு விதமான மனோபவாவங்களை கொண்டிருக்கிறார்கள்? சிலர் சொல்வர், நோவாவின் கப்பலில் எட்டு பேர் இருந்தது போல என்று, மற்றும் சிலர், திசைகட்டியின் எட்டு திசைகளினால் (வடக்கு, தெற்கு, கிழக்கு மேற்கு போன்றவை) ஆண்டவர் உருவாக்கினார் என்று. இதை சுலபாமா விவரிக்கலாம். தேவன் தனது சாயலில் மனிதனை உருவாக்கியதால் எட்டு விதமான மனோபாவம் உள்ள மக்கள் உள்ளார்கள். ஆண்டவர் சாயலை பார்க்க விரும்பினால் இயேசுவை பார்க்கும்படி வேதம் சொல்கிறது. உலகத்தில் உள்ள எட்டு விதமான மனோபாவமானது இயேசுவின் எட்டு சாயல்களை பிரதிபலிக்கிறது.

ஒரு சிப்பாய் போல, தேவனின் இராணுவத்தின் படை தளபதியாக இயேசு இருக்கிறார். அவர் தேடுபவராககவும், காணாமல் போனவர்களை தேடி கண்டுபிடிப்பவராகவும் இருக்கிறார். அவர் ஒரு மெய்ப்பராக இருந்து தன் பின்செல்லுபவர்களுக்கு உணவு, தண்ணீர் மற்றும் இளைபாறுதலை அளிக்கிறார். இயேசு விதைப்பவராக, தேவனுடைய வார்த்தயை நம் வாழ்வில் விதைப்பவராக இருக்கிறார். அவர் குமாரனாக இருக்கிறார், தேவன் அவரை அன்பார்ந்தவர் என அழைத்து நம்மை அவருக்கு கீழ்படியும்படி கட்டளை இடுகிறார். இயேசு நமது இரட்சகர், அவருடைய பரிசுத்த பிரதிநிதிகளாக வாழ அழைக்கிறார். அவர் ஒரு பணியாளராக மரணம் சந்திக்கும் வரை தேவனுக்கு கீழ்படிபவராக இருந்தார். இறுதியாக இயேசு ஒரு மேலாளராக இருக்கிறார். பல உவமைகளில் அவர் நேரம், பணம், மற்றும் மக்களுக்கு மேற்பார்வையாளராக இருந்தார்.

எவ்வொரு தலைவருக்கும் குழு அங்கத்தினரை ஒற்றுமையாக செயல்படுத்தும் பொறுப்பு உள்ளது. மக்களிடத்தில் குழப்பங்கள் உண்டாக

வாய்ப்பு உள்ளது, ஏனெனில் ஒவ்வொருவரும் உலகத்தை பார்கின்ற விதம் வெவ்வேறாக உள்ளது. குழப்பங்களை தீர்ப்பதற்கு இரண்டு பொதுவான வழிகள் உள்ளன, ஒருவருக்கொருவர் சச்சரவு இல்லாமல் பார்த்துக்கொள்வது, மூன்றாவதாக, எல்லோருடைய மனோபாவங்களையும் மதிக்கும் விதத்தில் பரிசுத்த ஆவியின் உதவியுடன் ஒரு தீர்வை கண்டு கொள்வது. இந்த உண்மையை நகைச்சுவை உடைய நாடகப் போட்டியுடன் இந்த அமர்வு முடிவடைகிறது. இயேசுவின் "எட்டு சாயல்கள்" உள்ள படம், பிறரை எவ்வாறு அன்பு செய்வது என்பதை புரிந்து கொள்ள உதவுகிறது. இயேசுவின் எல்லா சீடர்களின் பணியாகும்.

## புகழ்

- இரண்டு துதி பாடல்களை சேர்ந்து பாடவும்.கருத்தரங்கை அசீர்வதிக்க ஒரு மதிப்பிற்குரிய தலைவர் ஜெபிக்க வேண்டும்.

## முன்னேற்றம்

- தலைவர் ஒருவர் தனது சாட்சியை (3 நிமிடத்திற்கு )தமது ஊழியத்தை ஆண்டவர் எவ்வாறு ஆசீர்வதிக்கிறார் என்பதை பகிர்ந்து கொள்ள வேண்டும். குழுவானது அந்த தலைவருக்காகவும், அவரது ஊழியத்திர்காகவும் ஜெபம் செய்ய வேண்டும்.
- பதிலீடாக, முன்னேற்றம், பிரச்சனை, திட்டங்கள், செயல்முறை ,ஜெபம் இவை அனைத்தையும் உட்கொண்ட ஒரு மாதிரி வகுப்பை ஒரு தலைவர் காட்டலாம்.

## பிரச்சனை

"நாம் எட்டு விதமான மனோபாவங்களை கடைசி பாடத்தில் படித்தோம். இதன் மூலமாக சச்சரவு ஒரு குழுவில் எவ்வாறு உருவாகிறது என்பதை அறிந்துகொள்ளலாம். சச்சரவை தவிர வேற எந்த காரியமும் ஒரு ஊழியத்தை அதிவேகமாக நிறுத்துவதில்லை. மக்கள் மனதை புண்படுத்தும் வார்த்தைகளை ஒருவருக்கொருவர் பரிமாரிக் கொள்கிறார்கள். அப்பொழுது ஊழியமானது சோர்வடைந்த நிலைக்கு தள்ளப்படுகிறது.

## திட்டம்

"இயேசு நமது இரட்சகர், அவரை பின்செல்பவர்கள் அவருடைய பரிசுத்த பிரதிநிதிகளாக உலகத்தில் இருக்க வேண்டும் என அழைக்கிறார். நாம் சச்சரவுகளை கையாளும் முறையிலிருந்து உலகம் நம்மை கிறீஸ்துவின் உடையவர்கள் என்று அறிந்து கொள்கிறார்கள். இந்த பாடத்தின் திட்டமானது சச்சரவுகள் ஏன் ஏற்படுகிறது, மற்றும் அதை எவ்வாறு கையாளவேண்டும் என்பதை காட்டுவதற்காகவே."

## திறனாய்வு

### நல்வரவு

யார் சபையை கட்டுவது?

அது ஏன் முக்கியத்துவம்வாய்ந்தது?

இயேசு கிறிஸ்து தன் சபையை எவ்வாறு கட்டினார்?

ஆண்டவரில் பெலன் கொள்ளுதல் ☝

சுவிசேஷத்தை பகிர்ந்து கொள்ளுதல் ☝

சீடர்களை உருவாக்கு ☝

குழுக்களையும் சபைகளையும் துவங்குதல் ☝

தலைவர்களை உருவாக்குதல் ☝

*1கொரி 11:1 நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல, நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்.*

## இயேசுவைப்போல் பயிற்சி அளி

### இயேசு தலைவர்களுக்கு எவ்வாறு பயிற்சி அளித்தார் ?

முன்னேற்றம் ☝

பிரச்சனை☝

திட்டங்கள்☝

செயல்முறை

ஜெபம்

*லூக் 6:40 சீஷன் தன் குருவுக்கு மேற்பட்டவனல்ல, தேறினவன் எவனும் தன் குருவைப்போலிருப்பான்.*

## இயேசுவைப்போல் வழிநடத்து

### யார் சிறந்த தலைவர் என்று இயேசு சொன்னார் ?

### சிறந்த தலைவரின் ஏழு பண்புகள் யாவை?

1. மிக சிறந்த தலைவர்கள் மக்களை அன்பு செய்கின்றனர்.
2. மிக சிறந்த தலைவர்கள் தங்கள் ஊழியத்தை அறிந்திருக்கிறார்கள்.
3. மிக சிறந்த தலைவர்கள் தங்களை பின்பற்றுபவர்களுக்கு பணியாளராக இருப்பர்.
4. மிக சிறந்த தலைவர்கள் அன்போடு தவறுகளை எடுத்துக் காட்டுகின்றனர்.
5. மிக சிறந்த தலைவர்கள் தங்கள் குழுவிலுள்ள நிகழ்கால பிரச்சனைகளை அறிந்திருக்கிறார்கள்.
6. மிக சிறந்த தலைவர்கள் நல்ல உதாரணமாக இருப்பார்கள்.
7. மிக சிறந்த தலைவர்கள் தாங்கள் ஆசீர்வதிக்கப் பட்டவர்கள் என்று அறிந்திருக்கிறார்கள்.

யோவான் 13:14,15

*14. ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள்.*
*15. நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன்.*

### எந்த மனோபாவத்தை ஆண்டவர் உங்களுக்கு தந்திருக்கிறார்?

சிப்பாயி

நாடுபவர்

மேய்ப்பன்

விதைப்பவன்

மகன்/மகள்

புனிதர்

பணியாளர்

மேலாளர்

## எந்த மனோபாவத்தை ஆண்டவர் மிகவும் அன்பு செய்கிறார்?

## எந்த மனோபாவம் சிறந்த தலைவரை உருவாக்கக்கூடும்?

### ரோமர் 12:4-5

*4. ஏனெனில், நமக்கு ஒரே சரீரத்திலே அநேக அவயவங்களிருந்தும், எல்லா அவயவங்களுக்கும் ஒரே தொழில் இராததுபோல,*

*5. அநேகராகிய நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்க, ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறோம்.*

## உலகத்தில் எட்டு விதமான மக்கள் ஏன் உள்ளனர்?

*ஆதியாகமம் 1:26--*

*26. பின்பு தேவன்: நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக; ...*

*கோலோச்சியர் 1:15--*

*15. அவர் அதரிசனமான தேவனுடைய தற்சூருபமும், சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர்.*

"மனிதன், ஆண்டவரின் சாயலில் உருவக்கப்பட்டிருக்கிறார். புலப்படாத ஆண்டவரின் சாயலை பார்க்க வேண்டும் என்றால் இயேசுவை பாருங்கள். நாம் விழுந்து போன நிலையிலும் நாம் இயேசுவின் சாயலை பிரதிபலிக்கிறோம். வேத ஆகமத்தில் உள்ள இயேசுவின் எட்டு சாயல்கள் அவர் எப்படிப்பட்டவர் என்று நமக்கு விளக்கும்.

## இயேசு எப்படிப்பட்டவர்?

## சிப்பாயி

- *மத்தேயு 26:53-*

*53. நான் இப்பொழுது என் பிதாவை வேண்டிக்கொண்டால், அவர் பன்னிரண்டு லேகியோனுக்கு அதிகமான தூதரை என்னிடத்தில் அனுப்பமாட்டாரென்று நினைக்கிறாயா?*

☝சிப்பாயி

வளை ஊக்கு

## நாடுபவர்

*லூக்கா - 19:10*

*10. இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார் என்றார்.*

நாடுபவர் ☝

கரங்களை கண்கள்மேல் வைத்து முன்பும் பின்பும் பார்க்கவும்.

## மேய்ப்பன்

*-யோவான் 10:11-*

*11. நானே நல்ல மேய்ப்பன்; நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான்.*

மேய்ப்பன் 🖑

மக்களை உங்களருகே அழைப்பது போல உங்கள் கரங்களை உங்கள் அருகே அசைய்யுங்கள்.

## விதைப்பவன்

*-மத்தேயு 13:37-*

*37. அவர் பிரதியுத்தரமாக: நல்ல விதையை விதைக்கிறவன் மனுஷகுமாரன்;*

🖑 விதைப்பவன்

விதைகளை விதையுங்கள்

## மகன் அல்லது மகள்

*-லூக்கா 9:35-*

*35. அப்பொழுது: இவர் என்னுடைய நேசகுமாரன், இவருக்குச் செவிகொடுங்கள் என்று மேகத்திலிருந்து ஒரு சத்தமுண்டாயிற்று.*

🖑மகன்/மகள்

சாப்பிடுவதை போல கரத்தை வாயருகே எடுத்துச் செல்

## இரட்சகர்/ புனிதர்

*-மாற்கு 8:31-*

*31. அல்லாமலும், மனுஷகுமாரன் பல பாடுகள்பட்டு, மூப்பராலும் பிரதான ஆசாரியராலும் வேதபாரகராலும் ஆகாதவனென்று தள்ளப்பட்டு, கொல்லப்பட்டு, மூன்றுநாளைக்குப்பின்பு உயிர்த்தெழுந்திருக்கவேண்டியதென்று அவர்களுக்குப் போதிக்கத் தொடங்கினார்.*

👋இரட்சகர்/புனிதர்

ஜெபம்செய்வதைபோல் கரங்களை கூப்பவும்.

## பணியாளர்

*-யோவான் 13:14-15-*

*14. ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள்.*

*15. நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன்.*

👋பணியாளர்

சுத்தியலால் அடிப்பது போல் செயல் காட்டு.

## மேலாளர்

*-லோகா 6:38-*

*38. கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்; அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள்; நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும் என்றார்.*

👋மேலாளர்

உங்கள் ஜோபிலிருந்து பணத்தை எடுங்கள்.

## சச்சரவு உண்டாகும்போது நமக்கு உள்ள மூன்று விருப்பத் தேர்வுகள் எவை?

### ஓடிப்போதல் (மாமிச மறுமொழி)

“பணியை செய்து முடிக்க வெவ்வேறு மனோபாவத்தினருக்கு வெவ்வேறு சிந்தனைகளும் வழிமுறைகளும் உள்ளன. வட்டத்தில் எதிர்மாறாக இருப்பவர்கள் ஒன்றாக சேர்ந்து பணிபுரிவது கடினம். ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வது கடினமாக இருக்கும்.

விதைப்பவர் தனது பணத்தையும் நேரத்தையும் மக்கள் வளர்ச்சிக்காக செல்விடுகிறார், ஆனால் மேலாளர் பணத்தையும் நேரத்தையும் ஊழிய வளர்ச்சிக்காக சேமிக்க விரும்புகிறார். சரியான தீர்மாணத்திற்கு இரண்டு கருத்துக்களை எடுத்துக்கொள்ள வேண்டும். ஒன்றைவிட மற்றொன்று மேலானது என்று எண்ணும்போது போட்டி ஏற்படுகிறது.

பலருக்கு சச்சரவை சமாளிப்பது கடினமாக இருப்பதால் பேச்சுவார்த்தை நின்று விடுகிறது. அதிக பிரச்சனையும் மன வேதனையும் ஏற்படும் என்று பயந்து, மற்ற நபரிடமிருந்து விலகி விடுவார்கள். நமது குறிக்கோள், ‘பாதுகாப்பே பிரச்சனையை விட மேலானது” என்று ஆகிவிடுகிறது.

இந்த சூழ்நிலையில் மக்கள் வாதிட்டு, ஒருவரை விட்டு ஒருவர் ஓடி மறைந்து கொள்கின்றனர்.”

✋கைமுட்டிக்கொள்ளவும். கைகளை பிரித்து பின்னால் கொண்டுசெல்லவும்.

### ஒருவரைஒருவர் எதிர்கொள்ளுதல் இடு (மாமிச மறுமொழி)

“சிலர் சச்சரவுகளை தவிர்பதில்லை, அவர்கள் பகையை வெளி காட்டுவார்கள். நாம் வேதனை அடையுபோது அதன் காரணத்திற்குரியவர் அதற்கான ‘விலையை’ செலுத்த வேண்டும் என்று எண்ணுகிறோம். நாம் வார்த்தையை கொண்டும், போக்கை கொண்டும், அல்லது கைகளை வைத்தும் சண்டை இடுவோம். அதன் விளைவாக சச்சரவு அதிகரிக்கிறது.

நாடுபவருக்கு புது அனுபவங்களையும் வாய்ப்புக்களையும் நாடி செல்கின்றனர். ஆனால் புனிதரருக்கு அவரது குழு ஒரு நல்ல அடித்தளத்தில் உறுதி பட வேண்டும் என விரும்புகிறார். கிறிஸ்துவின் சபைக்கு இரண்டும் தேவையானது. இரண்டு குழுக்கள் 'பழமையும்', 'புதுமையும்' ஒன்றாக முயற்சி செய்வது சவாலாக இருக்கும்.

ஆராதிக்கும் விதத்தில் இந்த பிரச்சனை ஏற்படலாம். குழுக்கள் ஒரு விதத்தில் ஆராதிக்கும், ஆனால் மற்ற குழுவை சிறுமைப்படுத்தும்போது, வார்த்தைகளினாலும், எண்ணங்களினாலும், போக்குகளினாலும் ஒற்றுமை பாதிக்கப்படுகிறது. இந்த நேரத்தில் நாம் வாதிட்டு ஒருவருக்கொருவர் எதிராக வழக்காடுகிறோம்."

✋கைமூட்டிக்கொண்டு ஒன்றோடு ஒன்றை மோதிக்கொள்ளவும்.

## ஆண்டவரின் ஆவியால் ஒன்றாக செயல்பட முயற்சிசெய்.

## (ஆவி மறுமொழி)

"மூன்றாவது மறுமொழி தூய ஆவியால் வழிகட்டப்படுகிறது. நமது மாமிசம் பகை எண்ணம் கொள்ளும்போது, தூய ஆவியின் உதவியை நாடி, ஒன்றாக இருத்தல் வேண்டும். பிரச்சனைகளின் தீர்வு கிறிஸ்துவின் சரீரமாகிய சபையிலிருந்து வருவது சிறந்ததாக இருக்கும். உரையாடல், அன்பு, நம்பிக்கை என்ற நற்பண்புகள் எல்லாவற்றிலும் சிறந்தது."

"உதாரணமாக, சிப்பாயி, சபையை தேவ ஊழியத்தின் அடிப்படையில் ஒழுங்குப்படுத்த விரும்புவான். ஒரு மகன், அல்லது மகள், சபையானது ஒரு சுகமளிக்கும் குடும்பமாக எண்ணுவர். சிப்பாயி பணியிலும், மகள் அல்லது மகள் உறவிலும் கவனம் செலுத்துவர். தூய ஆவிக்குள் அவர்கள் இணையும்போது, தங்கள் ஊழியத்தை சிறப்பாக செய்யவும், ஒவ்வொரு நபரும் 'தாங்கள் குழுவின் அங்கத்தினர்' என்ற எண்ணம் உடையவராகவும் மாறிவிடுவர். நாம் பணி, பணி ,பணி செய்வோம், அதை தவிர நாங்கள் விளையாடுவோம், விளையாடுவோம், விளையாடுவோம்.

இந்த சூழ்நிலையில் நாம் ஒன்றாகக் கூடி இயேசுவோடு இணைந்து அவரது ராஜியத்தை கட்டும் பணியில் ஈடுபட வழி தேட வேண்டும்.

✋கைமூட்டிக்கொண்டு, பிறகு கைகளை விரித்து, கரம் கோர்த்து, மேலும் கீழும் ஆட்டி ஒன்றாக பணி புரிவதுபோன்று காண்பிக்கவும்.

### மனப்பாட வேத வசனம்.

*-கலாத்தியர் 2:20-*

*19. தேவனுக்கென்று பிழைக்கும்படி நான் நியாயப்பிரமாணத்தினாலே நியாயப்பிரமாணத்திற்கு மரித்தேனே.*

- தலைவர்கள் நின்று கொண்டு வேதத்திலுள்ள மனப்பாட பகுதியை 6 முறை வேதத்தை படித்தும், 4 முறை பாராமலும் வசனத்தை அறிக்கை இடவேண்டும் (மொத்தம் 10 முறை). வசனம் சொல்வதற்க்கு முன், வசனப்பகுதியை சொல்ல வேண்டும். முடித்தபின் அமரவும்.
- இந்த வழிமுறையை பின்பற்றும் பொழுது, எந்த குழு தனது “செயல்பட்டு” பாடத்தை முடித்தார் என்பதை புரிந்து கொள்ளலாம்.

## செயல்முறை

### நாடகப் போட்டி

- தலைவர்களை எட்டு நபர் குழுக்களாக பிரிக்கவும். ஒரு போட்டி நடைபெறும், வெற்றிபெருபவருக்கு பரிசு கிடைக்கும். நகைச்சுவையோடு, உண்மையான ஒரு நாடகத்தை நடிக்கும் குழுவிற்கு ஒரு பரிசு கொடுக்கவும்.
- குழுவின் ஒவ்வொரு நபரும் கிறிஸ்துவின் ஒரு ரூபத்தை எடுத்து நடிக்க வேண்டும். அவர்கள் மனோபாவத்தின் எதிராக ஒரு ரூபத்தை எடுக்க வேண்டும். உதாரணமாக, ஒருவரின் மனோபாவம் “சிப்பாயி” என்றால் , நாடகத்தில் நடிக்க, அவர் அதை தவிர வேறு ஒரு மனோபாவத்தை தேர்ந்து எடுக்க வேண்டும்.
- நாடகத்தில் தலைப்பு, “நமது இலக்கில் ஒரு புதிய சபையை துவங்குவதற்கான குழு சந்திப்பு.” நாடகத்தில் தலைவர்கள், சச்சரவை

உண்டாக்க வேண்டும், எல்லோரும் மாமிசத்தில் தனது பத்திரத்தை நடிக்க வேண்டும். ஆவியில் இல்லை.

- நாடகம் ஐந்து நிமிடத்திற்கு நடக்கும். நன்றாக நடிக்க சொல்லுங்கள் அப்போது தான் அவர்கள் நடிக்கும் பாத்திரம் யார் என்று தெரிய வரும்.
- தலைவர்கள் பயிற்சி செய்ய அதிக நேரம் கொடுக்கவும். (20 நிம்நிடங்கள்).
- போட்டியை துவங்கு. ஒவ்வொரு குழுவின் நாடகத்தின் இறுதியில், மற்ற தலைவர்கள் அந்த குழு நபர்கள் நடித்தல் பாத்திரத்தை யூகிக்க வேண்டும். நகைச்சுவையோடு, உண்மையான ஒரு நாடகத்தை நடிக்கும் குழுவிற்கு "முதல் பரிசு" கொடுக்கவும். பரிசுகள்: ஒளி நாட்கள், செய்தி நாடாக்கள், முட்டைகள் போன்றவை.
- எல்லா குழுக்களும் முடிந்தபின், ஒவ்வொரு குழுவிலிருந்தும் நன்றாக நடித்த சில நபர்களை தேர்ந்து எடுத்து அவர்களை மறுபடியும் அதே நாடகத்தை நடிக்க கூறவும்.

## பொதுவான ஒரு கேள்வி

இயேசுவின் எட்டு பாத்திரங்களுக்கும், ஆவிக்குரிய வரங்களுக்கும் என்ன வித்தியாசம்?

ஆண்டவர் மக்களை அவர் உருவத்தில் உருவாக்கினார், ஆண்டவரின் உருவத்தை எவராவது பார்க்க வேண்டும் என்று சொன்னால், வேதம் சொல்வது இயேசுவை பாருங்கள் என்று. இந்த எட்டு முகங்களும் விசுவாசிகளுக்குள்ளும் , அவிசுவாசிகளுக்குள்ளும் மூழ்கி இருக்கிறது. இயேசுவின் எட்டு சாயல்களும் ஒரு ஆவிக்குரிய வரம்புறுகுவாக உபயோகிப்பது ஒரு ஆவிக்குரிய வார பொருட் பதிவேடு குழப்பத்தை தீர்க்கிறது. ஆண்டவரில் விசுவாசிக்காதவன் எப்படி ஆவிக்குரிய வர பொருட் பதிவேடு எப்படி எடுக்க முடியும்?

ஆண்டவரின் எட்டு சாயல்களும் எட்டு "வாளிகளை" போல அதில் ஆவிக்குரிய வரங்கள் ஊற்றப்படுகின்றன. ஒரு மேய்ப்பனுக்கு இரக்கம், கொடுத்தல், ஊக்குவித்தல் போன்ற வரங்கள் இருக்கலாம் (தூய ஆவி விரும்புவது போல). சில ஆவிக்குரிய வரங்கள் கிறிஸ்துவின் சில

சாயலுக்கு மிகவும் அருகிலானது, மற்றதை விட. உதாரணமாக, சேவை செய்வதும், சேவகாரின் சாயலும் ஒன்றாக இணைந்து செயல்படும்.

# 6

# சுவிசேஷத்தை பகிர்ந்து கொள்

சுவிசேஷம் அறிவிக்கப்படவில்லை என்றால் மக்கள் எவ்வாறு நம்புவார்கள். எதிர்பாராத விதமாக இயேசுவை பின்பற்றுபவர்கள், மக்கள் விசுவாசிக்கும் படியாக சுவிசேஷத்தை அறிவிப்பதில்லை. அதற்கு ஒரு காரணம், எவ்வாறு சுவிசேஷத்தை பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பதை அவர்கள் கற்றுக்கொள்ளவில்லை. மற்றொரு காரணம், தங்கள் அனுதின வாழ்கையில் அவர்கள் தங்களை மிகவும் ஈடுபடுத்திக்கொண்டு, சுவிசேஷத்தை பகிர்ந்து கொள்ள மறந்து விடுகிறார்கள். “சுவிசேஷத்தை பகிர்ந்து கொள்” பாடத்தில் தலைவர்கள், ’சுவிசேஷ கைய்யணி’ ஒன்றை செய்ய கற்றுக்கொள்கிறார்கள். சுவிஷேத்தை பற்றி உரையாடல் துவங்குவதற்கு அது நம்மை நினைவு படுத்துவதாக அமைகிறது. ஆண்டவரை தேடுபவருக்கு எவ்வாறு சுவிசேஷத்தை பகிர்ந்து கொள்வதை கைய்யணியில் உள்ள நிறங்கள் நினைவுப்படுத்துகிறது.

இந்த ‘சுவிசேஷ கைய்யணி’, நாம் எவ்வாறு தேவனின் குடும்பத்தை விட்டு பிரிந்துள்ளோம் என்பதை காட்டுகிறது. ஆதியிலே தேவன் இருந்தார் அதை - தங்க நிற பாசிமணி. பரிசுத்த ஆவியானவர் செம்மையாக படைத்தார், வானத்தையும், உலகத்தையும், கடல்களையும் - நீல நிற பாசிமணி. மனிதனை உருவாக்கி ஒரு நல்ல தோட்டத்தில் வைத்தார் - பச்சை நிற பாசிமணி. ஆதி மனிதனும் அவர் துணைவியாரும் கீழ்படியாமையினால், பாவத்தையும், வேதனையையும் உலகத்திற்கு கொண்டு வந்தார். கறுப்பு நிற பாசிமணி. தேவன் தனது ஒரே குமாரனை பூமிக்கு அனுப்பினார், அவர் பரிசுத்த வாழ்க்கை வாழ்ந்தார் - வெள்ளை நிற பாசிமணி. சிலுவையில் மறித்து இயேசு நமது பாவங்களை கழுவினார் - சிகப்பு நிற பாசிமணி.

இந்த சுவிசேஷ கைய்யணி நாம் எவ்வாறு தேவனின் குடும்பத்தை சேரலாம் என்பதை பாசிமணி வரிசையை தலை கீழாக மாற்றி எடுத்துரைக்கலாம். இயேசு தங்கள் பாவத்திற்கு மரித்தார் என்பதை விசுவாசிக்கும் எவரும் - சிகப்பு பாசிமணி, மற்றும் இயேசு தேவனின் குமாரன் - வெள்ளை பாசிமணி, மற்றும் அவர்களுடைய பாவங்கள் மன்னிக்கப் படுகின்றன - கருப்பு பாசிமணி, ஆண்டவர் நம்மை திரும்பவும் அவரது குடும்பத்தில் தத்தெடுத்துக் கொள்கிறார், மற்றும் நாம் இயேசுவை போல மாறுகிறோம் - பச்சை பாசிமணி. ஆண்டவர் நமக்கு தன் தூய ஆவியை கொடுக்கிறார் - நீல பாசி மணி, மற்றும் நம் மரணத்திற்கு பின்பு அவருடன் தங்க வீதிகள் கொண்ட சொர்க்கத்தில் இருப்போம் - தங்க நிற பாசிமணி.

தேவனிடம் செல்லுவதற்கு ஒரே வழி இயேசு என்பதை இந்த பாடத்தில் முடிவில் எடுத்துக் காட்டப்படுகிறது. ஓருவரும் தாங்களாகவே தேவனிடத்தில் சேர, போதிய அன்பு, போதிய திறமை, போதிய பெலன், போதிய சாமர்த்தியம் உடையவராக இல்லை. தேவனிடம் சேருவதற்கு இயேசு ஒருவரே வழி. மக்கள் தங்களது பாவங்களில் இருந்து விடுதலை பெற இயேசு ஒருவரே உண்மை. சிலுவையில் அவருடைய மரணத்தின் வழியாக நித்திய வாழ்வு இயேசு மட்டுமே தர முடியும்.

## புகழ்

- இரண்டு துதி பாடல்களை சேர்ந்து பாடவும்.கருத்தரங்கை அசீர்வதிக்க ஒரு மதிப்பிற்குரிய தலைவர் ஜெபிக்க வேண்டும்.

## முன்னேற்றம்

- தலைவர் ஒருவர் தனது சாட்சியை (3 நிமிடத்திற்கு )தமது ஊழியத்தை ஆண்டவர் எவ்வாறு ஆசீர்வதிக்கிறார் என்பதை பகிர்ந்து கொள்ள வேண்டும். குழுவானது அந்த தலைவருக்காகவும், அவரது ஊழியத்திற்காகவும் ஜெபம் செய்ய வேண்டும்.

### பிரச்சனை

"பலர் சுவிசேஷத்தை பகிர்ந்து கொள்ள போராடுகிறார்கள். யாருக்கு, எப்படி நான் சுவிசேஷத்தை அறிவிப்பது என்ற கேள்வியை கேட்கிறார்கள். பிறருடைய வாழ்கையில் தேவன் கிரியை செய்து கொண்டிருக்கும் போது, விசுவாசிகள் அதை அறியாமல் அவைகளை விசுவாசத்திற்குள் வழி நடத்துவதில்லை."

## திட்டம்

"சுவிசேஷத்தை எளிதாக பகிர்ந்து கொள்ள சுவிசேஷக் கையானி ஒன்றை செய்து, சுவிசேஷத்தை பகிர்ந்து கொள்ள இந்த பாடத்தில் நினைவு படுத்துகிறோம்."

## திறனாய்வு

### நல்வரவு

யார் சபையை கட்டுவது?

அது ஏன் முக்கியத்துவம்வாய்ந்தது?

இயேசு கிறிஸ்து தன் சபையை எவ்வாறு கட்டினார்?

ஆண்டவரில் பெலன் கொள்ளுதல் ✋

சுவிசேஷத்தை பகிர்ந்து கொள்ளுதல் ✋

சீடர்களை உருவாக்கு ✋

குழுக்களையும் சபைகளையும் துவங்குதல் ✋

தலைவர்களை உருவாக்குதல் ✋

*1கொரி 11:1 நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல, நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்.*

## இயேசுவைப்போல் பயிற்சி அளி

இயேசு தலைவர்களுக்கு எவ்வாறு பயிற்சி அளித்தார் ?

முன்னேற்றம் ✋

பிரச்சனை👋

திட்டங்கள்👋

செயல்முறை👋

ஜெபம்👋

*லூக் 6:40 சீஷன் தன் குருவுக்கு மேற்பட்டவனல்ல, தேறினவன் எவனும் தன் குருவைப்போலிருப்பான்.*

## இயேசுவைப்போல் வழிநடத்து

### யார் சிறந்த தலைர்வர் என்று இயேசு சொன்னார் ?

### சிறந்த தலைவரின் ஏழு பண்புகள் யாவை?

1. மிக சிறந்த தலைவர்கள் மக்களை அன்பு செய்கின்றனர்.
2. மிக சிறந்த தலைவர்கள் தங்கள் ஊழியத்தை அறிந்திருக்கிறார்கள்.
3. மிக சிறந்த தலைவர்கள் தங்களை பின்பற்றுபவர்களுக்கு பணியாளராக இருப்பர்.
4. மிக சிறந்த தலைவர்கள் அன்போடு தவறுகளை எடுத்துக் காட்டுகின்றனர்.
5. மிக சிறந்த தலைவர்கள் தங்கள் குழுவிலுள்ள நிகழ்கால பிரச்சனைகளை அறிந்திருக்கிறார்கள்.
6. மிக சிறந்த தலைவர்கள் நல்ல உதாரணமாக இருப்பார்கள்.
7. மிக சிறந்த தலைவர்கள் தாங்கள் ஆசீர்வதிக்கப் பட்டவர்கள் என்று அறிந்திருக்கிறார்கள்.

யோவான் 13:14,15

*14. ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள்.*
*15. நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன்.*

## பலப்படு

சிப்பாய்👋

நாடுபவர் 👋

மேய்ப்பன் 👋

விதைப்பவன் 👋

மகன்/மகள் 👋

புனிதர் 👋

பணியாளர் 👋

மேலாளர் 👋

### எந்த மனோபாவத்தை ஆண்டவர் மிகவும் அன்பு செய்கிறார்?

### எந்த மனோபாவம் சிறந்த தலைவரை உருவாக்கக்கூடும்?

ரோமர் 12:4-5

*4. ஏனெனில், நமக்கு ஒரே சரீரத்திலே அநேக அவயவங்களிருந்தும், எல்லா அவயவங்களுக்கும் ஒரே தொழில் இராததுபோல,*

*5. அநேகராகிய நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்க, ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறோம்.*

## சேர்ந்து உறுதியாயிறு

### உலகத்தில் எட்டு விதமான மக்கள் ஏன் உள்ளனர்?

### இயேசு எப்படிப்பட்டவர்?

சிப்பாய்👋

நாடுபவர் 👋

மேய்ப்பன் ☟

விதைப்பவன் ☟

மகன்/மகள் ☟

புனிதர் ☟

பணியாளர் ☟

மேலாளர் ☟

சச்சரவு உண்டாகும்போது நமக்கு உள்ள மூன்று விருப்பத் தேர்வுகள் எவை?

ஓடிப்போதல் ☟

ஒருவரைஒருவர் எதிர்கொள் ☟

ஆண்டவரின் ஆவியால் ஒன்றாக செயல்பட முயற்சிசெய். ☟

*-கலாத்தியர் 2:20-*

*19. தேவனுக்கென்று பிழைக்கும்படி நான் நியாயப்பிரமாணத்தினாலே நியாயப்பிரமாணத்திற்கு மரித்தேனே.*

## எளிமையான சுவிசேஷத்தை நான் எவ்வாறு பகிர்ந்து கொள்வேன்?

*லூக்கா 24:1-7*

*1. வாரத்தின் முதலாம்நாள் அதிகாலையிலே தாங்கள் ஆயத்தம்பண்ணின கந்தவர்க்கங்களை அவர்கள் எடுத்துக்கொண்டு வேறு சில ஸ்திரீகளோடுங்கூடக் கல்லறையினிடத்தில் வந்தார்கள். கல்லறையை அடைத்திருந்த கல்புரட்டித் தள்ளப்பட்டிருக்கிறதைக்கண்டு, உள்ளே பிரவேசித்து, கர்த்தராகிய இயேசுவின் சரீரத்தைக் காணாமல், அதைக்குறித்து மிகுந்த கலக்கமடைந்திருக்கையில், பிரகாசமுள்ள வஸ்திரந்தரித்த இரண்டுபேர் அவர்கள் அருகே நின்றார்கள். அந்த ஸ்திரீகள் பயப்பட்டுத் தலைகவிழ்ந்து தரையை நோக்கி: நிற்கையில், அந்த இரண்டுபேரும் அவர்களை நோக்கி: உயிரோடிருக்கிறவரை நீங்கள் மரித்தோரிடத்தில் தேடுகிறதென்ன? அவர் இங்கே இல்லை, அவர் உயிர்த்தெழுந்தார். மனுஷகுமாரன் பாவிகளான மனுஷர் கைகளில் ஒப்புக்கொடுக்கப்படவும், சிலுவையில் அறையப்படவும், மூன்றாம்நாளில்*

*எழுந்திருக்கவும் வேண்டுமென்பதாக அவர் கலிலேயாவிலிருந்த காலத்தில் உங்களுக்குச் சொன்னதை நினைவுகூருங்கள் என்றார்கள்.*

- தலைவர்கள் சத்தமாக வேத வாசனைகளை வாசித்த பின், கீழ்கண்ட தேவைப்போருட்களை பங்கேற்பாளர்களுக்கு கொடுங்கள்.
    1. தங்க நிறம், ஊதா, பச்சை, கருப்பு, வெள்ளை மற்றும் சிவப்பு நிற பாசிமணிகள்.
    2. பன்னிரண்டு அங்குலம் நீளம் உள்ள கயிறு அல்லது விலங்குத் தோல்.
- “சுவிசேஷ கைய்யணியை” எப்படி செய்வது என்று விளக்கவும். கயிறின் நடுவில் ஒரு முடிச்சை காட்டுங்கள். இவ்வாறு பாசிமணிகள் ஒரு இடத்தில் நிற்கும். ஒவ்வொரு பாசிமணியை கோற்க அதன் பொருளை விளக்கவும்.

### தங்க பாசிமணி

“ஆதீயிலே ஆண்டவர் மட்டும் தான் இருந்தார்.”

### நீல பாசிமணி

“பிறகு, தேவனின் ஆவியானவர் உலகில் உள்ள எல்லாவற்றையும், வானத்தையும், கடல்களையும் சருஷ்டித்தார்”

### பச்சை பாசிமணி

“ஆண்டவர் ஒரு அழகான பூங்காவை உருவாக்கி, மனிதனை உருவாக்கி, அவர் குடும்பத்தில் சேர்த்தார்.”

### கருப்பு பாசிமணி

“ஆதி மனிதனும் அவர் துணைவியாரும் கீழ்படியாமையினால், பாவத்தையும், வேதனையையும் உலகத்திற்கு கொண்டு வந்தார்.”

## வெள்ளை பாசிமணி

“தேவன் மனிதனை அதிகம் அன்பு செய்ததனால் தனது ஒரே குமாரனை பூமிக்கு அனுப்பினார், அவர் கீழ்படிந்து பரிசுத்த வாழ்க்கை வாழ்ந்தார்”

## சிவப்பு பாசிமணி

“சிலுவையில் மரித்து இயேசு நமது பாவங்களை கழுவினார், கல்லறையில் அடக்கம் செய்ய பட்டார்.”

1. இச்சமயத்தில், தலைவர்கள் பாசிமணிகளை கோற்பதில்லை, முடிச்சை மட்டும் கட்டி தயாராக இருக்கிறார்கள். சிகப்பு பாசிமணியை எடுத்து அடுத்த பாகத்தை துவங்குங்கள், இறுதியில் தங்க பாசிமணியோடு நீங்கள் முடிப்பீர்கள்.

## சிகப்பு பாசிமணி

“ஆண்டவர் இயேசுவின் அர்ப்பணிப்பை பார்த்து, ஏற்றுக்கொண்டார். உலகத்தார், ஆண்டவரிடம் வர அவர் ஒரே வழி என்பதை காண்பிக்க அவரை மூன்று நாட்களுக்குள் மரித்து உயிர்பிக்க செய்தார்”.

## வெள்ளை பாசிமணி

“இயேசு ஆண்டவரின் மகன் என்றும், தங்கள் பாவத்திற்கு மரித்தார் என்பதையும் விசுவசிக்கும் எவரும்..”

## கருப்பு பாசிமணி

“தங்கள் பாவங்களுக்காக மன்னிப்பு கேட்டு, இயேசுவிடம் தங்களை காப்பாற்ற வேண்டுபவர்கள்..”

## பச்சை பாசிமணி

“...ஆண்டவர் அவர்களை திரும்பவும் அவரது குடும்பத்தில் தத்தெடுத்துக் கொள்கிறார், ஆதியில், பூங்காவில் இருந்தது போல.”

## நீல பாசிமணி

“ஆண்டவர் அவர்களுக்குள் தன் தூய ஆவியை கொடுக்கிறார், ஆதியில் அவர் உலகத்தை உருவாக்கியது போல.”

## தங்க பாசிமணி

“இறுதியாக, இயேசுவில் விசுவசிக்கிறவன் ஒரு நாள் நித்திய வாழ்வு தேவனோடு செலவழிப்போம். மற்ற விசுவசிகளோடு, தங்கத்தால் உருவாக்கப்பட்ட நகரத்தில் அவர்கள் வாழ்வார்கள்.

எனக்கு இந்த கைய்யணி மிகவும் இஷ்டம். ஏன் என்றால், இது நான் எங்கிருந்து வந்தேன் மற்றும் எங்கே செல்கிறேன் என்பதை ஞாபகப்படுத்துகிறது. மற்றும், ஆண்டவர் எனது பாவங்களை எவ்வாறு மன்னித்து எனது வாழ்கையை மாற்றினார் என்பதையும் ஞாபகப்படுத்துகிறது.

ஆண்டவரின் குடும்பத்திற்கு திரும்ப வர நீங்கள் தயாராக இருக்கிறீர்களா? ஆண்டவர் ஒரு செம்மையான உலகத்தை உருவாக்கி நமது பாவங்களுக்காக தனது மகன் மரித்தார் என்று நாம் விசுவசித்து ஒன்றாக சேர்ந்து ஜெபிப்போம். உங்கள் பாவங்களுக்காக வருந்தி மன்னிப்பு கேளுங்கள். ஆண்டவர் அவரது குடும்பத்திற்க்குள் ஏற்றுக்கொள்வார்.”

- சில நிமிடங்கள் எடுத்து, தலைவர்கள் எல்லோரும் விசுவாசிகள் என்பதை ஆராயுங்கள். சுவிசேஷ கையணியை விளக்கிய பின், ஆண்டவரின் குடும்பத்திர்க்கு எவராவது திரும்ப வருகிறார்களா என்று கேளுங்கள்.

## இயேசுவின் உதவி நமக்கு ஏன் தேவை?

1. தேவனிடத்தில் திரும்ப வரும் சாமர்த்தியம் ஒருவனிடத்தில் இல்லை.

*-ஏசாயா 55:9-*

*பூமியைப்பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப்பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது.*

“ஆண்டவரிடம் செல்ல பல வழிகள் உண்டு என்று சில மக்களின் கருத்து. இயேசு ஒரே வழி இல்லை என்பதை விளக்க பல விதமான தத்துவங்களை அவர்கள் விளக்குவார்கள். ஆண்டவரின் எண்ணங்கள், மனிதனின் எண்ணங்களை கொச்சை படுத்துகிறது. இயேசுவே ஜீவனும், வழியும் உண்மையும் ஆவார் என்று ஆண்டவர் சொல்லும்போது எவரை நீங்கள் விசுவசிப்பீர்?”

✋எவருக்கும் அந்த அளவிற்கு புத்தி உடையவர் அல்ல

ஆள்காட்டி விரலை உங்கள் தலை மீது வைத்து, “இல்லை” என்று தலையை ஆட்டுங்கள்.

2. தேவனிடத்தில் திரும்ப வரும் அளவிற்கு ஒருவரும் கொடுப்பதில்லை.

*-ஏசாயா 64:6-*

*நாங்கள் அனைவரும் தீட்டானவர்கள்போல இருக்கிறோம்; எங்களுடைய நீதிகளெல்லாம் அழுக்கான கந்தைபோல இருக்கிறது, நாங்கள் அனைவரும் இலைகளைப்போல் உதிருகிறோம்; எங்கள் அக்கிரமங்கள் காற்றைப்போல் எங்களை அடித்துக்கொண்டுபோகிறது.*

“ஏழைகளுக்கு பணம் கொடுப்பது மூலம் நித்திய வாழ்வை பெற்றுக்கொள்ளலாம் என்று சிலர் எண்ணுகின்றனர். தங்கள் நற்செயல்களை கண்டு தேவன் அவர்களை பரலோகத்தில்

ஏற்றுக்கொள்வார் என எண்ணுகின்றனர். நமது சுயநீதி அழுக்கான கந்தை போல் இருக்கிறது. அவர் தனது ஒரே குமாரனை நமக்காக சிலுவையில் மரிக்க ஒப்புக்கொடுத்தார். நமது இரட்சிப்பிற்கு இந்த வழியை மட்டுமே ஏற்றுக்கொள்கிறார்."

☝எவருக்கும் அதிகம் கொடுப்பதில்லை

தனது சட்டை பைய்யிலிருது பணம் எடுப்பதைபோல கையை வைத்து, "இல்லை" என்று தலையை அசைக்கவும்.

3. தேவனிடத்தில் திரும்ப வர ஒருவருக்கும் பெலன் இல்லை.

*-ரோமர்:7:18-*

*அதெப்படியெனில், என்னிடத்தில், அதாவது, என் மாம்சத்தில், நன்மைவாசமாயிருக்கிறதில்லையென்று நான் அறிந்திருக்கிறேன்; நன்மை செய்ய வேண்டுமென்கிற விருப்பம் என்னிடத்திலிருக்கிறது, நன்மைசெய்வதோ என்னிடத்திலில்லை.*

"மற்றவர்கள், தன்னையே மறுதலித்து வாழ்ந்தால் ஆண்டவரை அடையலாம் என்று. அவர்கள் தியானம், உபவாசம், மற்றும் உலகை ஒதுக்கி வாழ்கிறார்கள். தனது இச்சைகளை கட்டுப்படுத்தினால் சுவிசேஷம் பெறலாம் என்று எண்ணுகிறார்கள். ஒரு நபர் அவருடைய சக்திகளில் மட்டும் தான் சார்ந்திருக்க வேண்டும். மூழ்கிக்கொண்டிருக்கும் மனிதன் தன்னை காப்பாற்ற முடியாது. அவருக்கு உதவி வேண்டும். இயேசு ஒருவரே ஒரு பரிசுத்தமான வாழ்வை அளிக்க வல்லவராக இருக்கிறார். நான் இயேசுவை கொண்டு தேவனிடத்தில் திரும்ப வேண்டும். சுய முயற்சியால் அல்ல."

☝எவருக்கும் போதுமான பலம் இல்லை.

இரண்டு கைகளை "வலுவான மனிதனைப்போல" மேல்நோக்கி உயர்த்தி இல்லை என்று தலை அசைக்கவும்.

4. தேவனிடத்தில் திரும்ப வரும் அளவிற்கு ஒருவரும் நல்லவரில்லை.

*-ரோமர் 3:23-*

*23. எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி,*

“கடைசி குழு மக்கள் தங்களது நல்வினை, தீவினையைவிட மேலோங்கி இருப்பதால் தேவனை அடையலாம் என எண்ணுகிறார்கள். அவர்கள் அதிகம் நற்கிரியைகள் செய்திருப்பதால், தேவனுடைய பார்வையில் இரக்கம் பெறுவார் என மிக நம்பிக்கை கொண்டுள்ளார். அவனை போல் ‘நான் எந்த தவறு செய்ய வில்லை என்று ஞாயப்படுத்துவர்.’ தேவன் தனது குமாரனுடைய பரிசுத்தத்தை ஒரு அளவுகோலாக நம்மை நீதிக்கு உட்படுத்த பயன்படுத்துகிறார். இயேசுவை ஒப்பிடும்போது நாம் எல்லோரும் குறைவுள்ளவர்கள். இயேசுவின் தியாகம் மட்டுமே தேவனுக்கு ஏற்றதாக இருந்தது. இயேசு மட்டுமே நம்மை தேவனின் குடும்பத்தில் சேர்க்க நல்லவராக இருக்கிறார். நாம் அவரது நல்லெண்ணத்தில் நமது நம்பிகை வைக்க வேண்டும் நம்மீது அல்ல.”

✋எவருக்கும் போதுமான அளவிற்கு நல்லவர் அல்ல.

இரு கரங்களையும் அளவுகோல் போல் மேலும் கீழும் அசைத்து இல்லை என்று தலை அசைவை ஏற்படுத்தவும்.

மனப்பாட வசனம்

*-யோவான் 14:6-*

*அதற்கு இயேசு: நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்.*

- தலைவர்கள் நின்று கொண்டு வேதத்திலுள்ள மனப்பாட பகுதியை 6 முறை வேதத்தை படித்தும், 4 முறை பாராமலும் வசனத்தை அறிக்கை இடவேண்டும் (மொத்தம் 10 முறை). வசனம் சொல்வதர்க்கு முன், வசனப்பகுதியை சொல்ல வேண்டும். முடித்தபின் அமரவும்.
- இந்த வழிமுறையை பின்பற்றும் பொழுது, எந்த குழு தனது “செயல்பட்டு” பாடத்தை முடித்தார் என்பதை புரிந்து கொள்ளலாம்.

## முன்னேற்றம்

“கிறிஸ்துவை சமீபமாக ஏற்றுக்கொண்டவரை பற்றி ஒரு சிறிய சாட்சியத்தை குழுவோடு பகிரவும்.”

## பிரச்சனைகள்

“நீங்கள் சுவிசேஷத்தை பகிர்ந்து கொள்ளும்போது என்ன கஷ்டங்களை எதிர்கொள்கிறீர்கள் என்பதை பகிர்ந்து கொள்ளுங்கள்.”

## திட்டங்கள்

“அடுத்த 30 நாட்களில் நீங்கள் சுவிசேஷத்தை பகிர்ந்து கொள்ளப்போகிற ஐந்து மக்களின் பெயரை பகிர்ந்து கொள்ளுங்கள்.”

- எல்லோரும் தங்கள் நண்பனின் பெயரை குறித்து கொண்டு பிறகு ஜெபிக்க வேண்டும்.

## பயிற்சி

- சுவிசேஷ கையனி என்ற கருத்தை கொண்டு எல்லா தலைவர்களும் தங்களது சிறு குழுவில் சுவிசேஷத்தை பகிர்ந்து கொள்ளவும்.
- எல்லா குழு அங்கத்தினரும் எழுந்து மனப்பாட வசனத்தை பத்து முறை கூற வேண்டும்.

## ஜெபம்

“உங்கள் குழுவில், ஆண்டவரிடம் திரும்பி வர வேண்டிய மக்களுக்காக ஜெபியுங்கள்.”

# இறுதி

## பயிற்சியாளர்களுக்கு பயிற்சி அளிப்பதின் சக்தி

பாடம் துவங்குவது முன், ஒரு அட்டையிலோ அல்லது வெள்ளை பலகயிலோ இந்த அட்டவனையை வரையவும். புள்ளிவிபரங்களை நீங்கள் முதலில் ஆய்வு செய்து கொள்ளுங்கள் ஆனால் தலைவர்கள் அவர்களுடைய மதிப்பீடுகளை கூறட்டும். இந்த விவாதத்தினால் சரியான எண்ணிக்கை வெளிவரவேண்டும், தலைவர்களும் இதில் ஈடுபாடு பெற வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| **மக்கள் தொகை** | | **புதிய சபையை துவங்குவது** | |
| **நம்பிக்கையற்றவர்கள்** | | **சபையின் சராசரி எண்ணிக்கை** | |
| **விசுவாசிகள்** | | **மொத்தம் சபைகள்** | |
| 2% **அடைந்த இலக்கு** | | **சபையில் இலக்கு** | |

“பயிற்சி மரங்கள் ஏன் முக்கியம் என்று நாம் உங்களுக்கு காட்டுகிறேன். நாம் சேர்ந்து இந்த அட்டவணையை நிரப்புவோம்”.

[கீழிருக்கும் இந்த புள்ளியியல் உதாரணத்திற்கு மட்டும் தான். எல்லோரும் ஒரே ஊரிலிருந்து வருகிறார்கள் என்றால் அவர்கள் ஊரின் புள்ளியியலை உபயோகிக்கவும். அவர்கள் பல ஊருகளிலிருந்து வந்தால் அந்த மாநிலத்தின் அல்லது நாட்டின் புள்ளியியல் உபயோகிக்கவும்.]

| | | | |
|---|---|---|---|
| **மக்கள் தொகை** | **2,000,000** | **புதிய சபையை துவங்குவது** | **10** |
| **நம்பிக்கையற்றவர்கள்** | **1,995,000** | **சபையின் சராசரி எண்ணிக்கை** | **50** |
| **விசுவாசிகள்** | **5,000** | **மொத்தம் சபைகள்** | **100** |
| 2% **அடைந்த இலக்கு** | **40,000** | **சபையில் இலக்கு** | **800** |

“நமது குழுவில் 2,000,000 மக்கள் உள்ளனர். அங்கே 5,000 விசுவாசிகள் இருக்கிறார்கள் என்றால் 1,995,000 மக்கள் இயேசுவை பின்பற்றவில்லை.

நமது இலக்கு 2% ஆவது இயேசுவை பின்பற்ற வேண்டும் என்பது. அப்படீ என்றால் 40,000 மக்கள். நமது இலக்கை அடைய வெகுதூரம் செல்லவேண்டும்.

சராசரியாக ஒரு சபை, பத்து வருடத்தில் ஒரு புது சபையை துவங்கும். உலகில் சபையின் சராசரி எண்ணிக்கை 50, அப்படி என்றால் நமது குழுவில் 100 சபைகள் இருக்க வேண்டும் (5,000/50). நாம் சுவிசேஷத்தை 40,000 மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும், அப்படி என்றால் இன்னும் 700 கோவில்கள். இவை எல்லாம் குத்து மதிப்பான எண்ணிக்கை, ஆனால் நமது குழுவில் என்ன நடக்கிறது என்று தெரிந்து கொள்ள வேண்டும்.

சராசரியாக ஒரு சபை, பத்து வருடத்தில் ஒரு புது சபையை துவக்கும், அப்படி என்றால் பத்து வருடத்தில் நமது சபைகள் இரட்டிப்பாகும். 800 சபைகள் என்பது நமது இலக்கு (40,000/50). சில சபைகளில் ஐம்பதிற்கும் மேற்பட்டவர்கள் இருப்பார்கள் ஆனால் பல சபைகள் அதைவிட குறைவாக இருக்கும் ஆனால் இது சரியான குத்துமதிப்பு. நமது இலக்கை அடைவதற்கு ஈரான் வழிகளை நாம் ஒப்பிடுவோம்.

| மரபு வழியாக சபைகளை துவங்குதல் | வரிடங்கள் | தலைவர்களுக்கு பயிற்சியளித்தல் | வரிடங்கள் |
|---|---|---|---|
| 100 | | 5,000 | |
| 200 | 10 | 10,000 | 1 |
| 400 | 20 | 20,000 | 2 |
| 800 | 30 | 40,000 | 3 |

“நீங்கள் பார்பதுபோல, நாம் தலைவர்களுக்கு பயிற்சியளிப்பதில் கவனம் செலுத்தினால் நமது இலக்கை மூன்று வருடங்களில் அடைவோம். இப்போது நம்மிடத்தில் 5000 விசுவாசிகள் இருக்கிறார்கள். ஒவ்வொருவரும் சுவிசேஷத்தை பகிர்ந்து ஒருவரை கிறிஸ்துவிடம் அழைத்து வந்து,

அவர்களை அதையே செய்ய பயிற்சி அளித்தால், நாம் ஒவ்வொரு வருடமும் இரண்டு பங்கு அதிகரிப்போம். மூன்று வருடங்களில் 40,000 இலக்கை அடைவோம்.

மரபு வழியாக நாம் சபைகளை துவங்கினோம் என்றால் நமது இலக்கை நாம் 30 வருடங்களில் அடைவோம். இப்போது நமக்கு 100 சபைகள் உள்ளன, ஒவ்வொரு 10 வருடங்களில் நாம் இரண்டு பங்கானோம் என்றால் 30 வருடங்களில் நாம் 800 சபைகள் அடைவோம்.

மூன்று வருடங்களுக்கும் முப்பது வருடங்களுக்கும் இடையே அதிக வித்தியாசம் உள்ளது.

சபைகளில் பொதுவான பிரச்சனை என்ன வென்றால், அவர்கள் மக்களை பயிற்சி செய்ய ஒரு நடைமுறையை பின்பற்றுவதில்லை. அதன் விளைவாக, சிறிய அளவு தலைவர்கள் மட்டும் தான் சபைகளையும் குழுக்களையும் உருவாக்க துவங்குகிறார்கள். நாம் இயேசுவை போல் பயிற்சி அளித்தோம் என்றால் இந்த பெறிய பிரச்சனை சுலபமான மற்றும் வல்லமையான முறையில் தீர்வடைகிறது.

## எனது இயேசு திட்டம்

- தலைவர்கள் தங்கள் பங்கேற்பாளர்களை குறிப்பேட்டிற்கு திரும்புமாறு கூறுங்கள். அங்கே “எனது இயேசு திட்டம்” பக்கம் உள்ளது. இந்த ஆய்வரங்கின் இறுதியில் எல்லா தலைவர்களும் அவர்களுடைய இயேசு திட்டத்தை பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று கூறவும். அதன் பின்னே தலைவர்கள் தங்கள் குடும்பத்திற்காகவும், ஊழியத்திற்காகவும், திட்டத்திற்காகவும் ஆண்டவருடைய ஆசீர்வாதத்திற்காகவும் ஜெபித்தல் வேண்டும்.

“அந்த அம்பில் மனிதர்களின் விவரங்களை நிரப்புவதற்கு இடம் இருக்கும். சில நிமிடங்கள் ஜெபம் செய்து அந்த கட்டங்களை நன்றாக நிரப்பவும். உங்களுக்கு பிறகு அதிகம் விவரங்கள் கிடைத்தால் நீங்கள் அதை மாற்றலாம்.”

# 7

# சீடர்களை உருவாக்கு

ஒரு நல்ல தலைவனுக்கு எப்போதும் ஒரு நல்ல திட்டம் இருக்கும். இயேசு தனது சீடர்களுக்கு ஒரு சாதாரணமான மற்றும் வல்லமைஉள்ள திட்டத்தை லூக்கா 10 ஆம் அதிகாரத்தில் கொடுத்ததார்: இருதயத்தை சரிசெய், சமாதானத்தை விரும்பும் மக்களை கண்டுபிடி, நற்செய்தியை பகிர்ந்து கொள், விளைவை மதிப்பிடு. இயேசு நமக்கு பின்பற்றுவதற்கு ஒரு நல்ல மாதிரியை தந்தார்.

நம் இயேசுவின் திட்டத்தை படிப்படியாக பின்பற்றினால் நாம் நமது ஊழியத்தை ஒரு சபையிலோ, குழுவிலோ, புதிய சபையிலோ, சிறிய குழுவிலோ துவங்கினால் பிழைகளை தவிர்க்கலாம். இந்த பாடமானது, தலைவர்கள் ஒருவரை ஒருவர், எனது இயேசுவின் திட்டத்திலும், சுய திட்டத்திலும் எப்படி பயிற்சி அளிப்பது என்பதை கற்றுத்தரும். தலைவர்கள் தனது இயேசு திட்டத்தை எல்லோருக்கும் வழங்க தயார் செய்ய துவங்குவார்கள்.

## புகழ்

- இரண்டு துதி பாடல்களை சேர்ந்து பாடவும்.கருத்தரங்கை ஆசீர்வதிக்க ஒரு மதிப்பிர்குரிய தலைவர் ஜெபிக்க வேண்டும்.

## முன்னேற்றம்

- தலைவர் ஒருவர் தனது சாட்சியை (3 நிமிடத்திற்கு )தமது ஊழியத்தை ஆண்டவர் எவ்வாறு ஆசீர்வதிக்கிறார் என்பதை பகிர்ந்து கொள்ள வேண்டும். குழுவானது அந்த தலைவருக்காகவும், அவரது ஊழியத்திர்காகவும் ஜெபம் செய்ய வேண்டும்.

## பிரச்சனை

“நாம் திட்டம் செய்ய தவறிவிட்டால், நாம் தோல்வியடைய திட்டம் செய்கிறோம். ஒரு சாதாரணமான வழிமுறையை உருவாக்குவது கடினமாக இருக்கும். பல தலைவர்கள் பிரச்சனைகளை எதிர்த்து செயல்படுவதில் கவனம் செலுத்தி தெளிவான முன்னேற்ற பாதையில் செல்ல தவறி விடுகிறார்கள்.”

## திட்டம்

“இயேசு இழந்து போனதை தேடவும் இரட்சிக்கவே வந்தார், நாமும் அவரை பின்பற்றும்போது, அவ்வாறே செய்வோம். இயேசு தனது சீடர்களுக்குதெளிவான திட்டத்தை நாமும் நமது ஊழியத்தில் பின்பற்றும் படியாக கொடுத்தார்.”

## திறனாய்வு

**நல்வரவு**

யார் சபையை கட்டுவது?

அது ஏன் முக்கியத்துவம்வாய்ந்தது?

இயேசு கிறிஸ்து தன் சபையை எவ்வாறு கட்டினார்?

ஆண்டவரில் பெலன் கொள்ளுதல்

சுவிசேஷத்தை பகிர்ந்து கொள்ளுதல்

சீடர்களை உருவாக்கு

குழுக்களையும் சபைகளையும் துவங்குதல்

தலைவர்களை உருவாக்குதல்

*1கொரி 11:1 நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல, நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்.*

## இயேசுவைப்போல் பயிற்சி அளி

**இயேசு தலைவர்களுக்கு எவ்வாறு பயிற்சி அளித்தார் ?**

முன்னேற்றம் ✋

பிரச்சனை✋

திட்டங்கள்✋

செயல்முறை✋

ஜெபம்✋

*லூக் 6:40 சீஷன் தன் குருவுக்கு மேற்பட்டவனல்ல, தேறினவன் எவனும் தன் குருவைப்போலிருப்பான்.*

## இயேசுவைப்போல் வழிநடத்து

### யார் சிறந்த தலைவர் என்று இயேசு சொன்னார் ?

### சிறந்த தலைவரின் ஏழு பண்புகள் யாவை?

8. மிக சிறந்த தலைவர்கள் மக்களை அன்பு செய்கின்றனர்.
9. மிக சிறந்த தலைவர்கள் தங்கள் ஊழியத்தை அறிந்திருக்கிறார்கள்.
10. மிக சிறந்த தலைவர்கள் தங்களை பின்பற்றுபவர்களுக்கு பணியாளராக இருப்பர்.
11. மிக சிறந்த தலைவர்கள் அன்போடு தவறுகளை எடுத்துக் காட்டுகின்றனர்.
12. மிக சிறந்த தலைவர்கள் தங்கள் குழுவிலுள்ள நிகழ்கால பிரச்சனைகளை அறிந்திருக்கிறார்கள்.
13. மிக சிறந்த தலைவர்கள் நல்ல உதாரணமாக இருப்பார்கள்.
14. மிக சிறந்த தலைவர்கள் தாங்கள் ஆசீர்வதிக்கப் பட்டவர்கள் என்று அறிந்திருக்கிறார்கள்.

யோவான் 13:14,15

*14. ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள்.*

*15. நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன்.*

## பலப்படு

சிப்பாய் ✋

நாடுபவர் ✋

மேய்ப்பன் ✋

விதைப்பவன் ✋

மகன்/மகள் ✋

புனிதர் ✋

பணியாளர் ✋

மேலாளர் ✋

### எந்த மனோபாவத்தை ஆண்டவர் மிகவும் அன்பு செய்கிறார்?

### எந்த மனோபாவம் சிறந்த தலைவரை உருவாக்கக்கூடும்?

ரோமர் 12:4-5

*4. ஏனெனில், நமக்கு ஒரே சரீரத்திலே அநேக அவயவங்களிருந்தும், எல்லா அவயவங்களுக்கும் ஒரே தொழில் இராததுபோல,*

*5. அநேகராகிய நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்க, ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறோம்.*

## சேர்ந்து உறுதியாயிறு

### உலகத்தில் எட்டு விதமான மக்கள் ஏன் உள்ளனர்?

### இயேசு எப்படிப்பட்டவர்?

சிப்பாய்👋

நாடுபவர் 👋

மேய்ப்பன் 👋

விதைப்பவன் 👋

மகன்/மகள் 👋

புனிதர் 👋

பணியாளர் 👋

மேலாளர் 👋

சச்சரவு உண்டாகும்போது நமக்கு உள்ள மூன்று விருப்பத் தேர்வுகள் எவை?

ஓடிப்போதல் 👋

ஒருவரைஒருவர் எதிர்கொள் 👋

ஆண்டவரின் ஆவியால் ஒன்றாக செயல்பட முயற்சிசெய்.👋

*-கலாத்தியர் 2:20-*

*19. தேவனுக்கென்று பிழைக்கும்படி நான் நியாயப்பிரமாணத்தினாலே நியாயப்பிரமாணத்திற்கு மரித்தேனே.*

# சுவிசேஷத்தை பகிர்ந்துகொள்

## எளிமையான சுவிசேஷத்தை நான் எவ்வாறு பகிர்ந்து கொள்வேன்?

தங்க பாசிமணி

நீல பாசிமணி

பச்சை பாசிமணி

கருப்பு பாசிமணி

வெள்ளை பாசிமணி

சிவப்பு பாசிமணி

## இயேசுவின் உதவி நமக்கு ஏன் தேவை?

தேவனிடத்தில் திரும்ப வரும் சாமர்த்தியம் ஒருவனிடத்தில் இல்லை.

தேவனிடத்தில் திரும்ப வரும் அளவிற்கு ஒருவரும் கொடுப்பதில்லை.

தேவனிடத்தில் திரும்ப வர ஒருவருக்கும் பெலன் இல்லை.

தேவனிடத்தில் திரும்ப வரும் அளவிற்கு ஒருவரும் நல்லவரில்லை.

*-யோவான் 14:6-*

*அதற்கு இயேசு: நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்.*

## இயேசுவின் திட்டத்தில் முதல் படி எது?

### *லூக்கா 10':1-4*

*இவைகளுக்குப் பின்பு கர்த்தர் வேறே எழுபதுபேரை நியமித்து, தாம் போகும் சகல பட்டணங்களுக்கும் இடங்களுக்கும் அவர்களைத் தமக்கு முன்னே இரண்டிரண்டு பேராக அனுப்பினார். அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்; ஆகையால் அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள். புறப்பட்டுப்போங்கள்; ஆட்டுக்குட்டிகளை ஓநாய்களுக்குள்ளே அனுப்புகிறது போல, இதோ, நான் உங்களை அனுப்புகிறேன். பணப்பையையும் சாமான் பையையும் பாதரட்சைகளையும் கொண்டுபோக வேண்டாம்; வழியிலே ஒருவரையும் வினவவும் வேண்டாம்.*

...

## 1. இதயங்களை தயார் செய்தல்(1-4)

## இரண்டு இரண்டு பேராக செல்லவும்(1)

“முதல் வசனத்தில் இயேசு இரண்டு இரண்டு பேராக செல்ல கட்டளை இட்டார்: பல கலாச்சாரங்களில் இரண்டு ஆண்கள் அல்லது இரண்டு பெண்களை குறிக்கும். பங்காளி இல்லாமல் நீங்கள் தனியாக விடப்படுவீர்கள். ஒன்றோடு ஒன்றை இரண்டு முறை பெருக்கினால் அது ஒன்று தான். இரண்டோடு இரண்டு முறை இரண்டை பெருக்கினால் எட்டாகும். ஒரு பங்காளியுடன் நமது ஊழியம் பெருக வாய்ப்பு அதிகம் உள்ளது.

மக்கள் தனியாக செயல்படும்போது, கடினமான நேரங்களில் சோர்ந்து போவார்கள். வேதத்தை நாம் ஆராய்ந்து பார்க்கும் போது, ஆவிக்குரிய தலைவர்கள், ஒரு பங்காளியுடன் சேர்ந்து செயல்பட்டதையும், இயேசு அவரது திட்டத்தில் இதை குறிப்பிட்டதையும் அறிகிறோம்.”

- இந்த காரியத்தை ஒரு சிறு நாடகத்தின் மூலமாக எடுத்துக்காட்டு

என்னையே சார்ந்துகொள்

“நீ தனிமையில் ஊழியம் செய்யும் நேரத்தில் ஒரு விபத்து ஏற்பட்டால் என்ன நடக்கும்?”

  - ஊழியத்திற்கு செல்லுவது போல நீ உன் அறையில் நடை போடு. நீ விபத்தில் அடைப்பட்டு கால்களை முரித்தாய் என்று எல்லோரிடம் சொல். நொண்டிக்கொண்டு அறையில் ஊழியம் செய். இப்போது மின்ன உன்னை தாக்கியது என்று சொல், கழுத்தை ஒரு பக்கம் இழுத்து இப்போது ஊழியத்தை தொடர்ந்து செய்.

“ஒரு பங்காளி இருந்தால் சூழ்நிலைகள் எவ்வாறு வித்தியாசமாக இருந்திருக்கும்.?”

- அதே காரியங்களை இப்போது ஒரு பங்களியுடன் மீண்டும் செய். விபத்திற்கு பின் உன் பங்காளி உனக்கு கட்டு போட்டு கவனிப்பார். கையில் ஒரு உலோகம் துண்டு இருக்கும் போது, மழையில் வெளியே செல்லக் கூடாது என்று உன் பங்காளி உனக்கு அறிவுரை கூறுவார்.

"இயேசு ஞானமாக வெளியில் செல்லும் போது பங்காளியுடன் செல் என்றார். நமக்கு பிரச்சனைகள் வரும் என்றும் உதவி தேவை படும் என்றும் தெரிந்திருந்தார்."

✋ஆள் காட்டி விரலையும், நடு விரலையும் இரண்டு கைகளிலும் ஒன்றாக இணைத்து சேர்ந்து "நடப்பதை" காட்டு.

## இயேசு கிரியை செய்யும் இடத்திற்கு செல்(1)

"நம் இயேசுவை பின்பற்றுவதால், நாம் நாமாக ஒன்றும் செய்வதில்லை, ஆனால் இயேசு எங்கே கிரியை செய்கிறார் என்பதை பார்த்து அவரோடு இணைந்து கொள்வோம். இயேசு நம்மை எங்கு அழைக்கிறார் என்பதை அறிந்து கொள்வது எளிதல்ல. நற்செய்தி என்னவென்றால், இயேசு நம்மை அன்பு செய்வதால் அவர் நமக்கு வழிகாட்டுவார்."

- சீடர்களை உருவாக்குதல் கருத்தரங்கில் உள்ள, "போ" என்ற பாடத்தின் கை அசைவுகளை திறனாய்வு செய்.

"நான் நானாக எதுவும் செய்வதில்லை."

✋ஒரு கரத்தை இருதயத்தின் மீது வைத்துக்கொண்டு "இல்லை" என்று தலையை அசைக்கவும்.

"ஆண்டவர் எங்கே கிரியைகளை செய்கிறார் என்று நான் தேடி கண்டடைகிறேன்"

✋ஒரு கரத்தை கண்கள் மேல் வைத்து, இடது, வலது புறங்களில் தேடவும்.

"அவர் எங்கு கிரியை செய்கிறாரோ, அங்கே நான் இணைந்து கொள்வேன்."

✋உனக்கு முன் கரங்களை நீட்டி ஆம் என்ற பாணியில் தலையை அசைத்துக் கொள்.

"அவர் என்னை அன்பு செய்கிறார், மற்றும் அவர் எனக்கு வழிகட்டுகிறார் என்பதை அறிந்திருக்கிறேன்."

✋கரங்களை உயர்த்தி துதித்து, கரங்களை இருதயத்தின் மேல் வைக்கவும்.

"என் இயேசுவின் திட்டத்தின், முதல் பத்தியில், தேவன் எங்கு கிரியை செய்கிறார் என்பதையும், அவர் எங்கு உன்னை அழைக்கிறார் என்பதையும் எழுது."

## அறுவடையிலிருந்து தலைவர்கள் எழும்ப ஜெபி(2)

"இரண்டாம் வசனத்தில், பணிக்கு செல்வதற்கு முன் ஜெபித்து செல்ல நமக்கு கட்டளை கொடுக்கிறார். இயேசு தனது திட்டத்தை நிறைவேற்றும் முன், ஊக்கமாக ஜெபம் செய்தார். நாமும் நமது திட்டத்தை துவங்கும் முன், அதிக நேரம் ஜெபத்தில் செலவிட வேண்டும்."

நமது குழுவில் உள்ள மக்களுக்காகவும், நாம் சந்திக்க இருக்கும் மக்களுக்காகவும், தேவன் கிரியை செய்யும் விதத்திற்காகவும் துதி செய்து ஜெபிக்க வேண்டும்."

✋துதி

இரு கரங்களையும் உயர்த்தி துதிக்கவும்.

"நாம் நமது பாவங்களுக்காக, குழுவில் நம்மை பின்பற்றுபவர்களின் பாவங்களுக்காக, நாம் சந்திக்கும் குழுக்களின் பாவங்களுக்காக (மூட நம்பிக்கை, சிலை வழிபாடு, தாயத்து உபயோகம் போன்றவை) மனம் வருந்த வேண்டும்."

✋மனம் வருந்து

கரங்களை முகத்திற்கு முன் கொண்டுவரவும்; முகத்தை திருப்பவும்.

“நாம் செல்லும் இடத்தில் தேவன் நமக்கு அங்குள்ள தலைவர்களை தரும்படியாக வேண்டுதல் செய்ய வேண்டும். தேவனை பின்பற்றும் தலைவர்களாக நம்மை மற்றும் படியாக நாம் ஜெபித்தல் வேண்டும், அப்பொழுது நம்மை பின்பற்றுபவர், இயேசுவை பின்பற்றுபவர்கள் ஆவார்கள்.”

✋கேளுங்கள்

பெற்றுக்கொள்ளும் பாணியில் கரங்களை சேர்க்கவும்.

“கடைசியாக, நாம் நம்மையே தேவனுடைய விருப்பத்திற்கு ஒப்புக்கொடுக்கிறோம்”

✋இணங்கு

கரங்களை கூட்டி நெற்றியின் மேல் கரங்களை வைத்து மரியாதை செலுத்தவும்.

“நீங்கள் செல்லும் இடத்தில், நீங்கள் ஜெபிக்கும் தலைவர்களின் பெயர்களை, என் இயேசுவின் திட்டத்தில் முதல் பத்தியில் எழுதவும்.”

## தாழ்மையுடன் செல் (3)

“மூன்றாவது வசனத்தில், ஆட்டுக்குட்டிகளை ஒநாய்களுக்குள் அனுப்பவுதுபோல நாங்கள் அதை தாழ்மையுடன் ஏற்றுக்கொள்கிறோம். தாழ்மையான இதயத்திலிருந்து வரும் செய்தியை மக்கள் விரும்பிக் கேட்பார்கள். நாம் பெருமை உள்ளவர்களாக இருந்தால் நாம் சொல்வதை யாரும் கேட்பதில்லை.”

- கீழ்கண்ட நாடகத்தின் மூலமாக இந்த செய்தியை மக்களுக்கு எடுத்துரைக்கவும்.

பெரிய தலைவர்

“இப்போது நான் ஒரு கிராமத்திற்கு இந்த எண்ணத்தோடு சென்றால் மக்கள் என்ன நினைப்பார்கள்...?”

- பெருமையாக மார்பை உயர்த்திக்கொண்டு, “நான் பெரிய தலைவன், நான் சொல்வதை எல்லோரும் கேட்க வேண்டும்!”. எல்லோரும் நீங்கள் தான் சிறந்தவர் மற்றும் பெரியவர் என்ற எண்ணம் உடையவர் என்று அனைவரும் அறிந்து கொள்வார்கள்.

“இயேசு ஞானமாக நம்மை தாழ்மையுடன் செல் என்கிறார். செய்தியை சுமந்து செல்லும் நாம் தாழ்மையுடனும் உதவும் மனப்பான்மையுடனும் இருந்தால் மக்கள் செய்தியை ஏற்றுக்கொள்வார்கள். பெருமையோடு அதிகாரம் செலுத்துபவர்களை ஒருவரும் விரும்புவதில்லை.”

தாழ்மையுடன் செல்

ஜெப பாணியில் கைகளை சேர்த்து வணங்கவும்.

“தாழ்மையுடன் செல் என்பதற்கான கேள்விக்கு உன் பதில் என்ன என்பதை ‘என் இயேசுவின் திட்டத்தின்’ முதல் பத்தியில் எழுதவும்.”

## பணத்தை அல்ல, தேவனையே சார்ந்திரு (4)

“இயேசுவின் திட்டத்தில் நாம் கடைபிடிக்க வேண்டிய காரியங்களை தெளிவாக இயேசு எடுத்துக்காட்டுகிறார். கிறிஸ்தவ வரலாற்றில் அநேக தலைவர்கள், முழுமையாக இந்த வழிமுறைகளை கடைபிடிக்காததால், அநேக தவறுகளை செய்தார்கள். நமது ஊழியம் பணத்தை அல்ல, தேவனை சார்ந்தே இருக்க வேண்டும் என்று இயேசு வலியுறுத்துகிறார். நாம் தேவனுக்கு அல்லது லாபத்திற்கு ஊழியம் செய்ய முடியும், ஆனால் இரண்டிற்கும் சேர்த்து செய்ய முடியாது. நாம் செய்வது எல்லாம் ஆண்டவரை சார்ந்தது என்றும் செல்வத்தை அல்ல என்று மனதில் கொள்ள வேண்டும்.”

- கீழ்கண்ட நாடகத்தின் வழியாக இந்த செய்தியை எடுத்துரைக்கவும்:

பணம் தேனை போன்றது

““இப்போது நான் ஒரு கிராமத்திற்கு இந்த எண்ணத்தோடு சென்றால் மக்கள் என்ன நினைப்பார்கள்...?”

- நீர் ஒரு கை பையுடன் ஒரு கிராமத்திற்குள்ளே நுழைந்ததாக பாவனை செய்யவும். ஒரு தலைவனிடம் சென்று, ‘என்னிடத்தில் அதிகம் பணம் உள்ளது, நாங்கள் ஒரு சபையை துவங்க இருக்கிறோம், உங்களுக்கு நாங்கள் என்ன செய்ய முடியும் என்று வந்து பார்’ இதே செய்தியை பல தலைவர்களுக்கு சொல்லிக் கொண்டே இரு.

“இயேசு ஞானமாக செல்வத்தின் மீது அல்ல, ஆண்டவரும் இரட்சகருமாகிய தேவ குமாரநிடத்தில் நம்பிக்கையை வைக்கவேண்டும். அவர் அளிக்கும் பணத்திற்கோ உதவிக்காகவோ அல்ல. செல்வம் தேனை போன்றது, நாம் தேவனை சாராமல் அதை சார்ந்திருந்தால் பிரச்னைக்கு வழி வகுக்கும்.”

செல்வத்தை அல்ல தேவனையே சார்ந்திரு

சட்டை பையிலிருந்து பணத்தை எடுப்பது போன்று பாவனை செய்து, தலையை ‘இல்லை’ என்று அசைத்து, வானத்தை நோக்கி தலையை “ஆம்” என்று அசைக்கவும்.

“’என் இயேசுவின் திட்டத்தில்’, முதல் பத்தியில் உனது ஊழியத்தில் முதல் வருடத்தில் எவ்வளவு செலவாகும் என்பதை குறிப்பிடவும்.”

## அவர் அழைக்கும் இடத்திற்கு நேராக செல்லவும் (4)

“இயேசு, நான்காவது வசனத்தில், செல்லும் வழியில் ஒருவரையும் வாழ்த்தாமல் பணிக்கு செல் என்று கட்டளை இடுகிறார். அவர் நமது முழு கவனத்தையும் பணியின் மீதே இருக்க வேண்டும் என்று எடுத்துரைக்கிறார், அல்லாமல், சந்திப்பவர்களிடம் கடினமாக நடந்து

கொள்ள வேண்டும் என்பது அல்ல. அனேகர் சிறந்த பணியை விட்டு விட்டு நல்ல பணி செய்வதில் தங்களை ஈடுபடுத்திக் கொள்கின்றனர்."

- கீழ்கண்ட நாடகத்தின் வழியாக இந்த செய்தியை எடுத்துரைக்கவும்:

கவனத்தை திசை திருப்பும் நற்காரியங்கள்

""இப்போது நான் ஒரு கிராமத்திற்கு இந்த எண்ணத்தோடு சென்றால் மக்கள் என்ன நினைப்பார்கள்...?"

- கற்றுகொள்பவர் இந்த வழிமுறையை செய்து காட்ட போகிறார் என்று எல்லோரிடமும் சொல்லவும். அறையின் மறுபக்கம் உள்ள ஒரு குழுவிடம்:

"என் நண்பனிடம் ஒரு சிலர் வந்து உதவி செய்யும்படி கேட்டனர். நடக்கப்போவதை பாருங்கள். "

- பயிலுனர், செய்து கொண்டே செய்முறை விளக்கத்தை தனது தலைவருக்கு விவரிக்கிறார். உதவி தேவயானவரை நோக்கி பயிலுனர் புறப்படுகிறார். திடீர் என்று தனது நண்பர்களிடம் விடை பெற வேண்டும் என்ற எண்ணம் எழுகிறது. அவர் தனது நண்பர்களோடு அமர்ந்து சிறிது நேரம் உரையாடுகிறார். சில நிமிடங்களுக்கு பின் அவர் ஊழியத்திற்கு செல்ல வேண்டும் என்ற எண்ணம் நினைவுக்கு வருகிறது. அவர் எழுந்து புறப்பட இருக்கையில் தன் சகோதரிக்கு பணம் கொடுக்க வேண்டியது நினைவுக்கு வந்ததால் அவர்களது வீட்டிற்கு செல்கிறார். சகோதரி இரவு உணவை அளித்து அங்கு தங்கும் படி கேட்டுக் கொண்டார்கள். மூன்றாவது முறையும் சரியான ஒரு காரணத்தை கூறி சென்று விடுகிறார். இறுதியாக ஊழியம் செய்ய வேண்டிய இடத்தை சென்றடைகிறார். ஆனால் அந்த கிராமத்தில் உள்ள மக்கள், ஒருவர் கூட அவருக்கு செவி மடுக்கவில்லை.

"இயேசு நம்மை நேராக நாம் ஊழியம் செய்ய வேண்டிய இடத்திற்கு செல்ல வேண்டும் என்று ஞானமாக நமக்கு கட்டளை இடுகிறார். இவ்வுலக கவலைகள் நம் சிந்தனையை சிதறடிக்க நேருவதால் நாம்

ஊழியம் செய்ய இருக்கும் இடத்தில், தேவனுடைய கிரியை அறியாமல் இருக்க நேரும்."

✋இரு உள்ளங் கைகளையும், விரல்களையும் சேர்த்து ஒன்றாக நீட்டி நேர்வழி போன்ற ஒரு அசைவை ஏற்படுத்தும்.

"'என் இயேசுவின் திட்டத்தின்' முதலாம் பத்தியில், சிந்தனை சிதறடிக்க கூடிய விஷயங்கள் குறிப்பிடுக."

## மனப்பாட வசனம்

*-லூக்கா 10:2-*

*அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்; ஆகையால் அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள்.*

- தலைவர்கள் நின்று கொண்டு வேதத்திலுள்ள மனப்பாட பகுதியை 6 முறை வேதத்தை படித்தும், 4 முறை பாராமலும் வசனத்தை அறிக்கை இடவேண்டும் (மொத்தம் 10 முறை). வசனம் சொல்வதர்க்கு முன், வசனப்பகுதியை சொல்ல வேண்டும். முடித்தபின் அமரவும்.
- இந்த வழிமுறையை பின்பற்றும் பொழுது, எந்த குழு தனது "செயல்பட்டு" பாடத்தை முடித்தார் என்பதை புரிந்து கொள்ளலாம்.

## செயல்முறை

- தலைவர்களை நான்கு நபர் குழுக்களாக பிரிக்கவும்.
- 7-8 நிமிடங்களுக்கு அவர்கள் கற்றுக் கொள்வதை படிப்படியாக பகிர்ந்து கொள்ளவும்.

## முன்னேற்றம்

"மேற்கண்ட வழிமுறைகளில் உங்கள் குழுவிற்கு எது எளிதாக இருந்தது?"

## பிரச்சனை

“மேற்கண்ட வழிமுறைகளில் உங்கள் குழுவிற்கு எது கடினமாக இருந்தது?”

## திட்டங்கள்

“அடுத்த 30 நாட்களுக்குள் இயேசுவின் திட்டத்திற்கு கீழ்படிய, தனிப்பட்ட முறையில் கையாள இருக்கும் ஒரு யுக்தியை பகிர்ந்து கொள்”

- எல்லோரும் தங்கள் நண்பர்களுக்காக ஜெபிக்கும்படியாக திட்டத்தை குறித்துக் கொள்ள வேண்டும்.
- ஒவ்வொருவரும் தங்கள் செயல்முறையை விளக்கியபின் குழுவில் உள்ள அனைவரும் எழுந்து நின்று, மனப்பாட வசனத்தை அறிக்கை இடுவார்கள்.

## ஜெபம்


- ஒருவர் ஒருவருடைய திட்டத்திற்காக ஜெபிக்கவும்.

# இறுதி

## எனது இயேசு திட்டம்

- தலைவர்கள் தங்கள் பங்கேற்பாளர் குறிப்பேட்டில் “எனது இயேசு திட்டம்” பக்கத்திற்கு திருப்பும்படி சொல்லவும்.

“இந்த பாடத்திலுள்ள குறிப்புக்களை “எனது இயேசு திட்டத்தின்” முதல் பத்தியில் குறிப்பிடுக. லூக்கா 10 ல், குறிப்பிடப்பட்டுள்ள இயேசுவின் வழிமுறைகளை எவ்வாறு நீ கடைபிடிக்க போகிறாய் என்பதையும் எழுதவும்.


Jesus
Dan
Tom
Patrick
Roy
Charles
John
Ed
Frank
Steve
Keith
Jeff
Zach
Zane

# 8

# குழுக்களை அமைத்தல்

இயேசுவின் திட்டத்தின் முதல் படியில் தலைவர்கள் தங்கள் இதயங்களை தயார் செய்கிறார்கள். "குழுக்களை அமைத்தல்" என்ற இந்த பாடமானது 2,3,4 படிகளை நிறைவேற்றுகிறது. லுக்க 10ல் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகளை நாம் கைப்பற்றினால் பல பிழைகளை தவிர்க்க முடியும். முடிவில், தலைவர்கள் தங்கள் சொந்த "இயேசு திட்ட" குறிப்பேட்டை நிரப்பும்போது, இந்த வழிமுறைகளை கையாள்வார்கள்.

இரண்டாம் படியானது உறவுகளை வளர்ப்பதை பற்றியது. ஆண்டவர் கிரியை செய்யும் இடத்தில் நாமும் இணைந்து தேவ செய்திக்கு செவி மடுப்பவர்களை கண்டடைய வேண்டும். ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மையை தெரிவிக்கும் படியாக அவர் அளிப்பதை நாம் உண்டு பருகுகிறோம். ஒரு நண்பரை விட்டு வேறொரு நண்பரிடம் செல்வதில்லை. ஏன் என்றால் சரிக்கட்டுதலின் செய்தியை அது பாதிப்பதாக உள்ளது.

நற்செய்தியை நாம் மூன்றாவது படியில் அறிவிக்கிறோம். இயேசு ஒரு நல்ல மெய்ப்பராக இருந்து தனது ஆடுகளுக்கு பாதுகாப்பும், தேவையை அளிப்பவராகவும் உள்ளார். இந்த படியில், ஊழியம் நிறைவேற்றும் போது, சுவிசேஷத்தை பகிர்ந்து சுகமளித்தலையும் இணைந்து செய்ய பயிற்சியாளர்கள். தலைவர்களுக்கு அறிவுறுத்துகின்றனர். அவர்கள்மீது அக்கறை கொண்டுள்ளோம் என்ற உணர்வு ஏற்பட்டால் ஒழிய மக்கள் நம்மீது கவனம் செலுத்த மாட்டார்கள். சுகமளிக்கும் ஊழியமானது சுவிசேஷத்தை பகிர்ந்து கொள்ள ஒரு நல்ல வாய்ப்பை ஏற்படுத்துகிறது.

நாம் விளைவுகளை மதிப்பிட்டு நாலாவது படியில் சரி செய்கிறோம். மக்கள் ஆவிக்குரிய காரியத்தில் அக்கறை உள்ளவர்களா அல்லது பணத் தேவை இருப்பதால் அக்கறை கொள்கிறார்களா? மக்கள் ஒத்துழைத்தால் அவ்விடத்தில் சுவிசேஷ பணியை தொடருவோம், இல்லாவிட்டால், இயேசுவின் கட்டளையின் படி வேறொரு இடத்திற்கு கடந்து செல்வோம்.

புகழ்

- இரண்டு துதி பாடல்களை சேர்ந்து பாடவும்.கருத்தரங்கை ஆசீர்வதிக்க ஒரு மதிப்பிற்குரிய தலைவர் ஜெபிக்க வேண்டும்.

முன்னேற்றம்

- தலைவர் ஒருவர் தனது சாட்சியை (3 நிமிடத்திற்கு )தமது ஊழியத்தை ஆண்டவர் எவ்வாறு ஆசீர்வதிக்கிறார் என்பதை பகிர்ந்து கொள்ள வேண்டும். குழுவானது அந்த தலைவருக்காகவும், அவரது ஊழியத்திர்காகவும் ஜெபம் செய்ய வேண்டும்.

பிரச்சனை

“அனேக நேரங்களில் விசுவாசிகள் நல்ல இதயம் உடையவர்களாகவும் தங்கள் சமூகத்திற்கு நற்செய்தியை கொண்டு செல்ல வேண்டும் என்று எண்ணுகிறார்கள். அவர்களது நோக்கத்தை நிறைவேற்ற ஒரு எளிதான திட்டம் இல்லை. ஒத்திகை பார்த்து பலர் நேரத்தை வீணாக்குகிறார்கள். இயேசு தனது சீடர்களுக்கு தெளிவான வழிமுறைகளை குழு துவங்க கற்றுக் கொடுத்தார். நாம் அவரது திட்டத்தை பின்பற்றி அவர் கிரியை செய்யும் இடத்தில் நாமும் கிரியை செய்யும் போது, தேவையற்ற தவறுகளை தவிற்க்கலாம்.”

திட்டம்

“இயேசுவை பின்பற்றுகிற சீடர்களை உருவாக்குகின்ற ஒரு நல்ல வழியை காட்டுவது இந்த பாடத்தின் நோக்கமாகும். சமாதானத்தை விரும்பும் ஒரு நபரை கண்டு அவருடைய ஆவிக்குரிய மற்றும் உலகத்திற்குரிய

தேவைகளை சந்தித்து நம் பணியை துவங்குகிறோம். இயேசுவும் அவரது திட்டத்தின் முடிவில் நம் பணியின் விளைவுகளை மதிப்பிட கட்டளை இடுகிறார்."

## திறனாய்வு

### நல்வரவு

யார் சபையை கட்டுவது?

அது ஏன் முக்கியத்துவம்வாய்ந்தது?

இயேசு கிறிஸ்து தன் சபையை எவ்வாறு கட்டினார்?

ஆண்டவரில் பெலன் கொள்ளுதல் ✋

சுவிசேஷத்தை பகிர்ந்து கொள்ளுதல் ✋

சீடர்களை உருவாக்கு ✋

குழுக்களையும் சபைகளையும் துவங்குதல் ✋

தலைவர்களை உருவாக்குதல் ✋

*1கொரி 11:1 நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல, நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்.*

## இயேசுவைப்போல் பயிற்சி அளி

### இயேசு தலைவர்களுக்கு எவ்வாறு பயிற்சி அளித்தார் ?

முன்னேற்றம் ✋

பிரச்சனை✋

திட்டங்கள்✋

செயல்முறை✋

ஜெபம்✋

*லூக் 6:40 சீஷன் தன் குருவுக்கு மேற்பட்டவனல்ல, தேறினவன் எவனும் தன் குருவைப்போலிருப்பான்.*

## இயேசுவைப்போல் வழிநடத்து

### யார் சிறந்த தலைவர் என்று இயேசு சொன்னார் ?

### சிறந்த தலைவரின் ஏழு பண்புகள் யாவை?

1. மிக சிறந்த தலைவர்கள் மக்களை அன்பு செய்கின்றனர்.
2. மிக சிறந்த தலைவர்கள் தங்கள் ஊழியத்தை அறிந்திருக்கிறார்கள்.
3. மிக சிறந்த தலைவர்கள் தங்களை பின்பற்றுபவர்களுக்கு பணியாளராக இருப்பர்.
4. மிக சிறந்த தலைவர்கள் அன்போடு தவறுகளை எடுத்துக் காட்டுகின்றனர்.
5. மிக சிறந்த தலைவர்கள் தங்கள் குழுவிலுள்ள நிகழ்கால பிரச்சனைகளை அறிந்திருக்கிறார்கள்.
6. மிக சிறந்த தலைவர்கள் நல்ல உதாரணமாக இருப்பார்கள்.
7. மிக சிறந்த தலைவர்கள் தாங்கள் ஆசீர்வதிக்கப் பட்டவர்கள் என்று அறிந்திருக்கிறார்கள்.

*யோவான் 13:14,15- 14. ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள்.*

*15. நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன்.*

## பலப்படு

சிப்பாய்👋

நாடுபவர் 👋

மேய்ப்பன் 👋

விதைப்பவன் ☟

மகன்/மகள் ☟

புனிதர் ☟

பணியாளர் ☟

மேலாளர் ☟

எந்த மனோபாவத்தை ஆண்டவர் மிகவும் அன்பு செய்கிறார்?

எந்த மனோபாவம் சிறந்த தலைவரை உருவாக்கக்கூடும்?

> *ரோமர் 12:4-5- 4. ஏனெனில், நமக்கு ஒரே சரீரத்திலே அநேக அவயவங்களிருந்தும், எல்லா அவயவங்களுக்கும் ஒரே தொழில் இராததுபோல, 5. அநேகராகிய நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்க, ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறோம்.*

## சேர்ந்து உறுதியாயிறு

உலகத்தில் எட்டு விதமான மக்கள் ஏன் உள்ளனர்?

இயேசு எப்படிப்பட்டவர்?

சிப்பாய்☟

நாடுபவர் ☟

மேய்ப்பன் ☟

விதைப்பவன் ☟

மகன்/மகள் ☟

புனிதர் ☟

பணியாளர் ☟

மேலாளர் ☟

சச்சரவு உண்டாகும்போது நமக்கு உள்ள மூன்று விருப்பத் தேர்வுகள் எவை?

ஓடிப்போதல் ☝

ஒருவரைஒருவர் எதிர்கொள் ☝

ஆண்டவரின் ஆவியால் ஒன்றாக செயல்பட முயற்சிசெய். ☝

*-கலாத்தியர் 2:19-19. தேவனுக்கென்று பிழைக்கும்படி நான் நியாயப்பிரமாணத்தினாலே நியாயப்பிரமாணத்திற்கு மரித்தேனே.*

## சுவிசேஷத்தை பகிர்ந்துகொள்

எளிமையான சுவிசேஷத்தை நான் எவ்வாறு பகிர்ந்து கொள்வேன்?

தங்க பாசிமணி

நீல பாசிமணி

பச்சை பாசிமணி

கருப்பு பாசிமணி

வெள்ளை பாசிமணி

சிவப்பு பாசிமணி

## இயேசுவின் உதவி நமக்கு ஏன் தேவை?

தேவனிடத்தில் திரும்ப வரும் சாமர்த்தியம் ஒருவனிடத்தில் இல்லை.

தேவனிடத்தில் திரும்ப வரும் அளவிற்கு ஒருவரும் கொடுப்பதில்லை.

தேவனிடத்தில் திரும்ப வர ஒருவருக்கும் பெலன் இல்லை.

தேவனிடத்தில் திரும்ப வரும் அளவிற்கு ஒருவரும் நல்லவரில்லை.

*-யோவான் 14:6- அதற்கு இயேசு: நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்.*

## சீடர்களை உருவாக்கு

இயேசுவின் திட்டத்தில் முதல் படி எது?

இதயங்களை தயார் செய்தல் ☟

இரண்டு இரண்டு பேராக செல்லவும் ☟

இயேசு கிரியை செய்யும் இடத்திற்கு செல் ☟

அறுவடையிருந்து தலைவர்கள் எழும்ப ஜெபி ☟

தாழ்மையுடன் செல் ☟

பணத்தை அல்ல, தேவனையே சார்ந்திரு ☟

அவர் அழைக்கும் இடத்திற்கு நேராக செல்லவும்☟

*-லூக்கா 10:2- அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்; ஆகையால் அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள்.*

இயேசுவின் திட்டத்தில் இரண்டாவது படி என்ன?

*லூக்கா 10:5-8-*

*5. ஒரு வீட்டில் பிரவேசிக்கிறபோது: இந்த வீட்டுக்குச் சமாதானம் உண்டாவதாகவென்று முதலாவது சொல்லுங்கள்.*

*6. சமாதான பாத்திரன் அங்கே இருந்தால், நீங்கள் கூறின சமாதானம் அவனிடத்தில் தங்கும், இல்லாதிருந்தால் அது உங்களிடத்திற்குத் திரும்பிவரும்.*

*7. அந்த வீட்டிலேதானே நீங்கள் தங்கியிருந்து, அவர்கள் கொடுக்கிறவைகளைப் புசித்துக் குடியுங்கள்; வேலையாள் தன் கூலிக்குப் பாத்திரனாயிருக்கிறான். வீட்டுக்கு வீடு போகாதிருங்கள்.*

*8. ஒரு பட்டணத்தில் நீங்கள் பிரவேசிக்கிறபொழுது, ஜனங்கள் உங்களை ஏற்றுக்கொண்டால் அவர்கள் உங்கள்முன் வைக்கிறவைகளை நீங்கள் புசித்து,*

2. நண்பர்களை உருவாக்குதல்(5-8)

சமாதான பத்திரனை கண்டுபிடி (5,6)

“ஐந்து ஆறு வசனகளில், சமாதானத்தை விரும்புவர்களை தேடும் படியாக இயேசு கட்டளை இடுகிறார். சமாதான பத்திரன், நீங்கள் செல்லும் இடத்தில் தேவனை தேடுபவராக இருக்கிறார். ஆவிக்குரிய காரியங்களை நீங்கள் பகிர்ந்து கொள்ளும் போது, அவர்கள் ஆர்வத்தோடு கற்றுக்கொள்வார். தேவன் அவருக்குள்ளே கிரியை செய்ய துவங்கியிருக்கிறார். நமது சாட்சியை பகிர்ந்து கொள்வது சமாதானத்தை விரும்புவரை கண்டுபிடிக்க ஒரு சிறந்த வழியாகும்.”

- இயேசு திட்டத்தின் இரண்டாம் பத்தியில், நீங்கள் பணி செய்யும் இடத்தில் சமாதானத்தை விரும்புவர்களின் பெயரை குறிப்பிடுக.

## ✋சமாதான பாத்திரர்

நண்பர்கள் கையை சேர்த்து வாழ்த்து கூறுவது போல பாணி செய்யவும்,

அவர்கள் கொடுப்பதை உண்டு அருந்துங்கள் (7,8)

“அவர்கள் கொடுப்பதை உண்டு அருந்துங்கள் என்று இயேசு ஏன் வலியுறுத்துகிறார்? ஏன் என்றால் நாம் நண்பர்களை உருவாக்கும் போது, கலாச்சாரங்களை மதிக்க வேண்டும் என்று விரும்புகிறார். நட்பில் நண்பர்கள் அளிப்பதை ஏற்றுக்கொள்வது சிறந்த முறையாகும்.

பழக்கம் இல்லாத உணவு நமக்கு ஒத்துப்போகவில்லை என்றால் தேவனுடைய கிருபையை நாடவும். கேட்டால் பெற்றுக்கொள்வீர்கள். அவர்கள் கொடுப்பதை உண்டு மகிழும்போது அவர்கள் நம்மை ஏற்றுக்கொள்வார்கள்.”

- இயேசு திட்டத்தின் இரண்டாம் பத்தியில், நீங்கள் பணி செய்யும் இடத்தில் உள்ள உணர்ச்சியுடன் இருக்கவேண்டிய கலாச்சாரங்களும், உணவுகளையும், குறிப்பிடுக.

☝ சாப்பிடு, அறுந்து

சாப்பிடுவதைபோலவும், அருந்துவதை போலவும் செய்கை செய்யவும். உணவு நன்றாக இருப்பது போல வயிற்றின் மேல் கரத்தை வைத்து உருட்டவும்.

## வீட்டுக்கு வீடு போகாதீர்கள் (7)

“ஏழாவது வசனத்தில், இயேசு, அந்த கிராமத்தில் சந்திக்கிரவரோடு தங்க கூறுகிறார். நட்பை வளர்க்க சமயம் ஆகும், எல்லா உறவுகளிலும் அவ்வப்போது சச்சரவுகளும், குழப்பங்களும் இருக்கும். ஒரு சிறு குழப்பம் ஏற்படும்போது நாம் வேறொரு இடத்திற்கு சென்றோம் என்றால், நாம் போதிக்கும் சரிக்கட்டுதலின் நற்செய்திக்கு எதிராக செல்லும்.”

☝ வீட்டுக்கு வீடு போகாதீர்கள்

வீட்டின் கூரையை போல கைகளை ஒன்று சேருங்கள். அந்த வீடை இங்கே அங்கே நகற்றி, “இல்லை” என்று கூறுங்கள்.

- இயேசு வழிமுறையின் இரண்டாவது படிய கீழ்கண்ட நாடகத்தின் மூலம் கற்று கொடுக்கவும்:

ஒரு கிராமத்தை எப்படி கோபப்படுத்துதல்

“நீங்கள் கிராமத்திற்குள் இவ்வாறு நினைத்து கிராமத்திற்குள் வந்தால் மக்கள் என்ன நினைப்பார்கள் ?”

- நீங்கள் இயேசு திட்டத்தை இதுவரை கடைபிடித்ததாக எல்லோரிடமும் கூறுங்கள். ஊழியம் செய்யும் இடத்திற்கு ஜோடியாக செல்லுகிறீர்கள். ஜெபித்தீர்கள், தாழ்மையுடன் செல்லுகிறீர்கள், செல்வத்தின்மீது சாரவில்லை. ஆண்டவர் இந்த

கிராமத்தில் கிரியைகள் செய்கிறார், நீங்கள் நீராக அங்கே செல்லுகிறீர்கள். அங்கே கிராமத்தில் என்ன நடக்கிறது, கிராமவாசிகள் எப்படி பதில் கொடுக்கிறார்கள் என்று பார்க்க சொல்லுங்கள்.

- தலைவர்கள் எல்லோரும் ஒரு கிராமத்தில் இருப்பதை போல் நினைக்கும் படி கூறுங்கள். சிறு குழுக்கள், கிராமத்தில் உள்ள வீடுகள்.
- முதல் வீட்டிற்கு சென்று அவர்களை ஆசீர்வதியுங்கள். அவர்களோடு அமர்ந்து நேரம் செலவு செய்யுங்கள். உங்களுக்கு தாங்க முடியாத பசி இருப்பதனால், சாப்பிட ஏதாவது இருக்கிறதா என்று கேளுங்கள். அவர்கள் கொண்டு வந்த உணவை சாப்பிட்ட பின் முகத்தை சுளிய்ங்கள். உங்கள் நண்பனிடம், அங்கே இருக்க இயலாது, உணவு நன்றாகவே இல்லை, நீங்கள் சாகப்போகிரீர்கள் என்று கூறுங்கள். உங்களுக்கு வயிற்றுவலி இருப்பதை போல வயிற்றை தடவி, போய்வருகிறேன் என்று கூறுங்கள்.
- இரண்டாவது வீட்டிற்கு சென்று, அவர்களை ஆசீர்வதியுங்கள், அவர்களோடு அமர்ந்து, அங்கே இரவில் தங்க ஒப்புக்கொள்ளுங்கள். தூங்குவதை போல் “நடியுங்கள்”. சிறிது நேரத்திற்கு பிறகு, உங்களது பங்காளி, அங்கே ஒருவர் குறட்டை இடுவதால் தூங்க முடியாது என்று உங்களிடம் சொல்லுகிறார். அவர் இரவு முழுவதும் தூங்க வில்லை. கண்களை துடைத்துக்கொண்டே போய்வருகிறோம் என்று கூறுங்கள்.
- மூன்றாவது வீட்டிற்கு செல்லுங்கள், அங்கே அவர்களை ஆசீர்வதித்து, அங்கே அமர்ந்து சிறிது நேரம் செலவிடுங்கள். அங்கே வீண் பேச்சு அதிகமாக இருப்பதனால் தாங்க முடியாது என்று உங்கள் பங்காளியிடம் சொல்லுங்கள். காதுகளை தடவிக்கொண்டே, போய்வருகிறேன் என்று கூறுங்கள்.
- இறுதியாக ஒரு வீட்டிற்கு செல்லுங்கள், அங்கே அவர்களை ஆசீர்வதித்து, அங்கே அமர்ந்து சிறிது நேரம் செலவிடுங்கள். இந்த வீட்டில் மிக அழகான பெண்கள் இருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டீர்கள் என்று சொல்லி, உங்கள் நண்பனுக்கு பெண் பார்ப்பதாக கூறி அவரை பற்றி நல்ல விஷயங்களை கூறுங்கள்.

ஆண்டவர் அவர்களுடைய அழகான பெண்களுள் ஒருவரை திருமணம் செய்ய விரும்புகிறார் என்று.

“இந்த கிரமத்தில் நாம் சுவிசேஷத்தை பகிர்ந்து கொள்ள நினைத்தால் மக்கள் என்ன நினைப்பார்கள்? நமக்கு மரியாதையே இல்லை என்று நினைப்பார்கள். அவர்கள் நமக்கு என்ன கொடுக்க முடியும் என்பதை மட்டும் தான் தியானித்தோம். இயேசு திட்டத்தை கடைபிடித்தால் பல தவறுகளை தவிர்க்கலாம்.

- இயேசு திட்டத்தின் இரண்டாவது பத்தியில், நீங்கள் தாங்கும் வீட்டில் என்ன செய்வீர்கள் என்று. அவர்கள் எவ்விதங்களில் ஆசீர்வதிப்பீர்கள்.

இயேசுவின் திட்டத்தின் மூன்றாவது படி என்ன?

*-லூக்கா 10:9-*

*அவ்விடத்திலுள்ள பிணியாளிகளைச் சொஸ்தமாக்கி: தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குச் சமீபமாய் வந்திருக்கிறது என்று அவர்களுக்குச் சொல்லுங்கள்.*

## 3. சுவிசேஷத்தை பகிருங்கள்

## பிணியார்களை சொஸ்தமாக்கு (9)

“இயேசுவின் ஊழியத்தில் ஆன்மீக மற்றும் வாழ்வதற்குரிய தேவைகளும் பூர்த்தி செய்தார். நாம் பல வகைகளில் ஒரு கிராமத்தையோ அல்லது ஒரு குழுவையோ குணப்படுத்தலாம், அவை சமூக முன்னேற்றம், குடிநீர் வசதியை மேம்படுத்துதல், மருத்து உதவி, பிநியுள்ளவகளுக்கு ஜெபிப்பது, ஆலோசனை செய்வது.”

- இயேசு திட்டத்தின் இரண்டாவது பத்தியில், நீங்கள் போகும் கிராமத்திற்கு, உங்கள் ஊழியத்தின் மூலமாக என்ன சமூக சேவைகளை செய்வீர்கள்.

☝ பிணியாளர்களை குணப்படுத்து.

பிணியாளரின் மேல் கரங்களை வைப்பது போல், கரங்களை விரியுங்கள்.

சுவிசேஷத்தை பகிர்ந்துகொள் (9)
"நற்செய்தியை பகிர்வதின் இரண்டாவது பாகம் சுவிசேஷத்தை பகிர்ந்து கொள்வது."
"நற்செய்தியை மக்கள் அவர்கள் பாஷையில் புரிந்து கொண்டால் தான் அது நற்செய்தி ஆகும். கேட்கும் மக்களுக்கு நீங்கள் சொல்வது புரிகிறதா என்பதை பார்ப்பது நற்செய்தியை அறிவிப்பதில் ஒரு பெறிய அம்சமாகும்."

☟ சுவிசேஷத்தை பகிர்ந்துகொள்
நீங்கள் ஒரு ஒலிபெருக்கியை பிடிப்பது போல கரங்களை வாயிடத்தில் வைக்கவும்.

- இயேசு வழிமுறையின் இரண்டாவது படிய கீழ்கண்ட நாடகத்தின் மூலம் கற்று கொடுக்கவும்:

இரட்டை சிறகு பறவை

"இயேசு மக்களை குணமாக்கி சுவிசேஷத்தை பகிர்ந்துகொள்ள அழைத்தார். இவை பறவையின் இரண்டு சிறகுகளை போன்றது, இரண்டும் இருந்தால் பறக்கலாம்!"

- ஒரு தொண்டரை அழையுங்கள். அவர் மக்களை குணமாக்குவதில் ஆசீர்வதிக்கப் பட்டவர் என அவருக்கு எடுத்து சொல்லுங்கள்.
- அந்த தொண்டரை இரண்டு கரங்களை சிறகுகளை போல் விரிக்க கூறுங்கள். ஊழியத்தில் ஒரு கை வலுவாக உள்ளது, ஆனால் இடது கை சோர்ந்து உள்ளது (அவனது இடது கை வலது கையை விட சிறியதாக காட்ட வேண்டும்.)
- இரண்டு கரங்களை இறகுகள் உள்ளதை போல கரங்களை மேல்நோக்கி உயர்த்தவும். உனது இடது கரம் குணம் ஆக்கும் வரம் உடையதாகவும், வலது கரம் பலம் குறைந்ததாகவும் எடுத்துரைக்கவும். நீ சுவிசேஷத்தை அறிவிப்பதில் பலன் குறைந்த நபராக உள்ளாய். தொண்டரை பலம் உள்ள மற்றும் பலம் குறைந்த

கையை வைத்து பறக்க சொல்லவும். நீயும் அப்படியே செய்யவும்.(இருவரும் வட்டமாக அதேபோல் செய்யவும்)

“இருவரும் சேர்ந்து பணிபுரியும் போது, முடிவு எவ்வாறு மாறுபட்டதாக இருக்கும்?”

- “பலவீனமான” உமது கரத்தை (சுவிசேஷ பணி), “பலவீனமான” தொண்டருடைய கரத்தை (சுகமளிக்கும் பணி) பற்றிக்கொள்ளட்டும்.

“இரண்டு பேருடைய பலத்தையும் ஒன்றாக இணைத்து செயல்படும் போது, நாம் உயர பறக்க முடியும்.”

- நீயும் தொண்டரும் ஒன்றாக “பலமான” கைகளை அடித்து அறைக்குள் “பறக்கவும்”.

இயேசுவின் திட்டத்தில் நான்காவது படி என்ன?

-லூக்கா 10:10-11-

*10. யாதொரு பட்டணத்தில் நீங்கள் பிரவேசிக்கிறபொழுது, ஜனங்கள் உங்களை ஏற்றுக்கொள்ளாவிட்டால் அதின் வீதிகளிலே நீங்கள் போய்:*
*11. எங்களில் ஒட்டின உங்கள் பட்டணத்தின் தூசியையும் உங்களுக்கு விரோதமாய்த் துடைத்துப்போடுகிறோம்; ஆயினும் தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குச் சமீபமாய் வந்திருக்கிறதென்பதை அறிந்துகொள்வீர்களாக என்று சொல்லுங்கள்.*

## 4. முடிவுகளை மதிப்பிட்டு சரிசெய்

## அவர்கள் அளிக்கும் பதிலை மதிப்பிடவும் (10,11)

“நீண்ட கால ஊழியத்தில் நிலைநிற்க மதிப்பிடு செய்வது ஒரு முக்கிய பகுதியாகும். மக்கள் ஏற்றுக்கொள்வதை மதிப்பிட்டு தேவையான மாற்றத்தை நமது திட்டத்தில் செய்ய வேண்டும்.
மக்கள் பதில் அளிக்காமல் இருப்பதற்கு ஒரு காரணம், புரிந்து கொள்ள இயலாமை, நாம் எளிதாக செய்தியை எடுத்துரைக்க வேண்டும். மக்களில் வாழ்கையில் பாவ செயல்கள் இருக்குமானால் நாம் இறைவனின் மன்னிக்கும் தன்மையை எடுத்துரைக்க, அவர்கள்

செய்தியை ஏற்றுக்கொள்வாரகள். கடந்த கால கடினமான அனுபவங்கள் அவர்கள் செய்தியை ஏற்றுக்கொள்ள தடை செய்வதால் நாம் அன்புடன் அவர்களை தேவ குடும்பத்தில் சேர்க்க வேண்டும். ஒரு நேரத்தில் மக்களை வெளிப்படையாக பேச செய்து அதற்கேற்ப நமது செய்தியை மாற்றி அமைக்க வேண்டும்.
*பணியை துவங்குவதற்கு முன்* நாம் எவ்வாறு அதை மதிப்பிடுவது என்பது இயேசுவின் திட்டத்தில் முதல் படியாகும்.

- இயேசுவின் திட்டத்தின் இரண்டாவது பத்தியில் இந்த ஊழியத்தின் “வெற்றி” என்று எதை காண்பாய்? அதை எவ்வாறு மதிப்பிடுவாய்?

☝விளைவுகளை மதிப்பிடு
தராசை போல் கரங்களை இரு பக்கமும் விரித்து, கேள்வி கேட்கும் பாவனையில் மேல் கீழாக அசைக்கவும்.

## அவர்கள் பதில் அளிக்கவில்லை என்றால் விட்டு செல்லுங்கள் (11)

“இயேசு திட்டத்தின் கடைசி வழிமுறை கடைபிடிக்க பலருக்கு கடினமானது. நாம் ஊழியம் செய்யும் இடத்தில் மக்கள் பதில் அளிக்க வில்லை என்றால் நாம் விட்டு செல்ல வேண்டும். பலமுறை இந்த சூழ்நிலை மாறும் என்று நாம் நம்பிக்கையோடு தொடருகிறோம். நாம் செல்ல வேண்டிய நேரத்தில் நம்பிக்கையோடு இருப்போம்.”

“ஊழியத்தில் ஒரு முக்கிய அம்சம் என்னவென்றால், எப்பொழுது விட்டு செல்வது என்பதை தீர்மானிப்பதில் தான். சிலர் அதிக வேகமாகவும், சிலர் அதிக தாமதமாகவும் அதை செய்கின்றனர். நண்பர்களை விட்டு விடுவது எளிதான காரியம் அல்ல. ஆனாலும் இயேசுவின் கட்டளையின் படி ஏற்றுக்கொள்ளாத மக்களை விட்டு விடுவது சிறந்தது.
மக்கள் செய்தியை ஏற்றுக்கொள்வார்களா? இல்லையா? என்பதை அறிய எவ்வளவு நாட்கள் பொறுத்திருக்க வேண்டும், ஒரு நாள்? ஒரு வாரம்? ஒரு வருடம்? ஒவ்வொரு ஊழியமும் வித்தியாசமானது. பல முறை

தேவனுடைய திட்டத்தின் படி செயல் பட மறுப்பதால் மற்ற ஒரு இடத்தில் நாம் பெற வேண்டிய ஆசீர்வாதத்தை இழந்து விடுகிறோம்.

- இயேசுவின் திட்டத்தின் இரண்டாவது பத்தியில் தேவன் கொடுத்த திட்டத்தை நிறைவேற்ற எவ்வளவு நாள் வேண்டும் என்பதை எழுதவும். மக்கள் செய்தியை ஏற்றுக்கொள்ள வில்லை என்றால் அடுத்து எங்கு துவங்குவது?

☝ ஏற்றுக்கொள்ள வில்லை என்றால் [புறப்பட்டு
சென்று வருகிறேன் என்று கை அசைக்கவும்.

## மனப்பாட வேத வசனம்

*-லூக்கா 10:9-*

*9. அவ்விடத்திலுள்ள பிணியாளிகளைச் சொஸ்தமாக்கி: தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குச் சமீபமாய் வந்திருக்கிறது என்று அவர்களுக்குச் சொல்லுங்கள்.*

- தலைவர்கள் நின்று கொண்டு வேதத்திலுள்ள மனப்பாட பகுதியை 6 முறை வேதத்தை படித்தும், 4 முறை பாராமலும் வசனத்தை அறிக்கை இடவேண்டும் (மொத்தம் 10 முறை). வசனம் சொல்வதர்க்கு முன், வசனப்பகுதியை சொல்ல வேண்டும். முடித்தபின் அமரவும்.
- இந்த வழிமுறையை பின்பற்றும் பொழுது, எந்த குழு தனது “செயல்பட்டு” பாடத்தை முடித்தார் என்பதை புரிந்து கொள்ளலாம்.

# செயல்முறை

- தலைவர்களை நான்கு நபர் குழுக்களாக பிரித்து தலைமைத்துவ பாடத்தையும் செயல்முறையை ஒன்றாக உபயோகிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளவும்.
- 7-8 நிமிடங்களுக்கு அவர்கள் கற்றுக் கொள்வதை படிப்படியாக பகிர்ந்து கொள்ளவும்.

## முன்னேற்றம்

“மேற்கண்ட வழிமுறைகளில் உங்கள் குழுவிற்கு பின்பற்ற எது எளிதாக இருந்தது?”

### பிரச்சனை

“மேற்கண்ட வழிமுறைகளில் உங்கள் குழுவிற்கு பின்பற்ற எது கடினமாக இருந்தது?”

### திட்டங்கள்

“அடுத்த 30 நாட்களுக்குள் இயேசுவின் திட்டத்திற்கு கீழ்படிய, தனிப்பட்ட முறையில் கையாள இருக்கும் ஒரு யுக்தியை பகிர்ந்து கொள்”

- எல்லோரும் தங்கள் நண்பர்களுக்காக ஜெபிக்கும்படியாக திட்டத்தை குறித்துக் கொள்ள வேண்டும்.

### செயல்முறை

“அடுத்த 30 நாட்களுக்குள் இயேசுவின் திட்டதை முன்னேற்ற, தனிப்பட்ட முறையில் கையாள இருக்கும் ஒரு யுக்தியை பகிர்ந்து கொள்”

- எல்லோரும் தங்கள் நண்பர்களுக்காக ஜெபிக்கும்படியாக திட்டத்தை குறித்துக் கொள்ள வேண்டும்.
- தலைவர்கள் மனப்பாட வசனத்தை நின்றுகொண்டு பத்து முறை தங்களது பகிர்வு முடிந்தவுடன் அறிக்கை செய்ய வேண்டும்.

### ஜெபம்

- ஒருவர் ஒருவருடைய திட்டத்திற்காக ஜெபிக்கவும். ஆண்டவர் முன்னேற்ற பாதையில் தொடர்ந்து உதவி செய்யவும் பலவீனத்தை பலப்படுத்தவும் ஜெபிக்கவும்.

# இறுதி

### என் இயேசுவின் திட்டம்

- தங்களது குறிப்பேட்டின் கடைசி பக்கத்தில் “என் இயேசுவின் திட்டம்” பக்கத்தை திருப்பும்படி சொல்லவும்.

“இந்த பகுதியிலிருந்து குறிப்பை இரண்டு மற்றும் மூன்று பத்தியில் இயேசுவின் திட்டத்தில் எழுதவும். இந்த பத்திகலானது சமாதானத்தை நாடுபவர் யார் என்பதையும், அவர்களுக்கு எவ்வாறு நாம் ஊழியம் செய்ய வேண்டும் என்பதையும் எடுத்துக் கட்டுகிறது. லூக்கா 10 ல் குறிப்பிட்டுள்ள இயேசுவின் வழிமுறைகளை கடைபிடிக்கும் முறைகளை எழுதுக.”

# 9

# குழுக்களை பெருக்கவும்

ஆண்டவரில் பலப்படுத்தல், சுவிசேஷம் பகிர்தல், புதிய குழுக்களை ஏற்படுத்தல், தலைவர்களை உருவாக்குதல், இவை யாவும் சபை வளருவதற்கு காரணமாக உள்ளது. பல தலைவர்களுக்கு சபை எவ்வாறு உருவாக்குவது என்று அறியாததால், சபை உருவாக்கினதில்லை. “குழுக்களை பெருக்கவும்” பாடம் எவ்வாறு குழுக்களை மற்றும் சபைகளை அமைத்தல் எவ்வாறு என்பதை பற்றியது. அப்போஸ்தலர் பணியில் நான்கு இடங்களில் குழுக்களை அமைக்க கட்டளை இடுகிறார். நாம் வசிக்கும் நகரங்களிலும், மண்டலங்களிலும் குழு அமைக்க கட்டளை இடுகிறார். நம் அருகாமையில் உள்ள பகுதிகளிலும் பல இன மக்கள் மத்தியிலும் குழுவை துவங்க கட்டளை இடுகிறார். இறுதியாக இயேசு, தூர தேசங்களுக்கு சென்று உலகத்தயே சென்று அடைய கட்டளை இடுகிறார். பயிற்சியாளர்கள் தங்களது எருசலேமிலும், யுதேயாவிலும், சமேரியாவிலும், மற்றும் உலகத்தின் கடை முனைவரையிலும் சாட்சிகளாய் இருக்க தலைவர்களை ஊக்குவிக்க வேண்டும். தலைவர் இந்த செயல் திட்டத்தையும் தனது “இயேசுவின் திட்டத்தில்” சேர்த்துக்கொள்ள வேண்டும்.”

அப்போஸ்தலர் பணியில் இதே காரியத்தை விவரிக்கிறது. கொர்நெலேயு வீட்டில் மேய்ப்பராகிய பேதுரு ஒரு சபையை துவங்க உதவினார். பவுல் என்ற சாதாரண மனிதன் ரோமாபுரியில் பல சபைகளை துவங்கினார். பிரசில்லா, அக்கில்லா தொழில் செய்ய சென்ற இடங்களில் எல்லாம் குழுக்களை துவங்கினார். அப்போஸ்தலர் பணி 8 ஆம் அதிகாரத்தில் சிதறடிக்க பட்ட மக்களும் அவர் செய்தார். இந்த பாடத்தில் தலைவர்கள் எங்கெல்லாம் குழுக்களை துவங்கலாம் என்று இயேசுவின் திட்டத்தில் எழுதவும். சபைகளை துவங்க மிக பெறிய தொகை வேண்டும்

என்ற எண்ணத்தை விட்டு விட்டு அங்கே பெரிய சபைகளின் துவக்கம் வீடுகளில் மிக (ஒரு வேத புத்தகத்தின் விலையை விட சற்று அதிமான பணத்தை கொண்டு) குறைந்த செலவில் உருவானது என்று வலியுறுத்தி இந்த பாடமானது முடிவுக்கு வருகிறது.

## புகழ்

- இரண்டு துதி பாடல்களை சேர்ந்து பாடவும்.கருத்தரங்கை அசீர்வதிக்க ஒரு மதிப்பிற்குரிய தலைவர் ஜெபிக்க வேண்டும்.

## முன்னேற்றம்

- தலைவர் ஒருவர் தனது சாட்சியை (3 நிமிடத்திற்கு )தமது ஊழியத்தை ஆண்டவர் எவ்வாறு ஆசீர்வதிக்கிறார் என்பதை பகிர்ந்து கொள்ள வேண்டும். குழுவானது அந்த தலைவருக்காகவும், அவரது ஊழியத்திர்காகவும் ஜெபம் செய்ய வேண்டும்.
- பதிலீடாக, முன்னேற்றம், பிரச்சனை, திட்டங்கள், செயல்முறை ,ஜெபம் இவை அனைத்தையும் உட்கொண்ட ஒரு மாதிரி வகுப்பை ஒரு தலைவர் கட்டலாம்.

## பிரச்சனை

“தற்போது இருக்கிற ஒரு குழுவை அல்லது சபையோ வழிநடத்துவது எளிதான காரியம் இல்லை. புதிய ஒரு சபையை அல்லது ஒரு குழுவை துவங்குவது இயலாத காரியத்தை போல் தோன்றும். சபைகள், குறைந்த அளவு பணம், மக்கள் அல்லது நேரத்தை செலவிடுவதில் தவிக்கிறார்கள். இயேசு நமது தேவைகளை அறிந்தும் நம்மை புதிய சபைகளை உருவாக்க கட்டளை இடுகிறார்.

சபைகளில் நாம் சந்திக்கும் இன்னொரு பிரச்சனை என்னவென்றால், விசுவாசிகள் குழுக்களையோ அல்லது சபைகளை துவங்குவதில் அனுபவம் இல்லை. போதகர்கள், தலைவர்கள், தொழில் அதிபர்கள், மற்றும் சங்கத்தினருக்கு ஒரு ’உண்மையான சபையை’ உருவாக்குவது என்ற சிறிய படம் அவர்களது மனதில் உள்ளது. இதனால், அவர்கள்

துவங்கும் புதிய சபை அவர்களது தலை சபையை போல் இருக்கும், ஆகையால் அந்த முயற்ச்சியானது கட்டாயமாக தொல்வி அடயும் என்று நாம் சொல்லலாம்."

## திட்டம்

"நாம் 5000 திலிருந்து 40,000 வரை வளர்வது எவ்வாறு என்பதை பற்றி பேசினது ஞாபகம் இருக்கிறதா? அதை போன்ற வளர்ச்சி ஏற்பட வேண்டும் என்றால், ஒவ்வொரு விசுவாசியும் ஒரு புதிய குழுவை துவக்க வேண்டும். இந்த் பாடத்தில், நாம் குழுக்களை துவங்க இருக்கும் நான்கு இடங்களை பற்றி படிப்போம். அதன் பிறகு, அப்போஸ்தலர் பணியில் குழுக்களை துவங்கிய நான்கு விதமான மக்களை காண்போம்."

## திறனாய்வு

### நல்வரவு

யார் சபையை கட்டுவது?

அது ஏன் முக்கியத்துவம்வாய்ந்தது?

இயேசு கிறிஸ்து தன் சபையை எவ்வாறு கட்டினார்?

ஆண்டவரில் பெலன் கொள்ளுதல் ☝

சுவிசேஷத்தை பகிர்ந்து கொள்ளுதல் ☝

சீடர்களை உருவாக்கு ☝

குழுக்களையும் சபைகளையும் துவங்குதல் ☝

தலைவர்களை உருவாக்குதல் ☝

*1கொரி 11:1 நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல, நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்.*

## இயேசுவைப்போல் பயிற்சி அளி

இயேசு தலைவர்களுக்கு எவ்வாறு பயிற்சி அளித்தார் ?

முன்னேற்றம் 

பிரச்சனை

திட்டங்கள்

செயல்முறை

ஜெபம்

*லூக் 6:40 சீஷன் தன் குருவுக்கு மேற்பட்டவனல்ல, தேறினவன் எவனும் தன் குருவைப்போலிருப்பான்.*

## இயேசுவைப்போல் வழிநடத்து

### யார் சிறந்த தலைர்வர் என்று இயேசு சொன்னார் ?

### சிறந்த தலைவரின் ஏழு பண்புகள் யாவை?

8. மிக சிறந்த தலைவர்கள் மக்களை அன்பு செய்கின்றனர்.
9. மிக சிறந்த தலைவர்கள் தங்கள் ஊழியத்தை அறிந்திருக்கிறார்கள்.
10. மிக சிறந்த தலைவர்கள் தங்களை பின்பற்றுபவர்களுக்கு பணியாளராக இருப்பர்.
11. மிக சிறந்த தலைவர்கள் அன்போடு தவறுகளை எடுத்துக் காட்டுகின்றனர்.
12. மிக சிறந்த தலைவர்கள் தங்கள் குழுவிலுள்ள நிகழ்கால பிரச்சனைகளை அறிந்திருக்கிறார்கள்.
13. மிக சிறந்த தலைவர்கள் நல்ல உதாரணமாக இருப்பார்கள்.
14. மிக சிறந்த தலைவர்கள் தாங்கள் ஆசீர்வதிக்கப் பட்டவர்கள் என்று அறிந்திருக்கிறார்கள்.

*யோவான் 13:14,15- 14. ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள்.*

*15. நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன்.*

## பலப்படு

சிப்பாய்👋

நாடுபவர் 👋

மேய்ப்பன் 👋

விதைப்பவன் 👋

மகன்/மகள் 👋

புனிதர் 👋

பணியாளர் 👋

மேலாளர் 👋

எந்த மனோபாவத்தை ஆண்டவர் மிகவும் அன்பு செய்கிறார்?

எந்த மனோபாவம் சிறந்த தலைவரை உருவாக்கக்கூடும்?

> *ரோமர் 12:4-5- 4. ஏனெனில், நமக்கு ஒரே சரீரத்திலே அநேக அவயவங்களிருந்தும், எல்லா அவயவங்களுக்கும் ஒரே தொழில் இராததுபோல, 5. அநேகராகிய நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்க, ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறோம்.*

## சேர்ந்து உறுதியாயிறு

### உலகத்தில் எட்டு விதமான மக்கள் ஏன் உள்ளனர்?

### இயேசு எப்படிப்பட்டவர்?

சிப்பாய்👋

நாடுபவர் 👋

மேய்ப்பன் 👋

விதைப்பவன் 👋

மகன்/மகள்

புனிதர்

பணியாளர்

மேலாளர்

சச்சரவு உண்டாகும்போது நமக்கு உள்ள மூன்று விருப்பத் தேர்வுகள் எவை?

ஓடிப்போதல்

ஒருவரைஒருவர் எதிர்கொள்

ஆண்டவரின் ஆவியால் ஒன்றாக செயல்பட முயற்சிசெய்.

*-கலாத்தியர் 2:19-19. தேவனுக்கென்று பிழைக்கும்படி நான் நியாயப்பிரமாணத்தினாலே நியாயப்பிரமாணத்திற்கு மரித்தேனே.*

## சுவிசேஷத்தை பகிர்ந்துகொள்

எளிமையான சுவிசேஷத்தை நான் எவ்வாறு பகிர்ந்து கொள்வேன்?

தங்க பாசிமணி

நீல பாசிமணி

பச்சை பாசிமணி

கருப்பு பாசிமணி

வெள்ளை பாசிமணி

சிவப்பு பாசிமணி

### இயேசுவின் உதவி நமக்கு ஏன் தேவை?

தேவனிடத்தில் திரும்ப வரும் சாமர்த்தியம் ஒருவனிடத்தில் இல்லை.

தேவனிடத்தில் திரும்ப வரும் அளவிற்கு ஒருவரும் கொடுப்பதில்லை.

தேவனிடத்தில் திரும்ப வர ஒருவருக்கும் பெலன் இல்லை.

தேவனிடத்தில் திரும்ப வரும் அளவிற்கு ஒருவரும் நல்லவரில்லை.

*-யோவான் 14:6- அதற்கு இயேசு: நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்.*

## சீடர்களை உருவாக்கு

இயேசுவின் திட்டத்தில் முதல் படி எது?

இதயங்களை தயார் செய்தல் ☝

இரண்டு இரண்டு பேராக செல்லவும் ☝

இயேசு கிரியை செய்யும் இடத்திற்கு செல் ☝

அறுவடையிருந்து தலைவர்கள் எழும்ப ஜெபி ☝

தாழ்மையுடன் செல் ☝

பணத்தை அல்ல, தேவனையே சார்ந்திரு ☝

அவர் அழைக்கும் இடத்திற்கு நேராக செல்லவும்☝

*-லூக்கா 10:2- அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்; ஆகையால் அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள்.*

## குழுக்களை உருவாக்கு

இயேசுவின் திட்டத்தில் இரண்டாவது படி என்ன?

நண்பர்களை உருவாக்குதல் ☝

சமாதான பத்திரனை கண்டுபிடி

அவர்கள் கொடுப்பதை உண்டு அருந்துங்கள்

வீட்டுக்கு வீடு போகாதீர்கள்

இயேசுவின் திட்டத்தின் மூன்றாவது படி என்ன?

சுவிசேஷத்தை பகிருங்கள்

பிணியார்களை சொஸ்தமாக்கு

சுவிசேஷத்தை பகிர்ந்துகொள்

இயேசுவின் திட்டத்தில் நான்காவது படி என்ன?

முடிவுகளை மதிப்பிட்டு சரிசெய்

அவர்கள் அளிக்கும் பதிலை மதிப்பிடவும்

அவர்கள் பதில் அளிக்கவில்லை என்றால் விட்டு

*-லூக்கா 10:9-*

*9. அவ்விடத்திலுள்ள பிணியாளிகளைச் சொஸ்தமாக்கி: தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குச் சமீபமாய் வந்திருக்கிறது என்று அவர்களுக்குச் சொல்லுங்கள்.*

இயேசு

*-அப்போஸ்த்தலர் பணி 1:8-*

*8. பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்.*

## 1. எருசலேம்

“இயேசு தனது சீடர்களிடம் தங்கள் தங்கியிருக்கும் இடத்திலே குழுக்களை அமைக்க கட்டளை இட்டார். அவரது உதாரணத்தை பின்பற்று போது நாம் இருக்கும் இடங்களில் குழுக்களையும் சபைகளையும் உருவாக்குவோம்.“

- என் இயேசுவின் திட்டத்தில் மூன்றாவது பத்தியில் நீங்கள் வாழும் நகரத்தில் எந்த இடத்தில் குழுக்களை அமைக்கலாம் என்றுகுறிப்பிடுக. அந்த பணியை குறித்து ஒரு குறிப்பை வரைக.

## 2. யூதேயா

"இரண்டாவதாக தங்கள் வாழும் மண்டலங்களில் குழுக்களை அமைக்க இயேசு கட்டளை இட்டார். எருசலேம் நகர்புறமாகவும், யூதேயா இஸ்ரவேலின் கிராமப் பகுதியாகவும் இருக்கிறது. யூதேயாவில் வசிக்கும் மக்கள் அப்போஸ்தலர்கள் இனத்தை சார்ந்தவர்கள். இயேசுவின் கட்டளையை முன்னிட்டு நாம் வாழும் கிராமப்பகுதிகளில் புதிய குழுக்களையும், சபைகளையும், பல இனத்தை சார்ந்த மக்களின் மத்தியில் உருவாக்குவோம்."

- என் இயேசுவின் திட்டத்தில் மூன்றாவது பத்தியில் நீங்கள் வாழும் மண்டலத்தில் எந்த இடத்தில் குழுக்களை அல்லது சபைகளை அமைக்கலாம் என்று குறிப்பிடுக. அந்த பணியை குறித்து ஒரு குறிப்பை வரைக.

## 3. சமாரியா

"மூன்றாவதாக, இயேசு தனது சீடர்களிடம், பல நகர் பகுதிகளில் பல இனத்தை சார்ந்த மக்களின் மத்தியில் குழுக்களை உருவாக்க கட்டளை இட்டார். யூதர்கள், சமாரியா வாழ்ந்த மக்களை வெருத்து இருந்த போதிலும் அவர்கள் மத்தியிலும், புதிய குழுக்கள் மூலமாகவும் சபைகள் மூலமாகவும், எடுத்து செல்ல கட்டளை இட்டார். நாம் பல வித இன மக்கள் மத்தியிலும், பல பட்டணங்களிலும் புதிய குழுக்களையும் சபைகளையும் துவக்கும் போது, இயேசுவின் கட்டளைக்கு கீழ்படிகிறோம்."

- என் இயேசுவின் திட்டத்தில் மூன்றாவது பத்தியில் வேறு இடத்திலும் வேறு இனத்தார் மத்தியிலும் குழுக்களை அல்லது சபைகளை அமைப்பதற்கான இடத்தை குறிப்பிடுக. அந்த பணியை குறித்து ஒரு குறிப்பை வரைக.

4. பூமியின் கடைசிபரியந்தமும்

"இறுதியாக, இயேசு சீடர்களுடன், பூமியின் கடைசிபரியந்தமும், எல்லா இன மக்களின் மத்தியிலும் குழுக்களை ஏற்படுத்த கட்டளை இட்டார். இந்த கட்டளையை கைடைபிடிக்க வேண்டும் என்றால் நாம் புதிய மொழிகளையும் கலாசாரங்களையும் கற்றுக் கொள்ள வேண்டும். நாம்

நமது குழுவிலிருந்து ஊழியத்திற்காக மக்களை பிற நாடுகளுக்கு அனுப்பும் போது, இந்த கட்டளையை நாம் கடை பிடிக்கிறோம்.

- என் இயேசுவின் திட்டத்தில் மூன்றாவது பத்தியில் வேறு மண்டலத்தில் வேறு இனத்தார் மத்தியிலும் குழுக்களை அல்லது சபைகளை அமைப்பதற்காண இடத்தை குறிப்பிடுக. அந்த பணியை குறித்து ஒரு குறிப்பை வரைக.

## குழுக்களை அல்லது சபைகளை உருவாக்க நான்குவழிமுறைகள் யாவை?

1. பேதுரு

*-அப்போசுத்தளர்* 10:9-

*9. மறுநாளிலே அவர்கள் பிரயாணப்பட்டு, அந்தப் பட்டணத்துக்குச் சமீபித்து வருகையில், பேதுரு ஆறாம்மணி நேரத்திலே ஜெபம்பண்ணும்படி மேல்வீட்டில் ஏறினான்.*

“பேதுரு எருசலேமில் உள்ள சபைக்கு மெய்ப்பராக இருந்தார். கொர்னிலியஸ் அவரை ஜோப்பவிற்கு சுவிசேஷத்தை அறிவிக்கும் படி அழைத்தார். பேதுரு கொர்னிலியாவின் குடும்பத்தினருக்கு சுவிசேஷத்தை பகிர்ந்து கொண்ட பொழுது, அனைவரும் தேவ குடும்பத்தின் அங்கத்தினர்களாக மாறி ஒரு குழு உருவாக வழி வகுத்தது.

புது குழுக்களை அல்லது சபைகளை உருவாக்க மேய்ப்பர், ஒரு இடை கால பயணமாக வேறோரிடத்திற்கு சென்று வேறொரு குழுவை அமைக்கலாம். இப்படியாக சபையை உருவாக்க மூன்று வாரங்கள் எடுக்கும்.”

- என் இயேசுவின் திட்டத்தில் நான்காவது பத்தியில் புதிய குழுவை அல்லது சபையை உருவாக்க கூடிய ஒரு மெய்ப்பரின் பெயரை. அந்த பணியை குறித்து ஒரு குறிப்பை வரைக.

**2. பவுல்**

*-அப்போஸ்தலர் பணி* 13:2-

*2. அவர்கள் கர்த்தருக்கு ஆராதனைசெய்து, உபவாசித்துக் கொண்டிருக்கிறபோது: பர்னபாவையும் சவுலையும் நான் அழைத்த ஊழியத்துக்காக அவர்களைப் பிரித்துவிடுங்கள் என்று பரிசுத்தஆவியானவர் திருவுளம்பற்றினார்.*

“பவுலும், பர்னபாசும் அந்தியோக்கில் தலைவராக இருந்தார். அவர்கள் கர்த்தருக்கு ஆராதனை செய்து உபவாசம் செய்து கொண்டு இருந்த போது, தேவன் அவர்களை சுவிசேஷம் அறிவிக்க படாத இடங்களுக்கு அனுப்பினார். அதற்கு கீழ்படிந்து அவர்கள் ரோமாபுரி எங்கும் குழுக்களை ஏற்படுத்தினார்கள்.

குழுக்களையும் சபைகளையும் உருவாக்குவதற்கு இரண்டாவதாக தலைவர்களை மற்ற பட்டிணங்களுக்கும் நகரங்களுக்கும் சுவிசெஷத்தை அறிவிக்க அனுப்ப வேண்டும். இந்த சுவிசெஷ்கர் புதிய விசுவாசிகளை கூட்டி புதிய சபைகளை உருவாக்கலாம். இந்த பணியானது ஒன்றிலிருந்து மூன்று மாதங்கள் எடுக்கலாம்.”

- என் இயேசுவின் திட்டத்தில் நான்காவது பத்தியில் புதிய குழுவை அல்லது சபையை உருவாக்க கூடிய சபை தலைவர்கள் பெயர்களை குறிப்பிடவும். அந்த பணியை குறித்து ஒரு குறிப்பு வரைக.

### 3. பிரிஸ்கில்லா மற்றும் அக்கில்லா

*-1 கொரிந்தியர் 16:19-*

*19. ஆசியா நாட்டிலுள்ள சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள். ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் தங்கள் வீட்டிலே கூடுகிற சபையோடுங்கூடக் கர்த்தருக்குள் உங்களை மிகவும் வாழ்த்துகிறார்கள்.*

“பிரிஸ்கில்லா மற்றும் அக்கில்லா வர்த்தகர்களாக சபையில் இருந்தார்கள். அவர்கள் வாழ்ந்த , பணி செய்த இடங்களில் எல்லாம் அவர்கள் ஒரு குழுவையோ அல்லது சபையையோ துவக்கினார்கள். அவர்களது தொழில் வேறொரு இடத்திற்கு நகர்ந்த போது, அவர்கள் அந்த புதிய இடத்தில் ஒரு புதிய குழுவை அல்லது ஒரு சபையை துவக்கினார்கள்.

மூன்றாவது வழி என்னவென்றால், கிறிஸ்தவ வர்த்தகர்கள் தங்களது வாடிக்கையாளர்களோடு ஒரு புதிய குழு அல்லது ஒரு புதிய சபையை துவக்குவது தான். ஒரு கிறிஸ்தவ வர்த்தகர், ஒரு சபை இல்லாத இடத்திற்கு சென்றதால் அங்கே அவர் ஒரு சபையை அல்லது குழுவை துவக்க வேண்டும். இதை போன்ற ஊழியத்தை செய்ய ஒன்றிலிருந்து மூன்று வருடங்கள் தேவை படலாம்.”

- என் இயேசுவின் திட்டத்தில் நான்காவது பத்தியில் புதிய குழுவை அல்லது சபையை உருவாக்க கூடிய வர்த்தகர்களின் பெயர்களை குறிப்பிடவும். அந்த பணியை குறித்து ஒரு குறிப்பு வரைக.

### 4. மிகுந்த துன்பம்

*-அப்போஸ்தலர் பணி 8:1-*

*1. அவனைக் கொலைசெய்கிறதற்குச் சவுலும் சம்மதித்திருந்தான். அக்காலத்திலே எருசலேமிலுள்ள சபைக்கு மிகுந்த துன்பம் உண்டாயிற்று. அப்போஸ்தலர்தவிர, மற்ற யாவரும் யூதேயா சமாரியா தேசங்களில் சிதறப்பட்டுப்போனார்கள்.*

"அப்போஸ்தலர் பணியில் இறுதியாக சபைகளை துவக்கிய குழுவானது துன்பப்படுத்தத்ப்பட்ட விசுவாசிகள். சவுல் கிறிஸ்தவ சபையை துன்புறுத்தும்போது பல விசுவாசிகள் சிதறப்பட்டுப் போனார்கள். அவர்கள் யூதேயா சமாரியா தேசங்களில் குழுக்களையும் சபைகளையும் துவக்கினார்கள். இது உண்மை என்று நமக்கு தெரியும். ஏன் என்றால் அப்போஸ்தலர்கள் இச்சபைகளை சென்று பார்வை இட்டார்கள்.

கடைசியாக துன்புறுத்தப்பட்ட விசுவாசிகளை கொண்டு புதிய பட்டிணங்களில் புதிய குழுக்களை, சபைகளை ஏற்படுத்துதல் வேண்டும். சபைகள் குழுக்கள் இல்லை என்றால் புதிய விசுவாசிகள் ஒன்றை துவங்க வேண்டும். புதிய குழுக்களை துவங்குவதற்கு எந்த பட்டமும் தேவை இல்லை. இயேசுவின் மீது அன்பும், கட்டளைகளுக்கு கீழ்படிய ஒரு இதயம் மட்டுமே போதுமானது."

- என் இயேசுவின் திட்டத்தில் நான்காவது பத்தியில் புதிய குழுவை அல்லது சபையை உருவாக்க கூடிய துரத்தப்பட்ட நபர்களின் பெயர்களை குறிப்பிடவும். அந்த பணியை குறித்து ஒரு குறிப்பு வரைக.

## மனப்பாட வேத வசனம்

*-அப்போஸ்த்தலர் பணி 1:8-*

*8. பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்.*

- தலைவர்கள் நின்று கொண்டு வேதத்திலுள்ள மனப்பாட பகுதியை 6 முறை வேதத்தை படித்தும், 4 முறை பாராமலும் வசனத்தை அறிக்கை இடவேண்டும் (மொத்தம் 10 முறை). வசனம் சொல்வதர்க்கு முன், வசனப்பகுதியை சொலல் வேண்டும். முடித்தபின் அமரவும்.
- இந்த வழிமுறையை பின்பற்றும் பொழுது, எந்த குழு தனது "செயல்பட்டு" பாடத்தை முடித்தார் என்பதை புரிந்து கொள்ளலாம்.

## செயல்முறை

- தலைவர்களை நான்கு நபர் குழுக்களாக பிரித்து தலைமைத்துவ பாடத்தையும் செயல்முறையை ஒன்றாக உபயோகிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளவும்.
- 7-8 நிமிடங்களுக்கு அவர்கள் கற்றுக் கொள்வதை படிப்படியாக பகிர்ந்து கொள்ளவும்.

### முன்னேற்றம்

"குழுக்களையும் சபைகளையும் உருவாக்குவதில், நான்கு வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு விதமான நபர்களோடு அடைந்த முன்னேற்றத்தை பகிர்ந்து கொள்ளவும்."

### பிரச்சனைகள்

"குழுக்களையும் சபைகளையும் உருவாக்குவதில், நான்கு வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு விதமான நபர்களோடு ஏற்பட்ட பிரச்சனைகளை பகிர்ந்து கொள்ளவும்."

### திட்டங்கள்

""அடுத்த 30 நாட்களுக்குள் ஒரு குழுவை அல்லது சபையை உருவாக்க உனது குழுவில் நீ கையாள இருக்கும் இரண்டு யுக்திகளை பகிர்ந்து கொள்ளவும் "

- எல்லோரும் தங்கள் நண்பர்களுக்காக ஜெபிக்கும்படியாக திட்டத்தை குறித்துக் கொள்ள வேண்டும்.

### செயல்முறை

“அடுத்த 30 நாட்களுக்குள் ஒரு சிறந்த தலைவராக உருவாக தனிப்பட்ட முறையில் கையாள இருக்கும் ஒரு யுக்தியை பகிர்ந்து கொள்”

- எல்லோரும் தங்கள் நண்பர்களுக்காக ஜெபிக்கும்படியாக திட்டத்தை குறித்துக் கொள்ள வேண்டும்.
- ஒவ்வொருவரும் தங்கள் செயல்முறையை விளக்கியபின் குழுவில் உள்ள அனைவரும் எழுந்து நின்று, மனப்பாட வசனத்தை அறிக்கை இடுவார்கள்.

### ஜெபம்

“ஒருவருக்கொருவர் அடுத்த 30 நாட்களில் சிறந்த தலைவராக மாற செயல்படுத்த இருக்கும் திட்டங்களையும் செயல்பாட்டையும் குறித்து ஜெபிக்கவும்.”

## இறுதி

### ஒரு புதிய சபையை துவங்க எவ்வளவு செலவாகும்?

“ஒரு புதிய சபையை துவங்க தேவைகள் என்ன? ஒரு பட்டியலை செய்வோம்.”

- மாணவர்கள் பதில் சொல்ல அதை வெள்ளை பலகையில் எழுதி கொள்ளவும். அதை விவாதிக்க அனுமதிக்கவும். உதாரணமாக ஒரு “கட்டிடம்” தேவை என்று ஒருவர் குறிப்பிட்டால், மற்ற மாணவர்களிடம் ஒரு சபை துவங்க கட்டிடம் தேவை தானா என்ற வினாவை எழுப்பவும்.

“இப்பொழுது தயாராக உள்ள பட்டியலில் ஒவ்வொரு உருப்படிக்கும் விலை மதிப்பிடுவோம்.”

- மாணவர்களை ஒவ்வொன்றின் விலை மதிப்பை குறிப்பிட கேட்கவும். மாணவர்களை விவாதிக்க அனுமதித்து ஒரு உருப்படிக்கு

ஒரு விலையை குறிப்பிட அனுமதிக்கவும். கடைசியாக அந்த குழுவானது ஒரு சபையை துவங்க செலவே இல்லை அல்லது ஒரு வேத புத்தகத்தை வாங்க செலவிடும் அளவே போதுமானது என்ற முடிவிற்கு வந்து விடுவார்கள்.

"இந்த பயிற்சியின் நோக்கமானது மக்கள் அநேகமாக ஒரு சபையை துவங்க அதிக செலவு ஏற்படலாம் என்ற தவறான எண்ணத்தை கைவிட்டு விட்டு அனேக சபைகள் வீடுகளிலே துவங்கப்பட்டு மிக குறைந்த செலவில் நடத்தப்பட்டு வருகிறது என்ற எண்ணத்தை ஏற்படுத்தவே. தற்போதைய பெறிய சபையில் ஒரு சிறிய வீட்டில் துவங்கப் பட்டது தான். விசுவாசம், நம்பிக்கை, அன்பு, என்ற மூன்று மட்டுமே தேவையானது ஒரு பெரிய வங்கி தொகை அல்ல."

## என் இயேசுவின் திட்டம்

- தங்களது குறிப்பேட்டின் கிடைசி பக்கத்தில் "என் இயேசுவின் திட்டம்" பக்கத்தை திருப்பும்படி சொல்லவும்.

"இந்த ஆய்வரங்கின் இறுதியில் எல்லா தலைவர்களும் அவர்களுடைய இயேசு திட்டத்தை பகிர்ந்து கொள்ள வேண்டும். தங்களது இயேசு திட்டத்தின் குறிப்புகளை முடித்து அதை எவ்வாறு குழுவிடம் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பதை சில நிமிடங்கள் தியானிக்கவும். அதன் பின்னே அடுத்த பகுதியை ஆண்டவர் ஆசீர்வதிக்கும்படியாக ஜெபித்தல் வேண்டும்."

# இன்னொரு பொதுவான கேள்வி

## கல்வி அறிவு இல்லாத மக்களுடன் பயிற்சி வகுப்புகளில் எவ்வாறு செயல்படுவது?

*இயேசுவை பின்பற்றும் பயிற்சி,* கல்வி அறிவு உடையவர்களுக்கும் இல்லாதவர்களுக்கும் கற்றுத்தரும் முறைகளை பயன்படுத்துகிறது. எங்களது அனுபவத்தில் கல்வி அறிவு உடையவர்களும் இல்லாதவர்களும் இந்த பயிற்சியின் மூலமாக ஒரே அனுபவங்களை பெற்றுக்கொள்ளுகிறார்கள். கைகளின் அசைவைக்கொண்டு நாங்கள்

கல்வி அறிவு இல்லாதவர்களுக்கு நாங்கள் பயிற்சி அளிப்பதுண்டு. சில ஆசியா கலாச்சாரங்களில் பெண்களுக்கு படிப்பறிவு மிகக்குறைவாக உள்ளது. அந்த குழுவிற்கு நாங்கள் பயிற்சி அளித்த பின் கண்ணீருடன் எங்களுக்கு "நன்றி" கூறி உங்களது "கை அசைவு எங்களுக்கு உதவியதாகவும் நாங்கள் இயேசுவை பின்பற்ற முடியும் என்று கூறினார்கள்."

கல்வி அறிவு இல்லாத குழுவில் கூட ஒரு நபர் அந்த குழுவினருக்காக படித்துக் காட்ட முடியும். சாதாரணமாக வேத வசனங்களை நாங்கள் அந்த குழுவிற்கு உரத்த குரலில் வாசிக்க கேட்ப்போம். சில சமயங்களில் குழுவில் உள்ள அனைவரும் புரிந்து கொள்ளும் படியாக இரண்டு அல்லது மூன்று தடவைகளில் சொல்லக் கேட்போம். படிக்காத மக்களின் மத்தியில் செய்திகளை ஒளி, ஒலி காட்சிகளில் முன்னே தயார் செய்து ஒவ்வொரு பகுதியையும் எடுத்துரைப்போம்.

தொலைகாட்சியும், வானொலியும் மிக தூரமான கிராம பகுதியில் உள்ள கல்வி அறிவு இல்லாத மக்கள் மத்தியில், கூட அதி தாக்கத்தை ஏற்படுத்துகிறது. பலமுறை கல்வி அறிவு இல்லாத மக்களுக்கு பல முறை பாடங்களை எடுத்துரைக்க வேண்டும் என்ற தவறான எண்ணத்தை விட்டு, அவர்களுக்கு பாடம் இரண்டொரு முறை ஒலி ஒளி காட்சிகளின் மூலம் பாடத்தை எடுத்துரைப்பதால் எளிதாக புரிந்து விடுகிறது. பல இடங்களில் டி.வீ.டீ., வீ.சீ.டீ, மற்றும் மின்கலத்தில் இயங்கக்கூடிய எம்.பீ.3 கருவிகள் எல்லா இடங்களிலும் உபயோகிக்கலாம்.

ஒலி, ஒளி பதிவுகளை விட்டு விட்டு செல்வதால் அனேக மக்கள் கற்றுக்கொள்ள ஏதுவாக இருக்கும். நீங்கள ஒரு குறும் படத்தை தயாரித்தால் அதனுடைய ஒரு பிரதியை எனக்கு கீழ்கண்ட மின் அஞ்சலுக்கு அனுப்பவும். lan-fam@FollowJesusTraining.com.

# 10

# இயேசுவை பின்பற்று

*தீவிரமான தலைவர்களை உருவாக்கும் பயிற்சியில்* ஒவ்வொருவரும், சபை கட்டுவதின் முக்கியத்துவத்தையும், யார் சபையை கட்டுவார் என்றும் அறிந்து கொண்டார்கள். அவர்கள் இயேசுவின் ஐந்து வழிமுறைகளையும், உலகத்தை கைப்பற்றும் விதத்தையும், சிறப்பாக கற்றுக் கொண்டும் ஒருவருக்கொருவர் பயிற்சி அளித்தனர். அவர்கள் சிறந்த தலைவரின் ஏழு குணாதிசயங்களை புரிந்து கொண்டு, ஒரு பயிற்சி மரம் ஒன்றை எதிர்காலத்திற்காக உருவாக்கி, வெவ்வேறு மனோபாவம் உடையவர்களோடு எவ்வாறு பணி புரிவது என்பதையும் கற்றுக்கொண்டார்கள். லூக்கா 10தில் கூறப்பட்ட இயேசுவின் திட்டத்தின் படி ஒவ்வொரு தலைவரும் ஒரு திட்டத்தை உருவாக்கி வகுத்துள்ளார். "இயேசுவை பின்பற்று" என்ற இந்த பாடமானது தலைமைத்துவத்தின் முக்கிய ஒரு பகுதியை எடுத்துரைக்கிறது: ஊக்குவித்தல்.

இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பாக பல காரணத்திற்காக இயேசுவை மக்கள் பினபற்றினார். யாக்கோபு, யோவான் என்பவர்களைப்போல சிலர் இயேசுவை பின்பற்றினால் தங்களுக்கு புகழ் வரும் என்று நம்பினார். பரிசேயர்கள் தங்களை மேன்மையாக காட்ட குறை சொல்வதற்காக இயேசுவை பின்பற்றினர். யூதாஸ் இயேசுவை பணத்திற்காக பின்பற்றினான். ஐந்தாயிரம் நபர்களை கொண்ட ஒரு பெரும் கூட்டமானது இயேசு அவர்களுக்கு தேவையான உணவளித்ததால் அவரை பின்பற்றினார். இனி ஒரு கூட்டம் சுகம் பெறுவதற்காக அவரை பின்பற்றி, அதில் ஒருவர் மட்டும் நன்றியை தெரிவித்தார். அனேக பேர், அவரிடம் இருந்து எதையாவது பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற தன்னால நோக்கத்தோடு அவரை பின்பற்றினர். இந்நாள் அந்த நாளிலிருந்து மாறுபட்டதல்ல. தலைவர்களாகிய நாம் அவரை ஏன் பின்பற்றுகிறோம் என்று ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

அன்புள்ள இதயத்தோடு அவரை பின்பற்றினவர்களை, இயேசு புகழ்ந்தார். விலை உயர்ந்த பரிமள தைலத்தினால் தன் பாதங்கள் கழுவின பெண்மணியின் பெயரை இந்த சுவிசேஷம் அறிவிக்கபடும் இடங்களில் எல்லாம், நினைவு கூறப்படும் என்று உரைத்தார். ஒரு ஏழை விதவையின் குறைந்த காணிக்கையானது இயேசுவின் இதயத்தை மற்ற பொன் காணிக்கையை விட, களிகூர செய்தது. ஒரு இளைஞன் தனது சொத்து சுகத்தை விட தேவனை நேசிக்க மறுதலித்ததால் மனம் வருந்தினார். மேலும், இயேசு, தன்னை மறுதலித்த பேதுருவிடம், "என்னை நேசிக்கிறாயா?" என்று வினவினார். ஆவிக்குரிய தலைவர்கள் தேவனையும் மக்களையும் நேசிக்கிறார்கள்.

ஒவ்வொரு தலைவரும் "இயேசுவின் திட்டத்தை" பகிர்ந்து கொண்டு அந்த வகுப்பு முடிவடைகிறது. தலைவர்கள் ஒருவர் ஒருவருக்காக ஜெபித்து, ஒன்றாக பணி புரிய அற்பணித்து தேவ அன்பிற்க்காகவும், தேவ மகிமைக்காகவும் புதிய தலைவர்களை உருவாக்கும் பணியில் தங்களை ஈடுபடுத்த முடிவெடுக்கின்றனர்.

## புகழ்

- தேவனை புகழ்ந்து இரண்டு பாடல்களை பாடி, ஓரு தலைவரை இந்த அமர்வுக்காக ஜெபிக்க அழைக்கவும்.

## முன்னேற்றம்

## திறனாய்வு

## **நல்வரவு**

யார் சபையை கட்டுவது?

அது ஏன் முக்கியத்துவம்வாய்ந்தது?

இயேசு கிறிஸ்து தன் சபையை எவ்வாறு கட்டினார்?

ஆண்டவரில் பெலன் கொள்ளுதல் ☝

சுவிசேஷத்தை பகிர்ந்து கொள்ளுதல் ☝

சீடர்களை உருவாக்கு ✋

குழுக்களையும் சபைகளையும் துவங்குதல் ✋

தலைவர்களை உருவாக்குதல் ✋

*1கொரி 11:1 நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல, நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்.*

## இயேசுவைப்போல் பயிற்சி அளி

### இயேசு தலைவர்களுக்கு எவ்வாறு பயிற்சி அளித்தார் ?

முன்னேற்றம் ✋

பிரச்சனை✋

திட்டங்கள்✋

செயல்முறை✋

ஜெபம்✋

*லூக் 6:40 சீஷன் தன் குருவுக்கு மேற்பட்டவனல்ல, தேறினவன் எவனும் தன் குருவைப்போலிருப்பான்.*

## இயேசுவைப்போல் வழிநடத்து

### யார் சிறந்த தலைவர் என்று இயேசு சொன்னார் ?

### சிறந்த தலைவரின் ஏழு பண்புகள் யாவை?

1. மிக சிறந்த தலைவர்கள் மக்களை அன்பு செய்கின்றனர்.
2. மிக சிறந்த தலைவர்கள் தங்கள் ஊழியத்தை அறிந்திருக்கிறார்கள்.
3. மிக சிறந்த தலைவர்கள் தங்களை பின்பற்றுபவர்களுக்கு பணியாளராக இருப்பர்.
4. மிக சிறந்த தலைவர்கள் அன்போடு தவறுகளை எடுத்துக் காட்டுகின்றனர்.

5. மிக சிறந்த தலைவர்கள் தங்கள் குழுவிலுள்ள நிகழ்கால பிரச்சனைகளை அறிந்திருக்கிறார்கள்.
6. மிக சிறந்த தலைவர்கள் நல்ல உதாரணமாக இருப்பார்கள்.
7. மிக சிறந்த தலைவர்கள் தாங்கள் ஆசீர்வதிக்கப் பட்டவர்கள் என்று அறிந்திருக்கிறார்கள்.

*யோவான் 13:14,15- 14. ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள்.*

*15. நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன்.*

## பலப்படு

சிப்பாய் ✋

நாடுபவர் ✋

மேய்ப்பன் ✋

விதைப்பவன் ✋

மகன்/மகள் ✋

புனிதர் ✋

பணியாளர் ✋

மேலாளர் ✋

எந்த மனோபாவத்தை ஆண்டவர் மிகவும் அன்பு செய்கிறார்?

எந்த மனோபாவம் சிறந்த தலைவரை உருவாக்கக்கூடும்?

*ரோமர் 12:4-5- 4. ஏனெனில், நமக்கு ஒரே சரீரத்திலே அநேக அவயவங்களிருந்தும், எல்லா அவயவங்களுக்கும் ஒரே தொழில் இராததுபோல, 5. அநேகராகிய நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்க, ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறோம்.*

## சேர்ந்து உறுதியாயிறு

### உலகத்தில் எட்டு விதமான மக்கள் ஏன் உள்ளனர்?

### இயேசு எப்படிப்பட்டவர்?

சிப்பாய் ✋

நாடுபவர் ✋

மேய்ப்பன் ✋

விதைப்பவன் ✋

மகன்/மகள் ✋

புனிதர் ✋

பணியாளர் ✋

மேலாளர் ✋

சச்சரவு உண்டாகும்போது நமக்கு உள்ள மூன்று விருப்பத் தேர்வுகள் எவை?

ஓடிப்போதல் ✋

ஒருவரைஒருவர் எதிர்கொள் ✋

ஆண்டவரின் ஆவியால் ஒன்றாக செயல்பட முயற்சிசெய். ✋

*-கலாத்தியர் 2:19-19. தேவனுக்கென்று பிழைக்கும்படி நான் நியாயப்பிரமாணத்தினாலே நியாயப்பிரமாணத்திற்கு மரித்தேனே.*

## சுவிசேஷத்தை பகிர்ந்துகொள்

எளிமையான சுவிசேஷத்தை நான் எவ்வாறு பகிர்ந்து கொள்வேன்?

தங்க பாசிமணி

நீல பாசிமணி

பச்சை பாசிமணி

கருப்பு பாசிமணி

வெள்ளை பாசிமணி

சிவப்பு பாசிமணி

## இயேசுவின் உதவி நமக்கு ஏன் தேவை?

தேவனிடத்தில் திரும்ப வரும் சாமர்த்தியம் ஒருவனிடத்தில் இல்லை.

தேவனிடத்தில் திரும்ப வரும் அளவிற்கு ஒருவரும் கொடுப்பதில்லை.

தேவனிடத்தில் திரும்ப வர ஒருவருக்கும் பெலன் இல்லை.

தேவனிடத்தில் திரும்ப வரும் அளவிற்கு ஒருவரும் நல்லவரில்லை.

*-யோவான் 14:6- அதற்கு இயேசு: நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்.*

## சீடர்களை உருவாக்கு

இயேசுவின் திட்டத்தில் முதல் படி எது?

இதயங்களை தயார் செய்தல் ☟

இரண்டு இரண்டு பேராக செல்லவும் ☟

இயேசு கிரியை செய்யும் இடத்திற்கு செல் ☟

அறுவடையிருந்து தலைவர்கள் எழும்ப ஜெபி ☟

தாழ்மையுடன் செல் ☟

பணத்தை அல்ல, தேவனையே சார்ந்திரு ☟

அவர் அழைக்கும் இடத்திற்கு நேராக செல்லவும்☟

*-லூக்கா 10:2- அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்; ஆகையால் அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள்.*

## குழுக்களை உருவாக்கு

இயேசுவின் திட்டத்தில் இரண்டாவது படி என்ன?

நண்பர்களை உருவாக்குதல் ☝

சமாதான பத்திரனை கண்டுபிடி

அவர்கள் கொடுப்பதை உண்டு அருந்துங்கள்

வீட்டுக்கு வீடு போகாதீர்கள்

இயேசுவின் திட்டத்தின் மூன்றாவது படி என்ன?

சுவிசேஷத்தை பகிருங்கள்

பிணியார்களை சொஸ்தமாக்கு

சுவிசேஷத்தை பகிர்ந்துகொள்

இயேசுவின் திட்டத்தில் நான்காவது படி என்ன?

முடிவுகளை மதிப்பிட்டு சரிசெய்

அவர்கள் அளிக்கும் பதிலை மதிப்பிடவும்

அவர்கள் பதில் அளிக்கவில்லை என்றால் விட்டு

*-லூக்கா 10:9-*

*9. அவ்விடத்திலுள்ள பிணியாளிகளைச் சொஸ்தமாக்கி: தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குச் சமீபமாய் வந்திருக்கிறது என்று அவர்களுக்குச் சொல்லுங்கள்.*

இயேசு

*-அப்போஸ்தலர் பணி 1:8-*

*8. பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்.*

## திட்டம்

## நீ இயேசுவை ஏன் பின்பற்ற வேண்டும்?

“இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பாக பல காரணத்திற்காக இயேசுவை மக்கள் பினபற்றினர்.
யாக்கோபு, யோவான் என்பவர்களைப்போல சிலர் இயேசுவை பின்பற்றினால் தங்களுக்கு புகழ் வரும் என்று நம்பினார்.”

*-மார்க்கு 10:35-37-*

*35. அப்பொழுது செபெதேயுவின் குமாரராகிய யாக்கோபும் யோவானும் அவரிடத்தில் வந்து: போதகரே, நாங்கள் கேட்டுக்கொள்ளப்போகிறதை நீர் எங்களுக்குச் செய்யவேண்டுமென்று விரும்புகிறோம் என்றார்கள்.*

*36. அவர் அவர்களை நோக்கி: நான் உங்களுக்கு என்ன செய்யவேண்டுமென்று விரும்புகிறீர்கள் என்று கேட்டார்.*

*37. அதற்கு அவர்கள்: உமது மகிமையிலே, எங்களில் ஒருவன் உமது வலது பாரிசத்திலும், ஒருவன் உமது இடதுபாரிசத்திலும் உட்கார்ந்திருக்கும்படி எங்களுக்கு அருள்செய்யவேண்டும் என்றார்கள்.*

“பரிசேயர்கள் தங்களை மேன்மையாக காட்ட குறை சொல்வதற்காக இயேசுவை பின்பற்றினர்.”

*-லூக்கா 11:53-54-*

*53. இவைகளை அவர்களுக்கு அவர் சொல்லுகையில், வேதபாரகரும் பரிசேயரும் அவர்மேல் குற்றஞ்சாட்டும் பொருட்டு, அவர் வாய்மொழியில் ஏதாகிலும் பிழை கண்டுபிடிக்கவேண்டும் என்று உபாயம்பண்ணி அவரை மிகவும் நெருக்கவும்,*

*54. அநேக காரியங்களைக்குறித்துப் பேசும்படிஅவரை ஏவவும் தொடங்கினார்கள்.*

“யூதாஸ் இயேசுவை பணத்திற்காக பின்பற்றினான்.”

*-யோவான் 12:4-6-*

*4. அப்பொழுது அவருடைய சீஷரில் ஒருவனும் அவரைக் காட்டிக்கொடுக்கப் போகிறவனுமாகிய சீமோனுடைய குமாரனான யூதாஸ்காரியோத்து:*

*5. இந்தத் தைலத்தை முந்நூறு பணத்துக்கு விற்று, தரித்திரருக்குக் கொடாமல் போனதென்ன என்றான்.*

*6. அவன் தரித்திரரைக்குறித்துக் கவலைப்பட்டு இப்படிச் சொல்லாமல், அவன் திருடனானபடியினாலும், பணப்பையை வைத்துக்கொண்டு அதிலே போடப்பட்டதைச் சுமக்கிறவனானபடியினாலும் இப்படிச் சொன்னான்.*

“ஐந்தாயிரம் நபர்களை கொண்ட ஒரு பெரும் கூட்டமானது இயேசு அவர்களுக்கு தேவையான உணவளித்ததால் அவரை பின்பற்றினர்.”

*-யோவான் 6:11-15-*

*11. இயேசு அந்த அப்பங்களை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, சீஷர்களிடத்தில் கொடுத்தார்; சீஷர்கள் பந்தியிருந்தவர்களுக்குக் கொடுத்தார்கள்; அப்படியே மீன்களையும் அவர் எடுத்து அவர்களுக்கு வேண்டியமட்டும் கொடுத்தார்.*

*12. அவர்கள் திருப்தியடைந்தபின்பு, அவர் தம்முடைய சீஷர்களை நோக்கி: ஒன்றும் சேதமாய்ப் போகாதபடிக்கு மீதியான துணிக்கைகளைச் சேர்த்துவையுங்கள் என்றார்.*

*13. அந்தப்படியே அவர்கள் சேர்த்து, வாற்கோதுமை அப்பங்கள் ஐந்தில் அவர்கள் சாப்பிட்டு மீதியான துணிக்கைகளினாலே பன்னிரண்டு கூடைகளை நிரப்பினார்கள்.*

*14. இயேசு செய்த அற்புதத்தை அந்த மனுஷர் கண்டு: மெய்யாகவே இவர் உலகத்தில் வருகிறவரான தீர்க்கதரிசி என்றார்கள்.*

*15. ஆதலால் அவர்கள் வந்து, தம்மை ராஜாவாக்கும்படிப் பிடித்துக்கொண்டு போக மனதாயிருக்கிறார்களென்று இயேசு அறிந்து, மறுபடியும் விலகி, தனியே மலையின்மேல் ஏறினார்.*

“குஷ்டரோகிகள் கூட்டம் சுகம் பெறுவதற்காக இயேசுவை பின்பற்றினர்”

*-லூக்கா 17:12-14-*

*12. அவர் ஒரு கிராமத்தில் பிரவேசித்தபோது, குஷ்டரோகமுள்ள மனுஷர் பத்துப்பேர் அவருக்கு எதிராக வந்து, தூரத்திலே நின்று:*

*13. இயேசு ஐயரே, எங்களுக்கு இரங்கும் என்று சத்தமிட்டார்கள்.*

*14. அவர்களை அவர் பார்த்து: நீங்கள் போய், ஆசாரியர்களுக்கு உங்களைக் காண்பியுங்கள் என்றார். அந்தப்படி அவர்கள் போகையில் சுத்தமானார்கள்.*

பலர் இயேசுவை சுயநலத்திற்காக பின்பற்றுகிறார்கள். அவர் அவர்களுக்கு என்ன கொடுக்க முடியும் என்பதின் மேல் கவனம் செலுத்தினார்கள். இந்நாள் அந்த நாளிலிருந்து மாறுபட்டதல்ல.

தலைவர்களாகிய நாம் நம்மை ஆராய்ந்து ஒரு கேள்வியை கேட்க வேண்டும், இயேசுவை ஏன் பின்பற்றுகிறேன்?

நீ பிரபலம் ஆவதற்கு இயேசுவை பின்பற்றுகிறாயா?

"நீ உன்னை சாமர்த்தியமானவன் என்று காட்ட இயேசுவை பின்பற்றுகிறாயா?

பணத்திற்காக நீ இயேசுவை பின்பற்றுகிறாயா?

நீ உன் குடும்பத்திற்கு உணவளிக்க இயேசுவை பின்பற்றுகிறாயா?

நீ சுகம் பெறுவாய் என்ற எண்ணத்தில் இயேசுவை பின்பற்றுகிறாயா?

மக்கள் பல விதமான காரணங்களுக்காக இயேசுவை பின்பற்றுகிறார்கள், இயேசுவோ அவரை அன்பான இதயத்தோடு பின்பற்றுபவர்களை ஆசீர்வதிக்கிறார்.

ஒதுக்கப்பட்ட பெண் விலை உயர்ந்த பரிமள தைலத்தை இயேசுவின் மீது ஊற்றியதை நினைவு கொள்கிறாயா?"

*-மத்தேயு 26:13-*

*13. இந்தச் சுவிசேஷம் உலகத்தில் எங்கெங்கே பிரசங்கிக்கப்படுமோ அங்கங்கே இவளை நினைப்பதற்காக இவள் செய்ததும் சொல்லப்படும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.*

"ஒரு ஏழை விதவையின் குறைந்த காணிக்கையானது இயேசுவின் இதயத்தை மற்ற பொன் காணிக்கையை விட, களிகூர செய்தது நினவிருகிறதா?"

*-லூக்கா 21:3-*

*3. இந்த ஏழை விதவை மற்றெல்லாரைப்பார்க்கிலும் அதிகமாகப் போட்டாள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.*

"இயேசு, தன்னை மறுதலித்த பேதுருவிடம், "என்னை நேசிக்கிறாயா?" என்று வினவினது நினைவிருக்கிறதா? "

*-யோவான் 21:17-*

*17. மூன்றாந்தரம் அவர் அவனை நோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ என்னை நேசிக்கிறாயா என்று அவர் மூன்றாந்தரம் தன்னைக் கேட்டபடியினாலே, பேதுரு துக்கப்பட்டு: ஆண்டவரே, நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர், நான் உம்மை நேசிக்கிறேன் என்பதையும் நீர் அறிவீர் என்றான். இயேசு: என் ஆடுகளை மேய்ப்பாயாக என்றார்.*

"இயேசு பேதுருவிடம், அவர் இதயத்தின் அன்பு உண்மையானதா என்று அறிவதற்கு மிக ஆர்வமுடயவராக இருந்தார்? நாம் அவரை நேசிப்பதால் பின்பற்றுகிறோமா?"

அவர் நம்மை முதலில் நேசித்ததால் நாம் இயேசுவை முழு இதயத்துடன் பின்பற்றுகிறோம். நாம் இயேசுவை அன்பு செய்து ஆண்டவருக்குள் வளருகிறோம். நாம் இயேசுவை அன்பு செய்து சுவிசேஷத்தை பகிர்ந்து கொள்கிறோம். நாம் இயேசுவை அன்பு செய்வதால் சீடர்களை உருவாக்குகிறோம். நாம் இயேசுவை அன்பு செய்வதால் குழுக்களையும் சபைகளையும் துவங்குகிறோம். நாம் இயேசுவை அன்பு செய்வதால் நாம் ஆவிக்குரிய தலைவர்களுக்கு பயிற்சி அளிக்கிறோம். இந்த பூலோகம் அழிந்து போகும் போது விசுவாசம், நம்பிக்கை, அன்பு மட்டுமே நிலைத்திருக்கும். இந்த மூன்றிலும் அன்பே சிறந்தது."

## இயேசுவின் திட்டத்தை பகிர்தல்

- எட்டு நபர் குழுக்களாக தலைவர்களை பிரிக்கவும். கீழ்க்கண்ட காரியங்களை தலைவர்களுக்கு விளக்குக.
- வட்டமாக அமர்ந்து "இயேசுவின் திட்டத்தை" பகிர்ந்து கொள்கிறார்கள். பகிர்தலுக்கு பின், மற்ற தலைவர்கள், இயேசுவின் திட்டத்தின் மீது கரங்களை வைத்து தேவ ஆசீர்வாதத்திற்க்காக ஜெபிப்பார்கள். உரத்த குரலில் தலைவகள் இணைந்து ஜெபிப்பார்கள்.
- ஒருவர் ஜெபத்துடன் பரிசுத்த ஆவியின் நடத்துதலின் படி ஜெபத்தை முடிப்பார். அப்போது குழுவிற்கு திட்டத்தை பகிர்ந்து கொண்ட தலைவர் அதை மார்போடு சேர்த்து குழுவுடன் சேர்ந்து "சிலுவை சுமந்து இயேசுவை பின்பற்று" என்று மூன்று முறை அறிக்கை இடுவார்கள்.
- மேற்கூறப்பட்டபடி ஒவ்வொரு தலைவரும் தங்களது "இயேசுவின் திட்டத்தை" பகிர்ந்து கொள்வர்.

- சிறு குழுவில் எல்லோரும் பகிர்ந்து கொண்ட பின், மற்ற குழுவுடன் இணைய வேண்டும். இறுதியாக எல்லோரும் சேர்ந்து ஒரு பெரிய குழுவாக காணப்படுகிறார்கள்.
- தலைவர்களுக்கு ஏற்ற ஒரு அற்பணிப்பின் ஆராதனை பாடலை பாடி தேவனை மகிமைப்படுத்தி பயிற்சி அமர்வு முடிவிற்கு வருகிறது.

# பாகம் 3

## வளம்

# பின் இணைப்பு அ

பின் இணைப்பு 1 - அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

பின் இணைப்பு 2 - பயிற்சி சரி பார்க்கும் பட்டியல்

பின் இணைப்பு 3 - மொழிபெயர்ப்பாளரின் குறிப்பு

பின் இணைப்பு 4 - என் இயேசுவின் திட்டம்

## அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

### ஒன்றரை மணிநேரத்தில் என்னால் ஒரு பாடத்தை முடிக்க முடியவில்ல என்றால், நான் என்ன செய்ய வேண்டும்?

செயல்முறையும் உள்ளடக்கமும் மிக முக்கியமானது. நடைமுறையை சரியாக பின்பற்றுவது நம்பிக்கையை ஏற்படுத்துகிறது. தரமான உள்ளடக்கம் படிப்பினையை கொண்டு வருகிறது. நடைமுறையும் தரமும் மாற்றத்தை ஏற்படுத்துகிறது. பயிற்சி வகுப்புக்களில் அதிக நேரம் உள்ளடக்கத்திற்கு நாம் செலுத்தி செயல்முறைக்கு நேரம் ஒதுக்காமல் இருப்பது ஒரு தவறாக காண்கிறோம்.

*இயேசுவை பின்பற்று பயிற்சி* பாடங்களின் மத்தியில் இயற்கையாகவே ஒரு இடைவேளை அமைந்துள்ளது. சரியான நேரம் இல்லை என்றால் முதல் பாதியை முதல் வகுப்பிலும், மறு பாதியை அடுத்த முறை சந்திக்கும் போது முடிக்கலாம். பயிற்ச்சியாளர்களின் படிப்பறிவைப்பொறுத்து நீங்கள் முடிவு எடுக்கலாம்.

நமது நோக்கமானது, மக்கள், இயேசுவின் தலைமைத்துவ பாணியை அவர்கள் வாழ்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் பயன்படுத்த வேண்டும் என்பதே. அதற்கு நேரமும் பொறுமையும் தேவை என்றாலும் அது சிறந்ததே.

### தலைமைத்துவ இயக்கம் என்பது எப்படி இருக்கும்?

எல்லா தேசங்களிலும் ஆண்டவர் மிக வல்லமயோடு இயங்குகிறார். இப்பொழுது ஆராய்ச்சியாளர்கள் 80 மக்கள் இயக்கங்கள் உள்ளன என்று கூறுகிறார்கள். இவ்வியக்கத்தில் நற்செய்தியை பகிர்ந்து கொள்வது "இழுப்பான்" என்றால், தலைமைத்துவ மேம்பாட்டு அதன் "சக்கரங்கள்" ஆகும். பலமுறை, அது தலைமைத்துவமா, சீடர்களை உருவக்குவகாதா அல்லது சபைகளை துவக்கும் இயக்கங்களா என்பதை சொல்லுவது கடினம். அதை எப்படி சொன்னாலும் அவை அனைத்திற்கும் ஒரு தன்மை உள்ளது: ஆண், பெண், இளைஞர்கள், மற்றும் பிள்ளைகள் அவர் அவர் இருக்கும் இடங்களில் கிறிஸ்துவை போல் இருத்தல் வேண்டும், உலகத்திலே மிகவும் சிறந்த தலைவர்.

ஒரு தலைமைத்துவ கணை ஒரு தலைமைத்துவ இயக்கத்தை உருவாக்கும். ஆண்களும், பெண்களும் சிறு குழுக்களாக பொறுப்புடைமை, கற்றுக்கொள்ள, மற்றும் கற்பிக்க ஒன்று சேருகிறார்கள். இதை போன்ற கனிகளை பற்றி பவுல் 2 திமோதி 2:2 வில் கூறுகிறார். ஒருதலைவர் ஒரு குழுவிலிருந்து கற்று வேறொரு குழுவை கற்பிப்பார். தலைமைத்துவ கணைகள் ஆறாவது அல்லது ஏழாவது பரம்பரையில் ஒரு இயக்கமாக மாறுகிறது. ஒவ்வொரு நிறுவனம், ஊழியம் அல்லது மக்கட் குழு அவர்களுடைய தலைவர்கள் கொண்டு போகும் வரை தான் செல்வார்கள். ஆகையால் தலைமைத்துவத்தை வேண்டுமென்றே பயிரிட வேண்டும் ஏன் என்றால் தலைவர்கள் பிறப்பதில்லை. எப்படி வழிவகுப்பது என்பதை தலைவர்கள் கற்கவேண்டும்.

ஒரு தலைமைத்துவ கணையில் 13 இலிருந்து 19 வயதுள்ளவர்கள் தலைமைத்துவத்தின் முறைகளை பற்றி கற்கிறார்கள்; நோக்கம், இலக்கு, குறிக்கோள், அடைவு மட்டம். இருவதிளிருந்து முப்பது வயதானவர்கள் இவற்றை தங்களது அலுவலகத்திலும் சொந்த வாழ்கையிலும் இந்த வழிமுறைகளை கடைபிடிக்கிறார்கள். முப்பது வயதிற்கு மேற்பட்டவர்கள் தங்களது ஊழியத்திலும், வணிகத்திற்கும் உபயோகிக்கிறார்கள். நாற்பது வயதிற்கு மேற்பட்டவர்கள், தலைமைத்துவ முறைகளை இடைவிடாமல் உபயோகித்ததின் பலனை காண்கிறார்கள். ஐம்பது வயதிற்கு மேற்பட்டவர்கள், இயேசுவின் தலைமைத்துவ முறையை கடைபிடித்திருன்தனர் என்றால் அவர்கள் இளைஞர்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறார்கள். வழக்கமாக, அறுபது வயதிற்கு மேற்ப்பட்டவர்கள் மற்ற ஆண்களையும் பெண்மணிகளையும்

தலைவர்களாகுவதர்க்கு பயிற்சி அளிக்கலாம். எழுவது வயதிற்கு மேற்ப்படவர்கள் அவர்களது வயதிலும் விசுவாசத்தையும் பலனை விட்டு மரபை பின்செல்கிரார்கள்.

## இந்நாட்களில் வெளிநாட்டு ஊழியக்காரரின் பணி எவ்வாறு மாறியுள்ளது?

ஒவ்வொரு ஊழிய முயற்சிக்கும் நான்கு பாகங்கள் உள்ளன: கண்டறிதல், அபிவிருத்தி, செயல்படுத்துதல், பகிர்ந்தளித்தல். ஒவ்வொரு கட்டத்திற்கும் தனித்தன்மை வாய்ந்த குறிக்கோளும் சவால்களும் உள்ளன. ஊழியத்தை தவிர ஒவ்வொரு கட்டத்திற்கும் வெவ்வேறு திறமைகள் தேவை.

*கண்டறிதல்* கட்டத்தில் உள்ளவை, சுவிசேஷத்தை கேட்காத மக்களை கண்டறிதல், முன்னோடி ஊழியக்காரர்களை அனுப்புதல், மற்றும் அப்புதிய இடத்தில் நிலைநாட்டுவது. ஊழியக்காரரின் வேலை ஆராய்தல், சுவிசேஷத்தை பகிர்தல், மற்றும் விருப்பம் உள்ள மனிதர்களோடு ஐக்கியம் செய்தல். இந்த கட்டத்தின் பலன், சில சபைகள். ஆனால், இச்சபைகள் நிறுவனம் செய்தவரின் நாட்டில் உள்ள சபை போல் இருக்கும், புதிய தேசத்தின் கலாச்சாரத்தை போல் இருக்காது. இந்த கட்டத்தில் ஊழியக்கார்களை எண்பது சதவிகிதம் வேலையை செய்வார்கள், இருபது சதவிகிதம் அந்நாட்டு மக்கள் செய்வார்கள்.

கண்டறிதல் கட்டத்தில் துவக்கப்பட்ட சபைகள் வளர்ந்து இன்னும் சில சபைகள் துவங்கும், அப்போது இந்த அபிவிருத்தி கட்டத்தில் ஒரு சபைகளின் கூட்டமைப்பு உண்டாகும். இந்த கட்டத்தில் ஊழியக்காரர்கள் சபைகள் ஒன்று சேர்ந்து ஐக்கியத்துடன் இருக்க உதவுவார்கள், சுவிசேஷத்தை அறிவிப்பார்கள், மற்றும் விசுவாசிகளுள் சீடர்களை உருவாக்குவதில் எண்ணம் செலுத்துவார்கள். அந்த நாட்டில் ஒரு சிறிய கிறிஸ்தவ கலாச்சாரம் துவங்குகிறது. இந்த கட்டத்தில் ஊழியக்கார்களை அறுபது சதவிகிதம் வேலையை செய்வார்கள், நாற்பது சதவிகிதம் அந்நாட்டு மக்கள் செய்வார்கள்.

அதன் பிறகு செயல்படுத்துதல் கட்டத்தில் பல கூட்டமைப்புகள் உருவாகிய பின் ஒரு மாநாடு அல்லது ஒரு கணினி கட்டமைப்பு உருவாகிறது. நூறு குழுக்கள் அல்லது சபைகள் உருவாகிய பின் இந்த கட்டம் துவங்குகிறது அதன் பின்னரும் வளருகிறது. ஊழியக்காரரின்

பொறுப்பானது, தலைமைத்துவத்தை மேம்படுத்துவது, பிரச்சனைகளை சமாளிப்பதில் அந்நாட்டு மக்களை உதவுவது, மற்றும் அங்கிருக்கும் எல்லா மக்களுக்கும் சுவிசேஷத்தை அறிவிக்க அந்நாட்டு மக்களுக்கு வழிமுறையை காட்டவும் ஆகும். இந்த கட்டத்தில் ஊழியக்காரர்களை நாற்பது சதவிகிதம் வேலையை செய்வார்கள், அறுபது சதவிகிதம் அந்நாட்டு மக்கள் செய்வார்கள்.

ஒவ்வொரு குறிக்கோளின் இறுதி கட்டமானது பகிர்ந்தளித்தல். இக்கட்டத்தில் ஊழியக்காரர்கள், அந்நாட்டு மக்களிடம் பொறுப்பை ஒப்படைப்பார்கள். கொண்டாடும்போது, இணைந்து செயப்படும்போது, மற்றும் கற்பிக்க ஊழியக்காரர்கள் திரும்பவும் வருவார்கள். இந்த பகிர்ந்தளித்தல் கட்டத்தில் ஊழியக்காரர்களை பத்து சதவிகிதம் வேலையை செய்வார்கள், தொண்ணூறு சதவிகிதம் அந்நாட்டு மக்கள் செய்வார்கள். இங்கிருந்து மறுபடியும் அந்நாட்டு மக்களின் வாழ்கையிலும் வேளையிலும் கண்டறிதல் கட்டம் துவங்குகிறது.

வெளிநாட்டு ஊழியக்காரர்கள், பல நாடுகளில் தாங்கள் பகிர்ந்தளித்தல் கட்டத்தில் இருக்கிறார்கள் என்று உணர வேண்டும். இன்றைய தினத்தில் ஊழியக்காரர்களின் முக்கிய பொறுப்பு, கற்பித்தல், பயிற்சி அளித்தால், மற்றும் அங்கிருக்கும் சகோதர சகோதரிகளுக்கு ஆண்டவர் அவர்களுக்கு கொடுத்த ஊழிய பணியில் உதவி செய்தல் என்பவை ஆகும். *இயேசுவை பின்பற்று பயிற்சியின்* ஒரு முக்கிய அம்சம், ஊழியக்காரர்களுக்கு பகிர்ந்தளித்தல் கட்டத்தில் ஒரு சாதாரணமான, மீண்டும் உற்பத்தி செய்ய கூடிய ஒரு கருவியை கொடுப்பதுதான்.

### "ஐந்தின் விதிகள்" என்றால் என்ன?

சாதாரணமாக, ஒருவன் ஒரு திறமையை ஐந்து முறையாவது செயல் படுத்தினான் என்றால், அவன் தானாகவே அந்த திறமையை உபயோகிக்க அவனுக்கு நம்பிக்கை வரும். கடந்த ஒன்பது வருடங்களுக்கு 5000 நபர்களுக்கு பயிற்சி அளித்தபின், இதை நாங்கள் பலமுறை கண்டிருக்கிறோம்.

பயிற்சி கூட்டங்களில் எப்போதும் மிகவும் அறிவு மிகுந்த மக்கள் வருவார்கள், ஆனால் பயிற்சி முடிந்தபின் அவர்களது வாழ்கையில் சிறிது மாற்றம் தான் ஏற்படும். அதற்கு பதிலாக மக்கள் சொல்வார்கள் இதை இன்னும் சுவாரசியமான ஒரு பயிற்சி ஆக்க வேண்டும் என்று, அல்லது

உள்ளடக்கத்தை மாற்ற வேண்டும் என்று மற்றும் பல கருத்துக்களை கூறுவார்கள். வழக்கமாக பிரச்சனை உள்ளடக்கத்தில் இருக்காது, மக்கள் இதை அவர்களது வாழ்கையில் செயல்முறை படுத்தவில்லை.

## இத்தனை கை அசைவுகள் ஏன் இருக்கின்றன?

மக்கள், தாங்கள் பார்ப்பதிலிருந்து, கேட்பதிலிருந்தும், செய்வதிலிருந்தும் கற்பார்கள். அமெரிக்க நாடுகளில் முதல் மற்றும் இரண்டாவது முறைகளில் அதிகம் வலியுறுத்துவார்கள் (அச்சிறிய பாடம் நடத்துவதை போல்). பல ஆராய்ச்சிகள் கூறுவது என்ன வென்றால், மாணவர்கள் கேட்பதிலிருந்தும், பார்ப்பதிலிருந்தும், மிகவும் குறைவாக கற்கின்றனர். மூன்றாவது செயல்முறை ஆனது மக்களை கற்பிப்பதில் மிகவும் குறைவாக உபயோகிக்கப்படுகிறது. கை அசைவுகளால் சுலபமாக மிகுந்த தகவல்களை கற்பிக்கலாம் என்று நாங்கள் கண்டறிந்தோம். படித்தவர்களும், படிக்காதவர்களும் கை அசைவுகளால் கற்கும் போது ஞாபகம் வைத்து நன்றாக சொல்லுவார்கள்.

நாங்கள் *இயேசுவை பின்பற்று பயிற்சியை* துவங்கியபோது நாங்கள் கை அசைவுகளோடு துவங்கவில்லை என்று நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். நாங்கள் செயல்முறையும் மாற்றினோம், அப்போது எங்களது பயிற்சி கொள்கைகளை நாங்கள் மாற்றி; பயிற்சி பெறுபவர்கள் இறுதியில் நாங்கள் கற்பிதத்தை எங்களுக்கு திரும்ப சொல்லவேண்டும் என்று விரும்பினோம். ஆசியா கண்டத்தில் மனப்பாடம் என்பது கல்வியின் ஒரு முக்கிய அம்சமாகும். இப்போது, மக்கள் அனைவரும் நாங்கள் கற்பிதத்தை சுலபமாக திரும்ப சொல்லுவதுண்டுஏன் என்றால் நாங்கள் கை அசைவுகளை உபயோகித்தோம். நாங்கள் இதை துவங்குவதற்கு முன் அவர்களால் செய்ய இயலவில்லை. சில சிறிய பாடங்களுக்கு பின், தலைவர்கள் தாங்கள் முழு பாடத்தையும் ஞாபகம்வைத்திருக்கிறார்கள் என்று ஆச்சிரியப்படுவார்கள்.

கை செய்கைகளை துவங்கிய பின், தலைவர்கள் மற்ற தலைவர்களை உருவாக்குவதில் நாங்கள் ஒரு பெருக்கை கண்டோம். ஆன்மீக பயிற்சி என்பது நமது மனதிற்கும் மேலானது. இதயம் மாறவில்லை என்றால் ஒரு மாறுதலும் ஏற்படவில்லை. கை செய்கைகளை உபயோகித்தால், நாம் தலையிலிருந்து கற்றதை

இருதயத்திற்கு அனுப்புகிறோம். அதனால் தான் நாம் பிள்ளைகளை கை செய்கைகளால் கற்பிக்கிறோம், இப்படி வாழ்க்கையின் முக்கிய உண்மைகளை அவர்கள் மறப்பதில்லை. நானும், ஜெபிக்கும்போது, கை செய்கைகளை உபயோகிப்பேன், இப்படி நான் எந்த கட்டத்தில் உள்ளேன் என்ற ஞாபகம் எனக்கு இருக்கும் - புகழ், பாவமன்னிப்பு, கேட்பது, அல்லது இணங்குதல்.

## பாடங்கள் ஏன் இவ்வளவு சுலபமாக இருக்கின்றன? .

பாடங்கள் சுலபமாக இருப்பதின் ஒரு முக்கிய காரணம், இயேசுவும் அப்படி செய்தார், நாங்கள் அவரை பின்பற்றுகிறோம். கடினமானத்தை அவர் சுலபமக்கினார். நாம் சுலபமானத்தை கடினமாக்குவோம். இயேசுவின் குறிக்கோளானது, வாழ்வை மாற்றுவது, "மிக புதிய உண்மையை" கற்பது இல்லை. நாம் சுலபமாக கற்பித்தால், பிள்ளைகள், இளைஞர்கள், மற்றும் பெரியோர் ஒன்றாக சேர்ந்து பாடங்களை கற்கலாம். "மேற்கு" எங்கிருக்கிறது என்று காண்பிப்பதற்கு 1000 டாலர் விலைமதிப்புள்ள கருவி உங்களுக்கு தேவை இல்லை, விலை குறைந்த திசை காட்டி போதும்.

நீதிமொழிகள் சொல்வது என்னவென்றால், எல்லாவற்றையும் விட, ஞானத்தை விரும்பு என்று. அறிவை சரியாகவும், திரமையான முறையில் பிரயோகிப்பது ஞானம். திட்டம் எவ்வளவுக்கு எவ்வளோ கடினமாக இருக்கிறதோ, அது தோல்வியடையும் என்று நாங்கள் கவனித்தோம். மேய்ப்பர்களும், ஊழியக்காரர்களும் வாரங்கள் மற்றும் மாதங்கள் எடுத்து பல செயல் முறைகளை உருவாக்கியிருக்கிறார்கள், இதில் அதிகமானவை உபயோகப்படவில்லை. சிலர் நீதிமொழிகள் என்ற புத்தகத்தில் மிக எளிதாக இருக்க கூடாது என்று வாதாடுகிறார்கள். நீதிமொழிகள் என்ன சொல்கிறது என்றால் 'முட்டாளாக' இருக்காதே என்று, ஞானம் உள்ளவன், மற்றவர்கள் பிரதி செய்வதற்கு எளிதன முறையில் ஒரு காரியத்தை செய்வார்கள்; ஒரு முட்டாள் இதற்கு மாறாக செய்வான்.

நற்செய்தி என்னவென்றால், இயேசுவை பின்பற்ற ஒருவனின் ஆற்றல், திறமைகள், படிப்பு, நிறவேரியவை, அல்லது அவனது மனோபாவத்தை சார்ந்திருப்பது இல்லை. இயேசுவின் கட்டளைக்கு எப்போதும், உடனடியாக, முழு இதயத்தோடு, கீழ்படிவத்தின் அடிப்படையில் தான் உள்ளது. சிக்கலான பாடங்களை கற்பித்தால் மாணவர்கள் அதை தங்கள் வாழ்க்கையில் பிரயோகிப்பதில்லை. தனது

கட்டளைகள் எல்லாவற்றையும் கடைபிடிக்குமாறு கற்பிக்க தனது சீடர்களிடம் இயேசு கட்டளை இடுகிறார். நாம் சிக்கலான் பாடங்களை கற்பித்தோம் என்றால், நாம் அவர்களது கீழ்படிதலுக்கு தடையாக இருக்கிறோம். ஆகையால் அவர்கள் மற்றவர்களுக்கு கற்பிப்பதில்லை.

## மற்றவர்களுக்கு பயிற்சி அளிக்கும் போது செய்யும் பொதுவான தவறுகள் என்ன?

பயிற்ச்சியாளர்கள் மூன்று பகுதிகளில் பயிற்சி தவறுகளை செய்கின்றனர்: மக்கள், செயல்முறை, உள்ளடக்கம். நாங்கள் பல மக்களை கற்பித்ததனால், மற்றவர்களால் கற்றதனால் நீங்கள் உங்களது திறமையை வளர்த்துக்கொள்ள உங்களுக்கு இந்த கவனிப்புகளை கூறுகிறோம்.

ஒவ்வொரு தலைவரும் தங்களது முன்னனுபவத்தோடு, அறிவோடு, மற்றும் திறமைகளோடு பயிற்சிக்கு வருகிறார்கள். பயிற்சி துவக்கத்திலே இதை பற்றி நினைக்காத பயிற்சியாளர்கள், மக்களுக்கு தெரிந்தவர்ரையே கற்பிப்பார்கள். “இந்த தலைப்பை பற்றி உங்களுக்கு என்ன தெரியும்?” என்ற ஒரு சாதாரணமான கேள்வி, அவர்கள் எந்த நிலையிலிருந்து பயிற்சியை துவங்க வேண்டும் என்று கூறும். பல பயிற்சியாளர்கள், தாங்கள் தலைவர்களுக்கு இதை பற்றி தெரியும் என்ற எண்ணத்தோடு பயிற்சி அளிப்பதையும் பார்த்திருக்கிறோம். சோதனை செய்யாத கற்பனைகள் உங்களை பிறகு கடிக்க வரும். நல்ல தொடர்பு இருந்தால் இதை தவிர்க்கலாம். மக்கள் பல முறைகளில் படிப்பார்கள், நீங்கள் ஒன்று அல்லது இரண்டு முறைகளை மட்டும் கையாள்வது தவறு. இப்படி செய்தால் சிலர் நிச்சயமாக இதிலிருந்து பயன் பெற மாட்டார்கள், ஆனால் நன்றாக திட்டம் இட்டு கற்பித்தால் அவர்கள் பயன் பெறலாம். மனோபாவத்தின் அடிப்படையில் மக்களுக்கு வெவ்வேறு தேவைகள் உண்டு. பறந்த மணம் கொண்டவர்களின் அடிப்படையில் மட்டும் பயிற்சி அளித்தால் அகமுக நோக்காளர்கள் பயன் பெற மாட்டார்கள். “யோசிப்பவர்கள்” மீது மட்டும் கவனம் செலுத்தினால் அதிக “உணர்ச்சி” உள்ளவர்களை விட்டு விடுவீர்கள்.

பயிற்சி அளிக்கும் முறையிலும் பயிற்றுனர் தவறுகளை செய்வார்கள். பயிற்சி அளிக்கும் போது உரையாடல் இல்லை என்றால் அது பயிற்சி அல்ல, அது ஒரு காட்சியளிப்பு. பயிற்சி என்பது ஒரு

பயணமானது, அது முழு மனிதனின் திறமைகள், நற்குணம், அல்லது அறிவை கொண்டுள்ளது. பயிற்றுனர் உள்ளடக்கத்தின் மேல் அதிக கவனம் செலுத்தி, பயிலுனர்களுக்கு கற்றதை பற்றி பேச வாய்ப்பு கொடுப்பதில்லை. வயது வந்தவர்கள் கலந்துரையாடி, அது தங்களது வாழ்க்கையில் எப்படி நடைமுறை படுத்துவது என்பதை பற்றியும் பேசினால் அவர்கள் நன்றாக புரிந்துகொள்வார்கள். பயிற்சி முழுவதும் ஒரே உத்தியை உபயோகிப்பது இன்னொரு பொதுவான தவறாகும். ஒரு உத்தியை அடிக்கடி உபயோகித்தால் அது அதன் ஆற்றலை இழந்து விடுகிறது. கடைசி தவறானது நீண்ட பயிற்சி அமர்வுகள். ஒரு விதியாக நாங்கள் மூன்றில் ஒரு பங்கு நேரத்தில் ஒரு பாடத்தை கற்பிக்க முயலுகிறோம். ஒரு தொண்ணூறு நிமிட அமர்வில் நாங்கள் இருபது நிமிடங்கள் மட்டும் தான் பேசுவோம்.

இறுதியாக பயிலுனர் செய்யும் தவறானது, அதிக விஷயங்களை பகிர்ந்து கொள்வது அதனால் தான் அமர்வுகள் அதிகம் நேரம் செல்லும். நல்ல உள்ளடக்கமானது சில விஷயங்களை உட்கொள்ளும் அவை, அறிவு, குணம், திறம் மற்றும் ஊக்கம். பயிலுனர் மேற்கிலிருந்து வந்தவர் என்றால், “அறிவின்” மீது கவனம் செலுத்தி, அறிவிருந்தால் விளைவுகள் கிடக்கும் என்று எண்ணுவார்கள். அவர்கள் குணம் மற்றும் திறமையை பற்றி பேசலாம் ஆனால் செயல்முறையை பற்றி பேசுவதில்லை. பலமுறை பயிலுனர் அவர் எப்படி பயின்றாரோ அவ்வாறே பயிற்சி செய்கிறார். பழயதை உடைக்க வேண்டும் அப்போது தான் தலைவரின் வாழ்க்கையில் மற்றம் ஏற்படும். ஒப்பற்ற பயிற்சி தகவல் மட்டும் கொடுக்காது. கொள்கை மாற்றமாகும். பலமுறை பயிலுனர் தங்கள் ஒரு புதிய கலாச்சாரத்திற்கு செல்லும் போது; விவசாயிகளும், நகரத்தில் உள்ள தோழி நெறிஜரை போல் உள்ளடக்கத்தை நன்றாக புரிந்து கொள்வார்கள் என்று எண்ணுகின்றார். ஜெபம் இன்மை தான் இதற்கு முக்கிய காரணம்.

எல்லாவற்றயும் விட பயிற்றுனர் செய்யும்மிக பெறிய தவறு, பயிற்சிக்கு கற்றதை செயல்முறை படுத்த நேரம் கொடுக்காதது. பயிற்றுனர் பல முறை பயிற்சியை ஒரு முறை நிகழ்ச்சி என்று எண்ணுகிறார்கள், ஒரு தொடரும் பயணமாக இல்லை. இதை ஒரு “நிகழ்ச்சி” என்று கருதுபவர் சொல்வது, “எல்லோரும் இங்கே இருக்கின்றனர், நம்மால் முடிந்ததை அவர்களுக்கு கொடுப்போம்” என்ற மனப்பாங்கு. வேதத்திலிருந்து மற்றவர்களை எவ்வாறு கற்பிப்பது என்பதை

கற்பிக்க ஒரு கருத்தியல் மாற்றம் தேவை படும். பயிற்றுனர் எப்படி பட்டவரை கற்பிக்க வேண்டும் என்ற நோக்கம் இருக்கிறது, ஒரு தலைவரை அல்ல. நீங்கள அதிகம் உள்ளடக்கத்தின் மேல் கவனம் செலுத்தி, செயல்முறை படுத்த நேரம் ஒதுக்கவில்லை என்றால், அவர்கள் கீழ்படகூடிய அளவிற்கு அதிகமாக கொடுத்ததின் குற்றம் உங்கள் மீது வரும். வெற்றிக்கில்ல மாறாக தோல்விக்கு அவர்களை தயார் செய்கிறீர்கள்.

## பயிற்சி அளிப்பதற்கு தலைவர்கள் இல்லை என்றால் உங்களது அறிவுரை என்ன?

வளரும் தலைவர்கள் வளரும் தலைவர்களை கவர்கிறார்கள். இயேசுவையும் அவரது தலைமைத்துவ வழியை பின்பற்ற உங்களது வாழ்கையை அற்பணித்தால், ஆண்டவர் உங்களை ஆசீர்வதித்து, உங்களோடு நடக்க மற்றவர்களையும் அனுப்பி வைப்பார். விசுவாசத்தில் நாம் முதல் படியை எடுத்து வைக்க வேண்டும். இயேசு ஒவ்வொரு விசுவாசியில் வசிக்கிறார், அவரது ராஜியம் வரவும், அவரது சித்தம் நிறைவேறவும் அவர் விரும்புகிறார். கர்தத்துவமும்(Lordship), தலைமைத்துவமும் ஒன்றாக செயல்படும். நீங்கள் விண்ணப்பம் பன்னாமல் இருப்பதனால் உங்களுக்கு சித்திக்கிறதில்லை.ஆண்டவர் உருவாக்கும் தலைவர்களை காண்பதற்கு ஜெபம் செய்யுங்கள். ஏற்புத்தன்மை மற்றும் ஊக்குவிக்கும் இதயத்திற்கு ஜெபிக்கவும். தலைமைத்துவத்தில் இயேசுவை போன்ற தோற்றம் பெருவதற்கு வேண்டுங்கள். மீன் பிடிப்பவர்கள் நல்ல அப்போஸ்த்தளர்கள் ஆகா முடியும்.

ஆண்டவர் உங்களுக்கு கொடுத்த மனிதர்களின் மேல் கவனம் செலுத்து, இல்லாதவர்களின் மீது அல்ல. உங்களை பின்பற்றுபவர்களை வல்லமை உள்ள தலைவர்களாக மாற்ற முயற்சி செய்யவும். ஒவ்வொருவரும் ஒருவரையாவது வழிநடத்துகிறார். தாய் தனது பிள்ளையை வழிநடத்துகிறார். ஆசிரியர் தனது மாணவர்களை வழிநடத்துகிறார். வணிகன் தனது சமூகத்தை வழிநடத்துகிறான். *இயேசுவை பின்பற்று பயிற்சியில்* கற்பிக்கும் வழிமுறைகளை இதில் உபயோகிக்கலாம். நமது எதிர்பார்ப்பை சந்திக்க மக்கள் எழுவார்கள்.

ஒவ்வொரு மனிதனை தலைவனாக நாம் நடத்தினால் ஆண்டவர் அவர்களை வைத்து என்ன செய்வார் என்று நாம் காணலாம்.

ஒரு தலைமைத்துவ பயிற்சி நிகழ்ச்சியை நீங்கள் விருந்தோம்ப முயற்சி செய்யுங்கள். அங்கிருக்கும் தலைமைத்துவ குழுக்களின் வழியாக விளம்பரம் செய்யுங்கள் - லயன்ஸ் கிளப், வர்த்தக-சபை, விதானை போன்றவை. உங்களிடம் உள்ள பயிற்சி கைநூலை உபயோகித்து, வரும் தலைவர்களுக்கு உலகத்திலே சிறந்த தலைவரின் வழிமுறைகளால் ஆயுதப்படுத்தும். ஒரு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தால், சமூகத்தில் நம்பக்கூடிய மனிதனாக மாறுவதை தவிர, உங்களது தலைமைத்துவம் வளரும். நீங்கள் பயிற்சி அளிக்கும் குழுவில் இயேசுவை பின்பற்றும் ஒருவரும் இல்லை என்றால், இன்னொரு சிறிய குழுவில் சுவிசேஷம் செல்லாத இடத்தில் செல்லவேண்டும் என்ற குறிக்கோளை கொடுங்கள்.

## புதிய தலைவர்களை உருவாக்குவதில் பயிற்றுனருக்கு முதல் படி என்ன?

தலைவர்களை தேர்ந்து எடுப்பதற்கு முன்னே இயேசு மாலை பொழுதை ஜெபத்தில் செலவு செய்தார் அங்கே தான் நாமும் துவங்க வேண்டும். அருவடைப்யிலிருந்து, அருவடைப்பை தலைதாங்குவதற்கு தலைவர்கள் உருவாக ஜெபம் பண்ணுங்கள். நாம் மனிதனின் வெளிப்புறத்தை காண்போம், ஆனால் ஆண்டவர் இருதயத்தை காண்கிறார் என்பதை மனதில் வைத்து ஜெபியுங்கள். பலமுறை நாம் அபிப்பிராயத்தின் மேலும், திறமைகளின் மேலும் நம்பிக்கை வைக்கிறோம். ஆர்வமுள்ள, ஆன்மீகமான தலைவர்களை எழுப்ப ஆண்டவரிடம் ஜெபத்தில் மன்றாடுங்கள்.

நீங்கள் ஜெபித்தபின், இயேசுவின் தலைமைத்துவத்தை பின்பற்றும் தலைவர்களாக உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்தை அடிக்கடி பகிருங்கள். குடும்பத்தோடும், நண்பர்களோடும் சேர்ந்து எல்லோரும் ஒன்றாக நல்ல தலைவர்களாக மாற ஜெபம் பண்ணுங்கள். ஆண்டவர் உங்களிடம் கொண்டுவரும் மக்களிடம் அவர்கள் வல்லமை உள்ள தலைவர்களாக மாறுவது எப்படி என்று கறக்க விருப்பம் உண்டா என்று கேளுங்கள். நண்பர்கள், ஒருவரை ஒருவர் உதவி நற்பயனளிக்கிற தலைவர்களாக உருவாக்கும் பார்வையை அடிக்கடி பகிருங்கள். நீங்கள்

இந்த பார்வையை பகிர்ந்து கொள்ளும் போது, நாட்டம் உள்ள தலைவர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

அடுத்த படியாக ஆண்டவர் எழுப்பும் தலைவர்களை அவர் உங்களுக்கு காட்டும் படியாக ஜெபியுங்கள். அவர்களை நீங்களே கண்டெடுக்க முயற்சி செய்யாதீர்கள். தலைவர்கள் செய்ய வேண்டிய கடமைகளை செய்து அவர்கள் தங்களை "தானே தேர்ந்து எடுக்கட்டும்". நாம் தலைவர்களை "நியமிப்பதில்லை", விசுவாசமுள்ளவர்களை நாம் "அபிஷேகம்" செய்வோம். ஆற்றல் மிகுந்த தலைவராக ஆகா முடியும் என்ற பட்டியில் "இறுதி" நிலையில் இருப்பவனை ஆண்டவர் "முதலில்" தேர்ந்து எடுப்பார். தற்போதைய நிலையில் திருப்தி இல்லாதவர்களை கண்டுகொள்ளுங்கள். படிக்கவும், பின்பற்றவும் தயாராக இருப்பவர்கள்மீது கவனம் செலுத்தவும். மேல் கட்டத்தில் உள்ள தலைவர்கள் அதிக நாட்டத்தை காட்டவில்லை என்றால் நீங்கள் நம்பிக்கை இழக்காதீர்கள்.

இறுதியாக, உங்களது இயேசுவின் திட்டத்தை நிறைவேற்ற முயற்சி செய்யுங்கள். செயலைபோல், எதுவும், தற்போதைய தலைவர்களை, அல்லது தலைவர்களை இச்சயுள்ளவர்கள இழுப்பதில்லை. ஜெய்க்கும் அணியோடு இருக்க மக்கள் விருபப்படுவார்கள். ஆண்டவர் உங்களது இயேசு திட்டத்தில் உதவி செய்கையில், உங்களுக்கு உதபுவர்களை அனுப்பி வைப்பார். பலமுறை ஆண்டவர், நண்பர்கள், குடும்பத்தினர் மற்றும் வெற்றியுள்ள வணிகர்களை அனுப்புவார். தலைவர்களுக்கு அவர்களை பின்பற்றுபவர்கள் இருப்பார்கள். நீங்கள் இயேசுவை பின்பற்றும் போது, மற்றவர்கள் இயேசுவை பின்பற்றலாம் என்ற தெளிவான பாதை கிடைக்கும். உங்கள் மக்கட் குழுவில் எவராவது இந்த பயணத்தை துவக்க வேண்டும். அது நீங்களாக இருக்கட்டும்.

*தீவிரமான தலைவர்களை உருவாக்கும் பயிற்சியில்* பயிற்றுனர் உபயோகிக்கும் வெவ்வேறு அமைப்புகள் யாவை?

உங்களுக்கு ஒரு நாள் இருந்தால், "இயேசு சீடர்களை எவ்வாறு கற்பித்தார்", "ஒரு செம்மையான தலைவரின் ஏழு குணங்கள் யாவை?" "இயேசுவின் கிறிஸ்துவின் எட்டு பத்திரங்கள்" பாடங்களை கற்பிக்கலாம். இவைகளை கற்பித்தால் தலைவர்களுக்கு வேண்டிய திறமை, குணம், மற்றும் ஆர்வத்தால் ஆயத்தப்படுத்துவோம். உங்களை அவர்கள்

மறுபடியும் அழைத்தால், மற்ற பாடங்களை கற்பித்து, தலைமைத்துவ அறிவும், திறமையும், ஒரு நல்ல வழிமுறையும் அவர்களுக்கு கிடைக்கும். பயிற்சி பெற நேரம் இல்லாத சமயங்களில் இதை போன்ற அமைப்பு மிகவும் உபயோகப்படும்.

நீங்கள் ஒவ்வொரு வாரமும் அல்லது ஒவ்வொரு இரண்டுகட்டி வாரம் சந்திக்க முடியும் என்றால், பாடம் பாடமாக செல்ல பரிந்துரை செய்கிறோம். 10 , 20 வாரங்களில் திறமைகள் ஒன்றின் மேல் ஒன்று கட்டி எழும்பி ஒரு உறுதியான அஸ்திவாரத்தை உருவாக்கும். அமர்வுகளின் இடையே, நீங்கள் கற்பிக்கும் பாடங்களை, தலைவர்கள் மற்ற புதிய தலைவர்களை கற்பிக்க ஊக்குவியுங்கள். மக்கள் அதிக வேலை இருந்தும் படிப்பதற்காக சிறிது நேரத்தை ஒதுக்கும் இடங்களில் இதை போன்ற அணுகுமுறை உதவும். எவராவது உடல் நோயினால் சில அமர்வுகள் வர இயலவில்லை என்றால் வகுப்பு முடிந்தபின் அவர்களை கற்பிக்க கூறும்.

மூன்று நாட்கள் இருந்தால் இந்த புத்தகத்தில் உள்ளபடி பாடங்களை நடத்தவும். கலந்துரையாட அதிக நேரத்தை ஒதுக்கவும், இடைவேளைகளில் தலைவர்களை ஒவ்வொருவராக சந்தித்து உரையாடவும். ஒவ்வொரு அமர்வின் பின் தலைவர்களோடு இதை கேளுங்கள், “ஆண்டவர் இந்த பாடத்தின் மூலம் உங்களிடம் என்ன பேசுகிறார்?” குழுவோடு சேர்ந்து இதன் பதிலை கொடுக்க அழையுங்கள். வயது வந்தவர்கள் உரையாடி போரிடும்போது நன்றாக கற்பார்கள். உங்களது குழுவின் தேவைகளை பற்றி உங்களுக்கு உள்ளுணர்வு கிடைக்கும். கல்வி ஸ்தாபனங்களில், வேத கல்லூறிகளில், ஊழியக்காரர்களோடு, அல்லது விவசாயிகளோடு இந்த அணுகுமுறை கடைபிடிக்கலாம்.

# பின் இணைப்பு ஆ

## பயிற்சி சரி பார்க்கும் பட்டியல்

### பயிற்சியின் ஒரு மாதத்திற்கு முன்பு

- *ஜெபக்குழுவின் பட்டியலிடு* - பயிற்சிசெய்கிற போதும் பயிற்சிக்கு முன்னும் பரிந்து பேச ஒரு ஜெபக்குழுவின் பட்டியலிடு. இது **மிகவும்** முக்கியம்!
- *வேலை பயிலுனர் பட்டியல் - தீவிரமான தலைவர்களை உருவாக்கும் பயிற்சியில்* முன்னே பங்கேற்றவர்களை உங்களோடு பாடம் நடத்த ஒரு குழுவின் பட்டியலை இடுங்கள்.
- *பங்கேற்பாளர்களை அழை* - அந்த கலாச்சாரத்திற்கு ஏற்ற வகையில் பங்கேற்பாளர்களை அழை. கடிதம் அனுப்பு, தொலைபேசி மூலம் அழை. *தீவிரமான தலைவர்களை உருவாக்கும் பயிற்சிக்கு* சரியான குழு எண்ணிக்கை 16 லிருது - 24 முடிய. பல வேலை பயிலுனர்கள் இருந்தால் நீங்கள் 50 தலைவர்களுக்கு கூட பாடம் நடத்தலாம். *தீவிரமான தலைவர்களை உருவாக்கும் பயிற்சி* ஒவ்வொரு வாரமும் மூன்றிற்கும் மேற்பட்ட தலைவர்கள் குழுவோடு வெற்றிகரமாக நடத்தலாம்.
- *தளவாடங்களை உறுதிப்படுத்து* - சாப்பாடு, தங்குமிடம், போக்குவரத்து ஆகியவற்றை தேவைக்கேற்ப தயார் செய்யவும்.
- *ஒன்றுகூடுவதற்கு ஒரு அரை-* ஒரு பெறிய அறையை ஏற்பாடு செய்யவும். இரண்டு மேஜைகள் அறைக்கு பின்னால், வட்டத்தில் நாற்காலிகளை அடிக்கி, கிரியைகளுக்கு அதிக இடத்தை ஒதுக்கி வைக்கவும். கிராமப்புறம் என்றால் நாற்காலிகளுக்கு பதிலாக பாயை விரிக்கலாம். தினமும் இரண்டு இடைவேளைகளோடு காப்பி, தேநீர், மட்டும் பலகாரத்தை திட்டத்தில் சேர்த்துக்கொள்ளவும்.

- *பயிற்சிக்கு வேண்டிய பொருட்களை சேகரி* - வேத புத்தகங்கள், வெள்ளை பலகை அல்லது பெறிய காகிதங்கள், தலைவர் குறிப்பு, மாணவர் குறிப்பு, பல நிற பேனாக்கள், வண்ணக்கட்டிகள், கையடக்கக் கணினிகள்(பள்ளியில் உபயோகிப்பது போல), பேனாக்கள், எழுதுகோல், சின்லோன் பந்து, மற்றும் பரிசுகள்.
- *துதிக்கும் நேரத்தை ஒதுக்கு* - ஒவ்வொரு பங்கேற்பாளற்கு பாடல்கள் உடைய புத்தகத்தை கொடுக்க வேண்டும். நரம்புகலத்தை வாசிக்கும் ஒருவரை தேர்ந்தெடுத்து அவர் உங்களை தொழுகலையில் உதவி புரிய கேட்டுக்கொள்ளவும்.

## பயிற்சிக்கு பின்

- *பயிற்சியின் ஒவ்வொரு பாகத்தையும் வேலை பயிலுனரோடு மதிப்பிடவும்* - சிறிது நேரம் செலவழித்து, பயிற்சியின் ஒவ்வொரு பாகத்தையும் வேலை பயிலுனரோடு மதிப்பிடவும். சாதகமானவை மற்றும் எதிர்மாரானவை பட்டியல் எழுதவும். அடுத்த முறை எவ்வாறு மேம்படுத்துவது என்று திட்டம் இடு.
- *சாத்தியம் உள்ள வேலை பயிலுனர்களோடு நீங்கள் எதிர்காலத்தில் செய்யும் பயிற்சியில் உதவி செய்ய கேட்டுக்கொள்ளவும்* - இரண்டு அல்லது மூன்று வேலை பயிலுனர்களோடு பேசி, எதிர்கால பயிற்சிகளில் உதவ கேட்டுக்கொள்ளும்.
- *அடுத்த முறை பங்கேற்பாளர்கள் தங்களது நண்பர்களை அழைத்து வருமாறு ஊக்குவியுங்கள்.* - அடுத்த முறை பங்கேற்பாளர்கள் தங்களது நண்பர்களை அழைத்து வருமாறு அவர்களை ஊக்குவியுங்கள். இப்படி செய்தால் பயிற்சி பெரும் தலைவர்களின் எண்ணிக்கை பெருகும்.

# பின் இணைப்பு இ

## மொழிபெயர்ப்பாளர் குறிப்பு

ஆண்டவர் வழிநடத்துவது போல பலி மொழிகளில் மொழ் பெயர்ப்பு செய்ய ஆசிரியர் அனுமதிக்கிறார். *இயேசுவை பின்பற்று பயிற்சி* நூல்களை மொழிபெயர்க்கும் போது கீழ்கண்ட வழிகாட்டுகளை கடைபிடிக்கவும்.

- மொழி பெயர்ப்பை துவங்குவதற்கு முன், *இயேசுவை பின்பற்று பயிற்சி* புத்தகங்களினால் பலமுறை பயிற்சி அளிக்க பரிந்துரைக்கிறோம். மொழி பெயர்ப்பு செய்யும் போது, அதன் அர்த்தம் வெளிவர வேண்டும், வார்த்தைக்கு வார்த்தை மொழி பெயர்ப்பு அல்ல. உதாரணத்திற்கு, "ஆவியில் நடப்பது" என்பதற்கு உங்கள் மொழியில் "ஆவியில் வாழ்வது" என்று மொழி பெயர்க்கும், அப்போது "ஆவியில் வாழ்வது" என்பதை உபயோகியுங்கள். தேவைக்கேற்ப கை செயல்களை எழுதுங்கள்.
- மொழிபெயர்ப்பு பொதுவான பாஷையில் இருக்க வேண்டும், கூடுமானவரை "மத பாஷையில்" இருக்க கூடாது.
- வேத வாக்கை குறிக்கும்போது, மக்கள் புரிந்து கொள்ளும் மொழிபெயர்ப்பை உபயோகிக்கவும். ஒரு மொழிபெயர்ப்பு மட்டும் தான் உள்ளது, அதுவும் புரிந்து கொள்வது கடினம் என்றால், புரியாத சில வார்த்தைகளை சாதாரணமாக எழுதவும்.
- இயேசுவின் எட்டு சாயல்களை குறிக்கும் போது, சாதகமான வார்த்தை உபயோகிக்கவும். பலமுறை பயிற்சி குழு எது "சரியான வார்த்தை" என்று ஆய்வு செய்வார்கள்.
- "புனிதர்" என்ற வார்த்தை ஒரு தெய்வீக மனிதனை உரைக்கும் வார்த்தையை எழுதவும். இயேசுவை விவரிக்க "புனிதர்" என்ற வார்த்தை போதுமானதில்லை அதனால் தான் உங்களை "தெய்வீகமான மனிதன்" என்று மொழிபெயர்க கூறுகிறோம்.
- "வேலையாள்" என்ற வார்த்தையை சாதகமானதாக மொழிபெயர்ப்பது என்பது கடினம், ஆனால் நீங்கள் அதை செய்ய வேண்டும்.

கவனமாக, கடினமாக உழைக்கும் ஒரு மனிதனை, பணிவான இதயம் உள்ள மனிதனை, மகிழ்வோடு மற்றவர்களை உதவும் மனிதனை குறிக்கும் வார்த்தையை தேர்ந்தெடுக்க வேண்டும். பல கலாச்சாரங்களில் மக்களுக்கு "வேலையாளின் இருதயத்தை" பற்றி தெரியும்.

- ஜார்ஜ் பட்டர்சன் எழுதிய "பயிற்சி அளி, மற்றும் பெருக்கு" என்ற புத்தகத்திலிருந்து பல பயிற்சி திறன்களை கடைபிடித்திருக்கிறோம். நீங்களும் இவற்றை உங்களது கலாச்சாரங்களில் உங்களது மக்கள் குழுக்களில் உபயோகிக்கலாம்.
- நீங்கள் செய்யும் பணியை பற்றி கேட்க நாங்கள் விரும்புவோம். உதவி தேவை என்றாலும் எங்களை அணுகவும்.
- இயேசுவை பலர் தொடர எங்களை தொடர்பு கொள்ள வேண்டிய மின் அஞ்சல் விலாசம், *lanfam@FollowJesusTraining.com.*

# பின் இணைப்பு ஈ


## வளம்:

இந்த இணைத்தளத்தில் இயேசுவை பின்பற்று பயிற்சிக்கு நீங்கள் மிகுந்த வளங்களை பெறலாம் *lanfam@FollowJesusTraining.com.*

அதில் உள்ளவை:

1. ஆசிரியரிடம் இருந்து கட்டுரைகள், உள்ளுனர்வுகள்.
2. தீவிரமான தலைவர்களை உருவாக்குவதில் எல்லா கை செய்கைகளின் நிகழ்படங்கள்.
3. தீவிரமான தலைவர்களை உருவாக்குவதலின் மொழிபெயர்ப்புகள். மொழிபெயர்ப்புகளின் தரம் மாறுபடலாம் ஆகயால், ஊரில் அல்லது தேசத்தில் உள்ள விசுவாசிகளோடு கலந்துரையாடிய பிறகு உபயோகியுங்கள்.

இப்போதைய திட்டப்பணிகளை பற்றி தகவல் வேண்டும் என்றால் எங்களை இந்த விலாசத்தில் தொடர்பு கொள்ளுங்கள்: *lanfam@FollowJesusTraining.com.*


My Jesus Plan
How we will go
What we will do
Where we will go
Who will go
Now
Population–
Believers –
Churches–
Vision
Population–
Believers –
Churches–